Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

C.L Dental & Optical Services

பல் மூக்குக் கண்ணாடியகம்



(C/1487)

K.C.Jude, Proprietor T.P - 0776176737

No.58, Clock Tower Road, Jaffna. T.P - 0212228893

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 03 புதன்கிழமை (16.05.2012) பக்கங்கள் 20 ஓசை - 228





அளவுக்கு அதிகமான உற்பத்தி 16



கதிர்காமத்திற்கு யாத்திரை 04



காதல் சட்டவிரோதம் 08



காதல் மன்னன் 11



சூடுபிடிக்கும் மாம்பழ வியாபாரம் 15



# ஆவணங்களை திரித்தும் மறைத்தும் அவதூறு பரப்புகிறது 'உதயன்'!

## ஆதாரங்களுடன் இன்னுமொரு அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா!



(நமது நிருபர்)

ஆவணங்களை திரித்தும் மறைத்தும் செய்திகளை வெளியிட்டு அவதூறு பரப்புகிறது 'உதயன்' பத்திரிகை என ஆதாரங்களை சமர்ப்பித்து இன்னுமொரு அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. 'உதயன்' பத்திரிகை உரிமையாளர் சரவணபவனிற்கும், அதன் பிரதம ஆசிரியர் கானமயில்நாதனிற்கும் எதிராக யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், ஆவணங்களை திரித்தும், மறைத்தும் திட்டமிட்டு செய்திகளை வெளியிட்டு தனக்கு அவதூறு செய்தமைக்காக ஆயிரம் கோடி ரூபா நட்டஈடு கோரியுள்ளார் அமைச்சர்.

ஏற்கனவே கடந்த வருட இறுதியில் 'உதயன்' பத்திரிகை உரிமையாளருக்கும், அதன் ஆசிரியருக்கும் எதிராகத் தொடரப்பட்ட அவதூறு (19) ஆம் பக்கம் பார்க்க

# பரிந்துரைகளுக்கு ஏற்ப விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய முதற்கட்ட விசாரணைகளை அரசு ஆரம்பித்துள்ளது. யுத்த காலத்தில் இடம்பெற்ற பொலிஸ் திணைக்களத்துடன் தொடர்புடைய சம்பவங்கள் குறித்து நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை குறித்தே முதற்கட்டமாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிக்கிறது. வடக்கு, கிழக்கில மட்டுமல்லாது நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இடம்பெற்றதாகக் கூறப்படும் பல சம்பங்கள் குறித்து நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இவற்றில் முன்னுரிமை அடிப்படையில் சில சம்பவங்கள் குறித்தே இந்த முதற்கட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் குறித்த விசாரணைகளைஆரம்பித்து (19) ஆம் பக்கம் பார்க்க

## பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு முன்னுரிமை யாருக்கு?

பயிற்சிப் பட்டதாரிகளுக்கு, அரச சேவையில் நிரந்தர நியமனம் வழங்கும் போது, 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் பட்டப்படிப்பினை நிறைவு செய்தவர்களுக்கு முதற்கட்டமாக நியமனங்கள் வழங்கப்படவுள்ளது. இந்த விடயம் தொடர்பாக மாவட்ட செயலாளர்களுடன் கலந்துரையாடியுள்ளதாக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் பிரதியமைச்சர் டப்ளியூ.டி.ஜே.செனவிரத்ன தெரிவிக்கின்றார். இதன்படி 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் (19) ஆம் பக்கம் பார்க்க

# கண்ணிவெடி அகற்றும் ஊழியர்கள் போராட்டம்



டெனிஸ் மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் நிறுவனத்தின் யாழ். அலுவலகத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்த பணியாளர்கள் தம்மைப் பணி நீக்கம் செய்தமையை ஆட்சேபித்து நேற்று முற்பகல் நிறுவனத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இரண்டு வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணியாளர்களாக நியமிக்கப்பட்டிருந்த இந்நிறுவனத்தின் 180 பணியாளர்கள் அவர்களது ஒப்பந்த காலம் முடிவடையும் முன்பாக நேற்று முதல் பணியில் இருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர். இதனை அடுத்து நிறுவனம் தமக்கு இழைத்திருக்கும் அநீதிக்காக நேற்றுக் காலை நிறுவனத்தில் (19) ஆம் பக்கம் பார்க்க

# இந்திய ஆசிரியர்கள் இலங்கைக்கு; வேலையற்ற பட்டதாரிகள் கொதிப்பு

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆசிரியர்களை அழைத்து வர அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட நாட்டின் ஏனைய பகுதிகளில் தமிழ் பட்டதாரிகள் வேலையற்று இருக்கும் நிலையில் இந்தியாவில் இருந்து ஆசிரியர்கள் வரவழைக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என அந்தச் சங்கத்தின் ஏற்பாட்டாளர் தம்பிக்க முனசிங்க தெரிவித்துள்ளார். இது குறித்து (19) ஆம் பக்கம் பார்க்க


# டக்ளஸ் தேவானந்தாவுடன் பிரான்ஸ் தூதுவர் சந்திப்பு



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். கொழும்பில் அமைந்துள்ள அமைச்சரின் இல்லத்தில் நேற்றையதினம் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. நட்பு ரீதியாக இடம்பெற்ற இச்சந்திப்பின் போது அமைச்சரும் பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்ரின் றொபின்சனும் பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடினர்.

# எப்போது ஊருக்குப் போவோம் நீண்டநாள் கனவு நனவாகியது

## இத்தாவிலில் நேற்று மீள்குடியேற்றம்



சொர்க்கலோகமாகக் கருதும் எமது சொந்தக் கிராமத்திற்கு மீண்டும் நாங்கள் அனைவரும் வந்து குடியமர்ந்தமை எமக்கு பெரும் மகிழ்ச்சியைத் தந்துள்ளது என்று இத்தாவில் பகுதியின் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தெரிவித்தார். எமது நீண்ட காலக்கனவு இன்று நனவாகியிருக்கிறது. எமது கிராமத்தைச் சேர்ந்த வயோதிபர்கள் பலர் தாம் மரணமடைவதற்கு முன்னர் தமது சொந்த இடங்களுக்குச் செல்லமுடியுமா? என்று ஏங்கிக்கொண்டிருந்தனர். இப்போது அவர்களின் ஆசை நிறைவேறியிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவின் இத்தாவில், வேம்பொடுகேணி கிராமங்களின் முதற்கட்ட ஒருபகுதி மீள்குடியேற்ற ஆரம்பநிகழ்வு நேற்று இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே (19) ஆம் பக்கம் பார்க்க


# பரந்தன் படுகொலை விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

பரந்தனில் கனேடிய பிரஜை யொருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிடுகின்றது. இதற்காக வட மாகாண சிரேஷ்ட பிரதிப், பொலிஸ் மா அதிபரின் கண்காணிப்பின் கீழ் நான்கு பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

தமது நாட்டில் குடியுரிமை பெற்ற குறித்தநபரின் கொலை தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளுமாறு கனடா அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப் பிட்டுள்ளார்.

குறித்த குழுக்கள், இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட பல்வேறு தரப்பினரிடம் விசாரணைகளை மேற்கொண்டு, வாக்குமூலம் பதிவுசெய்துள்ளதாகவும் அவர் கூறினார். அத்துடன் சாட்சிகள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும், கொலை தொடர்பிலான தவல்களை விரைவில் கண்டறிய முடியும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், அஜித் ரோஹன மேலும் தெரிவித்தார்.



இருபாலை கிழக்கில் நான்கு மாத தென்னங்கன்று ஒன்றில் குரும்பைகள் தோன்றியுள்ளன. நிலத்தில் தேங்காய் ஒன்று புதைக்கப்பட்டு நான்கு மாதம் கழிந்த நிலையில் சிறியளவு வளர்ந்திருந்த போது அத்தென்னம்பிள்ளையில் இக்குரும்பைகள் அரும்பியுள்ளன. இருபாலை கிழக்கு, விதானையார் ஒழுங்கையிலுள்ள முருகன் நவரத்தினம் என்பவருடைய வீட்டிலேயே இவ் அதிசயம் நிகழ்ந்துள்ளது. இதனைப் பொதுமக்கள் பலரும் பார்த்துச் செல்கின்றனர். (137)

## புதிய அரச அதிபர் இன்று பொறுப்பேற்கிறார்



யாழ். அரச அதிபராக நியமிக்கப்பட்டிருக்கும் சுந்தரம் அருமைநாயகம் இன்று முற்பகல் யாழ். செயலகத்தில் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள தெரிவித்துள்ளன.

கடந்த புதன்கிழமை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் யாழ். அரச அதிபராக இருந்த திருமதி இமெல்டா சுகுமாருக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டு ஜனாதிபதி செயலகத்திற்கு மாற்றம் வழங்கப் பட்டிருந்தது. அவரது இடத்திற்கு மட்டக்களப்பு அரச அதிபராக இருந்த சுந்தரம் அருமைநாயகம் நியமிக்கப்பட்டிருந்தார்.

எனினும் அவர் கடந்த 14 ஆம் திகதி யாழ். செயலகத்தில் தமது கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப் பட்டது. எனினும் அவர் இன்று தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (பா)

## படை வீரரை பாம்பு தீண்டியது

(யாழ்ப்பாணம்)

நாகபாம்பு தீண்டிய இராணுவ வீரர் யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கொழும்புத்துறை 512 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த நந்தகுமார (வயது - 29) என்ற இராணுவ வீரரே சிகிச்சை பெற்று வருகிறார். (எஸ்)

## வாழ்வாதார உதவி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வல்லிபுனம் கிராம மாதர் அபிவிருத்திச் சங்கத்திற்கு ஐ.ஓ.எம். நிறுவனம் நிதியுதவி வழங்கியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் வல்லிபுனம் பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து சங்கத்திற்கு மேற்படி நிறுவனம் 4 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாவை வழங்கியது.

இக்கிராமத்தில் வாழ்வாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் வாழும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் மற்றும் தொழில் வாய்ப்பின்றி இருக்கும் பெண்கள் ஆகியோரின் வாழ்வாதாரத்தை மேற்கொள்ளும் வகையில் இவ் உதவி வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்நிதியுதவி கிராம பெண்களுக்கு தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

## சவர்க்கார உற்பத்தி நிறுவனத்தில் அனர்த்தம்

கொஸ்வத்தை, ஹால்த்ண்டுவன கிராமத்தில் அமைந்துள்ள சவர்க்கார உற்பத்தி நிறுவனமொன்றின் வாயுக் குழாயொன்றில் ஏற்பட்ட கசிவு காரணமாக மூச்சுத்திணறலுக்கு உள்ளான 18 ஊழியர்கள் தங்கொட்டுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மூச்சுத்திணறலுக்கு உள்ளானவர்களில் 17 பேர் பெண்களாவர். இவர்களில் நால்வர் மேலதிக சிகிச்சைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

## இந்து ஆலயத்தை தகர்க்கும் முயற்சி கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் மேற்கு கொட்டியாவத்தை பகுதியில் நூறு ஆண்டுகளுக்கு மேலாக அப்பகுதி மக்களால் போற்றிப் பாதுகாக்கப் பட்ட சிறு அம்மன் கோவில் ஒன்று இன்னொரு மத நம்பிக்கை உடையவர்களால் இடித்து தரைமட்டமாக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி அப்பகுதி மக்களால் தடுக் கப்பட்டது.

சென்னையில் இருந்து வந்த போதகர் தன்னுடைய விசுவாசிகளுக்கு குறித்த அம்மன் ஊரில் இருப்பது தீங்காக அமையும், இதனை அகற்றினால் ஊருக்கு நன்மை உண்டாகும் என ஆலயம் பற்றி அபிப்பிராயத்தை ஏற்படுத்தியிருந்தார். இதனை நம்பிய அவருடைய விசுவாசிகள் சுமார் 10 பேர் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் அவ்வாலயத்திற்குள் புகுந்து மூல விக்கிரகம் மற்றும் அங்கு சுவர்களில் கொழுவப்பட்டிருந்த படங்கள் என்பவற்றை அடித்து நொறுக்கினர். குறித்த கோவிலை இடிப்பதற்கு தேவையான கனரக வாகனம் ஒன்றையும் கொண்டு வந்திருந்தனர்.



இச்சம்பவத்தை அறிந்த மக்கள், கிராம சேவையாளர், பிரதேச செயலக இந்து விவகார அதிகாரிக்கும் குறித்த சம்பவம் தொடர்பில் முறையிட்டனர். அவாகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, கோவிலை இடிக்கும் செயலை தடுத்து நிறுத்தினர். மேலும் பெயர்க்கப்பட்ட விக்கிரகம் மற்றும் உடைக்கப்பட்ட படங்களை உரிய இடத்தில் வைக்கும்படி கூறிச்சென்றனர்.

இதேவேளை சில இந்து அடியார்கள் உணர்ச்சி வசப்பட்டு ஊரில் உள்ள சில தேவாலயங்களை இடிப்பதற்கு முயற்சி செய்தனர். ஆனால் பெரியோர்களின் தலையீட்டால் தடுக்கப் பட்டது. இவ்வாலயத்திற்கான நட்ட ஈட்டினைப் பெற்றுத்தர ஏற்பாடு செய்ய வேண்டுமென ஊர் மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர்.

இவ்வாறான சம்பவங்கள் திட்டமிட்ட வகையில் மக்கள் மத்தியில் மத ரீதியிலான உணர்வுகளைக் கிளறி சமூகத்தில் நிலவும் நிலைமைகளை குழப்புவதறகான முயற்சிகள் என ஊர் இளைஞர்கள் சந்தேகம் தெரிவித்தனர்.

## கைத்தொலைபேசி திருட்டு சூத்திரதாரிக்கு சிறை

பிரதேச செயலர் ஒருவரின் கைத்தொலைபேசி காணாமற் போனது சம்பந்தமாக பொலிஸார் இளைஞர் ஒருவரை கைது செய்து யாழ். நீதிமன்றில் ஆஜர் படுத்தியபோது அவரை 10 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்வதற்கு நீதவான் மா.கணேசராஜா நேற்று உத்தரவிட்டார்.

காரைநகர் பிரதேச செயலரின் தொலைபேசி காணாமற் போயிருந்தது. இது பற்றி அவர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தார். பொலிஸார் விசாரணைகளை முடுக்கி சகல தொலைத்தொடர்பு நிலையங்களுக்கும் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் பொலிஸாருக்கு தொலைத்தொடர்பு நிலையமொன்றிலிருந்து அழைப்பு ஒன்று கிடைத்தது. காணாமற் போன கைத்தொலைபேசியிலிருந்து வேறொரு இலக்கத்திற்குரிய தொலைபேசி ஒன்றுக்கு மீள் நிரப்பு செய்யப்பட்டிருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இலக்கத்தை வைத்து பொலிஸார் காணாமற்போன தொலைபேசியை வைத்திருந்தவரைக் கண்டுபிடித்து கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

66 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நீதவான் வழக்கு விசாரணையை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (137)

## விசேட அபிஷேகம்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை ஸ்ரீவரத விக்கின விநாயகர் சம்பந்தப் பிள்ளையார் ஆலயத்தில் வியாழ மாற்றத்தை முன்னிட்டு நாளை மாலை 6.30 மணிக்கு தெட்சணாமூர்த்திக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளது. (104)

## மாதாந்த கொடுப்பனவு

(சாவகச்சேரி)

ஊனமுற்றோர் மற்றும் வசதி குறைந்தோர்களில் வரணி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள் தற்போது உப தபாலகங்களில் வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை இக்கொடுப்பனவுகளைப் பெறாதவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு உப தபாலதிபர் அறிவித்துள்ளார். (11)


## திருவையாறுக்கு மின்சாரம் எப்போது?

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் திருவையாறு கிராமத்திலுள்ள மக்கள் இதுவரை மின்சார விநியோகம் வழங்கப்படாததை அடுத்து மின்சார சபையிடம் இன்று முறைப்பாடு செய்யவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இக்கிராம மக்கள் ஒன்றுகூடி மின்சார சபையிடம் இன்று மனுவொன்றைக் கையளிக்கவுள்ளனர்.

## தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கு




(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில்நுட்ப விற்பன்னர்களின் ஒன்றுகூடல் ஒன்றை யாழ். ஐரி ஹப் (Yarl IT Hub), யாழ். பல்கலைக் கழக கணினிச் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

இந்நிகழ்வு நாளை பிற்பகல் 2.00 மணிமுதல் 5.00 மணிவரை யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது .

இதில் சிரேஷ்ட கணினி தொழில்நுட்பவியலாளர்கள், சிரேஷ்ட மென்பொருள் கட்டமைப்பாளர்கள், கணினித்துறையினரின் கனவுத் தளமான சிலிக்கன் பள்ளத்தாக்கிலிருந்து கணினி வன்பொருள் வல்லுனர்கள், சிரேஷ்ட கணினி விரிவிரையாளர்கள் எனப் பலர் கலந்து தமது அனுபவங்களைப் பகிரவுள்ளனர். அத்துடன் மாணவர்களின் அமர்வுகளும் இடம்பெறும்.

ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். பதிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் :http://yarlithub.org/event.php

**நண்பரின் சட்டைப் பையில் துவாரம் இருக்கும் போது அதில் நாணயங்களைப் போடுவதன் மூலம் அவருக்கு உதவிசெய்ய முடியாது** - டக்ளஸ் ஹட் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## மீண்டும் தொடங்கும் மிரட்டல்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனநாயகத்துக்கும் அல்லது அவர்களே வாயோரியாகச் சொல்லிவரும் அகிம்சைக்கும் அவர்களுக்குமிடையிலான தூரம் எவ்வளவு என்பதை யாழ் நகரில் நடந்த இரண்டு நிகழ்ச்சிகள் வெட்டவெளிச்சமாக்கியுள்ளன.

ஒன்று, 'ஈழத்து காந்தி' தந்தை செல்வாவின் நினைவுதினக் கூட்டத்திற்கு வந்திருந்த மட்டக்களப்பின் முன்னாள் தமிழரசுக் கட்சித் தூண்களில் ஒருவரான செல்லையா ராசதுரை அவர்களை துரோகி என்று விரட்டியடித்தது. மற்றது, அமெரிக்க அனுசரணை யோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லூரில் நடத்திய கூட்டத்தில், பார்வையாளர் கேள்வி நேரத்தின்போது கேள்வி கேட்ட பொதுமகன் ஒருவரை, மைக்கைப் பிடுங்கி அடித்து விரட்டியது.

செல்லையா ராசதுரை அவர்கள் கிழக்கிலே தமிழரசுக் கட்சியை உருவாக்கி வளர்ப்பதில் முன்னின்றவர். செல்வநாயகம் அவர்களின் வடக்குத் தளபதி அமிர்தலிங்கம் என்றால் கிழக்குத் தளபதி ராசதுரை என்றே அன்றைய தமிழரசுக் கட்சியினரால் கொண்டாடப்பட்டவர்.

கொடுமை என்னவென்றால், செல்வாவின் நினைவுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஒருவர், சாதிப் பெயர்களை எல்லாம் இழுத்து அத்தனை பேர் முன்னிலையில் அவமானப்படுத்தித் துரத்தியதை தமிழரசுக் கட்சியினர் அங்கீகரித்து நின்றமைதான்.

சம்பந்தன் கொடி ஏந்தியதற்குக் கூட மன்னிப்புக் கேட்ட தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை, தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் நடந்த வன்முறைக்கு மன்னிப்பும் கேட்கவில்லை; மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று இன்னும் அவருக்குத் தோன்றக் கூட இல்லை. வயதில் பெரியவராக இருந்தாலும் தம் கருத்திற்கு ஒத்துவரவில்லையென்றால் அடித்து விரட்டுவதும் துரோகி என்று திட்டுவதும் இரத்தத்தில் ஊறிவிட்ட பழக்கங்களாகவே ஆகி, எல்லோரும் அலட்சியமாகச் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

தமிழரசுக் கட்சி செயலாளரின் சிந்தனை, திக்குமுக்காட்டம் எல்லாம் சம்பந்தனுக்குப் பிறகு சுரேஷுக்குத் தலைமை போய் விடுமோ என்கிற பதற்றத்திலேயே அல்லாடுவதாய்த் தெரிகிறது. தன்னை அடுத்த தலைவராகக் குறிகாட்டிக் கூடப் பேசுகிறாரில்லை என்ற கோபத்தில், 'மன்னிப்பு' நாடகத்தின் மூலம் சம்பந்தரையே தமிழ்த் தேசியத் துரோகியாக்கி விடலாம் என்று முயல்கிறவருக்கு கிழக்கூரான் ராசதுரையைப் பொறுத்துக் கொள்வது எம்மட்டாம்?

பழையபடி துரோகிகளை அறிவிப்பதும், அவர்கள் மீது வன்முறையை ஏவி விடுவதும், அதன் மூலம் அரசியல் வேறுபாட்டாளர்களை அழித்தொழிப்பதுமான பழைய 'போம்'(form)க்கு திரும்பவும் வருகிறார்கள் என்பது தெரிகிறது. இடைக்காலத்தில் அடக்கி வைத்திருந்த அந்தப் பழைய குணங்களை மீண்டும் கைமாற்றி எடுத்துக்கொண்டு விட்டதை அண்மையில் நடந்த இந்த சம்பவங்கள் உணர்த்துகின்றன.

நல்லூர்க் கூட்டத்தில், "வெள்ளைக்காரர்களை வைத்துக் கூட்டம் நடத்துவதை விட்டுவிட்டு, நாட்டின் தலைவரான மகிந்த ராஜபக்ஷவுடன் ஏன் போய்ப் பேசக்கூடாது" என்று கேட்ட அரச அலுவலர் ஒருவரைத் தாக்கியிருக்கும் நடவடிக்கையானது மிகப் பாரதூரமானது.

ஜனநாயக நடைமுறைகளுக்கு விரோதமாக – இனத்துக்கு ஒரே கட்சி, தனிப்பெருந் தலைமை, ஏகப்பிரதிநிதித்துவம் என்பதையெல்லாம் தமிழ் மக்களிடம் வலியுறுத்திக் கொண்டிருப்பது போல, மாற்றுக் குரல்களைச் சகிக்காமல் அடக்குவதும் அடித்து மிரட்டுவதுமான சூழலையும் திரும்பவும் ஏற்படுத்த எத்தனிப்பதாகவே தோன்றுகிறது.

பழைய ஆதிக்க, அடாவடி, அசிங்க வரலாற்றைத் திரும்பவும் மறுசுழற்சிக்குக் கொண்டுவர முயல்வதைக் குறித்து தமிழ் மக்கள் விழிப்படைந்து கொள்ள வேண்டும். - **ஆசிரியர்**

# இலங்கையில் போர் நீடிக்க முழுமுதற் காரணம் இந்தியா

## குற்றம் சாட்டுகிறார் லலித் வீரதுங்க

(கொழும்பு)

கொழும்பில் 1980 களின் நடுப்பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குத் திட்டமிடுதல் மற்றும் நிறைவேற்றுதலில் இந்தியப் புலனாய்வு அமைப்புகள் வலுவாகப் பங்களித்திருந்ததாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க குற்றம்சாட்டியுள்ளார்.

பத்தரமுல்ல வேட்டர்எட்ஜ் விடுதியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற "கோத்தாவின் போர் நூல்" வெளியட்டு விழாவிலேயே அவர் இவ்வாறு குறிபபிட்டுள்ளார்.

இலங்கையில் இந்தியாவின் பங்கு தொடர்பாக தீவிரமான விவாதம் நடத்தப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூதுவர் கே. அசோக் கே காந்தாவும் கலந்து கொண்ட இந்நிகழ்வில், அவர் மேலும் தெரிவிக்கையில், 2009 ஏப்ரல் மாதம் இந்தியா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் போரை நிறுத்துமாறு ஜனாதிபதி மகிந்தவுக்கு கடுமையான அழுத்தங்களைக் கொடுத்தன. ஆனால் அவர் வெளிநாட்டு அழுத்தங்களைக் கண்டுகொள்ளவில்லை.

இரகசியமான சந்திப்புக்கள் நடைபெற்றன. இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கு தமிழ் நாட்டில் வாக்களிப்பு இடம்பெறுவதற்கு முன்னர், 2009 ஏப்ரலில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே நாராயணன் தலைமையிலான குழு இலங்கை வந்தது.

வெவ்வேறு காரணங்களைக் கூறிக் கொண்டு பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் இலங்கை வந்தனர். இவர்களின் எண்ணம் எல்லாமே போரை நிறுத்துவதாகவே இருந்தது.

வடமராட்சி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது, இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி அந்த நடவடிக்கைகளுக்கெதிராக கடுமையான அறிக்கை வெளியிட்டார். இலங்கை அப்போதே தீவிரவாதத்தை ஒழித்திருக்க முடியும்.

ஆனால் இந்தியத் தூதுவராக இருந்த கே.என்.டிக்சித் வலுவான தலையீடு செய்தார். அந்த நடவடிக்கை தொடர்ந்திருந்தால் இலங்கை இரண்டு பத்தாண்டுகளுக்கு முன்னரே போரை முடிவுக்கு கொண்டு வந்திருககும்.

இராணுவ நடவடிக்கை தொடர்ந்தால் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தும் என அவர் எச்சரித்திருந்தார். அதற்கு ஜே. ஆர் ஜெயவர்த்தனா எதிர்பாராத விளைவுகள் என்றால் என்னவென்று கேட்டபோது, இலங்கையைத்துண்டாடுவதற்கு இந்தியா விடுதலைப்புலிகளுக்கு உதவியளிக்குமென கே.என்.டிக்சித் பதிலளித்திருந்தார் என்று லலித் வீரதுங்க குறிப்பிட்டார்.

## கிராம அலுவலர் நியமனம் வயது எல்லை அதிகரிப்பு

(கொழும்பு)

கிராம சேவையாளர் பதவிக்கு புதியவர்களை நியமிக்கும் போது வயது மட்டங்களை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பல்வேறு தரப்பினராலும் விடுக்கப்பட்ட கோரிக்கைக்ளை கவனத்தில் கொண்டே கிராமசேவையாளர்களின் வயது மட்டங்களை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

தற்போது கிராம சேவையாளர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான வயதெல்லை 30 ஆகும். அதனை, 35 வயதாக அதிகரிப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் மாதம் கிராம சேவையாளர் 2000 மற்றும் 2500 என்ற அடிப்படையில் சேவைக்காக இணைத்துக் கொள்ளப் படவுள்ளனர். இதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

## "வலை உணங்கு குரு மணல்" நூல் வெளியீட்டு விழா

(குருநகர்)

மு.புஸ்பராஜனின் 'வலை உணங்கு குருமணல்' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக பகுதிநேர விரிவுரையாளர் அருள் கலாநிதி யோ.எ.ஜெயசீலன் அடிகள் தலைமையில் நடைபெறும் இவ் விழாவை குருநகர் இளைஞர் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

ஆசியுரையை பங்குத்தந்தை ஆர்.சி. எக்ஸ் நேசராஜா அடிகளாரும், வெளியீட்டுரையை எழுத்தாளர் அ.யேசுராசாவும், மதிப்புரைகளை யோ.யோண்சன் ராஜ்குமாரும், வி.ஜே.கொன்ஸ்ரன்ரையினும் நிகழ்த்துவர். வரவேற்புரையை கி.மா.நெல்சனும், நன்றியுரையை இ.செபஸ்தியாம் பிள்ளையும் ஆற்றுவர். (68)

## முறைப்பாட்டுப் பிரதியை உடன் பெற நடவடிக்கை

(கொழும்பு)

பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளை செய்யும்போது, அந்த முறைப்பாடுகளுக்கான பிரதியை அவ்விடத்திலேயே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், வாகன அனுமதிப் பத்திரம் ஆகியன காணாமற்போதல் மற்றும் சிறிய வாகன விபத்துக்கள் தொடர்பிலான முறைப்பாடுகளை மேற்கொள்ளும் போது, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டின் பிரதியை பெற்றுக்கொள்ள முடியும என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார். அதற்காக அரசாங்கத்திற்கு 25 ரூபா செலுத்த வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

## 2009 டிசம்பருக்கு முன்னர் பட்டம் பெற்றால் நியமனம்

(கொழும்பு)

பயிற்சிப் பட்டதாரிகளுக்கு, அரச சேவையில் நிரந்தர நியமனம் வழங்கும் போது, 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் பட்டப் படிப்பினை நிறைவு செய்தவர்களுக்கு முதற்கட்டமாக நியமனங்கள் வழங்கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மாவட்ட செயலாளர்களுடன் கலந்துரையாடியுள்ளதாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரத்ன தெரிவித்தார்.

இதன்படி 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் பட்டப்படிப்பினை நிறைவு செய்த பட்டதாரிகளுக்கு, அரச சேவையில் எதிர்வரும் இரண்டு மாதங்களில் நிரந்தர நியமனங்கள் வழங்கத் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது அரச சேவையிலுள்ள அனைத்துப் பட்டதாரிகளும் பல்வேறு கட்டடங்களின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் என அவர் சுட்டிக்காட்டினார்.

## அரச, அரச சார்பற்ற ஊழியர்களுக்கு பருத்தித்துறையிலிருந்து பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)


பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு 750 மார்க்கமாக பயணிக்கும் அரச, அரச சார்பற்ற ஊழியர்கள் பல வருடங்களாக பல சிரமத்தின் மத்தியில் பயணித்து தமது கடமைக்கு சென்று வருகின்றனர்.

இந்த அசௌகரியங்களை வடபிராந்திய போக்குவரத்து சபை முகாமையாளருக்கு அரச அரசசார்பற்ற உத்தியோகத்தர்கள் நேற்றைய தினம் தெரியப்படுத்தினர்.

இதன் பிரகாரம் வடபிராந்திய முகாமையாளர் பருத்தித்துறை சாலை அத்தியட்சகரிடம் தொடர்பு கொண்டு நாளை தொடக்கம்இவர்களுக்கான பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு பணித்ததின் பிரகாரம் இச்சேவை நாளை தொடக்கம் காலை 7.00 மணிக்கு பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்டு யாழ்.மாவட்டசெயலகம் ஊடாக யாழ்பேருந்து நிலையத்தை காலை 8.30 மணிக்கு சென்றடையும்.

அதே வேளை மாலை 4.15 மணிக்கு யாழ் பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்டு யாழ் மாவட்ட செயலகம் (கச்சேரி) ஊடாக 5.30 மணிக்கு பருத்தித்துறை பேருந்து நிலையத்தை சென்றடையும். இதில் அரச, அரசசார்பற்ற மற்றும் நிறுவன ஊழியர்கள் மாத்திரம் பயணம் செய்ய முடியும்

# கிளிநொச்சி பொதுச் சந்தையின் கட்டுமானப் பணிகள் குறித்து ஆராய்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி டிப்போச் சந்திக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் பொது சந்தைக்கு ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்டு புனர்நிர்மானப் பணிகளைப் பார்வையிட்டுள்ளார்.

இதன்போது சந்தை வர்த்தகர்களின் நலன் கருதி சந்தையினை விரைவில் புதிய இடத்திற்கு கொண்டுவர வேண்டிய தேவை இருப்பதனால் கட்டுமானப்பணிகளை விரைவுபடுத்துமாறு கேட்டுக்கொண்டதோடு புதிய சந்தையில் வர்த்தகர்களுக்கு வியாபார நிலையங்களை வழங்குவது தொடர்பில் சந்தை வர்த்தக சங்கமே தீர்மானிக்கும் எனவும், அதில் யாரும் எந்த தலையீடுகளையும் மேற்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

அத்தோடு இரண்டாம் கட்ட கட்டுமான பணிகளையும் விரைவில் மேற்கொள்வது தொடர்பாகவும் அதிகாரிகளுடன் ஆராய்ந்தார்

இந்த விஜயத்தின் போது கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர்களான கிருஸ்ணசாமி இராமச்சந்திரன், கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொ.ஜக்சீல், ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், கரைச்சி பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், கிளிநொச்சி சந்தை வர்த்தக சங்கத் தலைவர் இரத்தினமணி மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காமத்திற்குப் பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வ சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காம உற்சவத்திற்கான பாத யாத்திரை இம்முறையும் இடம்பெறவுள்ளது. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து காரைதீவுவேல்சாமி தலைமையில் பாதயாத்திரை குழு புறப்படவுள்ளது. இரு மாதங்கள் இவர்கள் கால்நடையாக பயணத்தை மேற்கொண்டு யூலை 18ஆம் திகதி கதிர்காமத்தைச் சென்றடையவுள்ளனர்.

செல்வச்சந்நிதியிலிருந்து புறப்படும் இவர்கள் அச்சுவேலி, கொடிகாமம், பரந்தன், ஊடாக முல்லைத்தீவு வற்றாப்பளையை இம்மாதம் 30ஆம் திகதி சென்றடையவுள்ளனர். அங்கு வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கலை முடித்துக்கொண்டு புறப்படும் இவர்கள் தண்ணீர் ஊற்று, குமுழமுனை, திரியாய், குச்சவெளி, நிலாவெளி ஊடாக திருகோணமலையைச் சென்றடைவர்.

அங்கிருந்து மூதூர், கிளிவெட்டி, ஊடாக வெருகல் முருகன் கோவிலை சென்றடைவார்கள். அங்கிருந்து வாகரை ஊடாக யூன் 22ஆம் திகதி மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தைச் சென்றடைவார்கள். அங்கிருந்து களுவாஞ்சிக்குடி, காரைதீவு பாணமை ஊடாக யூலை 8 ஆம் திகதி உகந்தை முருகன் ஆலயத்தை சென்றடைவார்கள்.

அங்கிருந்து யால காட்டின் ஊடாக கானக பயணத்தை மேற்கொண்டு யூலை 18ஆம் திகதி கதிர்காமத்தைச் சென்றடைந்து கொடியேற்றத் திருவிழாவில் கலந்து கொள்வார்கள். கதிர்காம கந்தன் தீர்த்தோற்சவம் ஒகஸ்ட் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# மாவட்ட மட்ட தமிழ்த்தின போட்டி முடிவுகள்

(தெல்லிப்பளை)

மாவட்ட மட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ்த்தின எழுத்தாக்கப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு,

**ஆக்க எழுத்து பிரிவு - 1**

அ.வெற்றிதரன் - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி, இ.கிருபிகா - மிருசுவில் அ.த.க.பாடசாலை, க.கிறிஸ்ரினா - நல்லூர் செ[illegible]பெனடிக்ற் வித்தி.

**[illegible]ரை வரைதல் பிரிவு-1**

[illegible]தார்கன் - யாழ்.இந்துக் கல்லூரி, இ.ஜதுசா - சுதுமலை சின்மயபாரதி வித்தி, க.கோமஸ்ராஜ் - நெடுந்தீவு சீக்கிரியாம் பள்ளம் த.க.பா.

**பிரிவு - 3**

த.கேசிதா - உடுவில் மகளிர் கல்லூரி, யோ.கேசினி - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யோ.சுஜிந்தன் - வேலணை மேற்கு நடராசா வித்தி.

**கட்டுரை வரைதல் இலக்கியம்**

**பிரிவு - 1**

இ.சிந்துஜா - மீசாலை வீரசிங்கம் ம.வி, செ.சேந்தன் - யாழ்.இந்துக் கல்லூரி, ம.சங்கவி - வட்டு மத்திய கல்லூரி.

**தமிழியற் கட்டுரை**

**பிரிவு - 5**

க.கஜனா - சாவகச்சேரி மகளிர் கல்லூரி, பி.ஜோன்சியா - புங்குடுதீவு ம.வி, கே.கிருஷாந் - ஹாட்லிக் கல்லூரி.

**இலக்கணப் போட்டி**

**பிரிவு - 4**

கா.கீர்த்தனா - வடஇந்து மகளிர் கல்லூரி, சி.கார்த்திகா - சாவகச்சேரி மகளிர் கல்லூரி, இ.கீர்த தணி - கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி.

**இலக்கணப் போட்டி**

**பிரிவு - 5**

ப.சரண்யா - வட.இந்து மகளிா கல்லூரி, நா.சுஜீவன் - மீசாலை வீரசிங்கம் ம.வி, செ.சிவகுமார் - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி. *(தொடரும்....)* (44)

# செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய பாடசாலைகளில் தரம் 6, 7, 8, 9 இற்கு கர்நாடக சங்கீதம் மற்றும் நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் புதிய நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வு புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளதுடன், ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (109)

# மோசமான நிலையில் வீதி

பாசையூரில் உள்ள இரண்டாம், மூன்றாம் குறுக்கு வீதிகள் கடுமையாகச் சேதமடைந்து காணப்படுகிறது.

பல வருடங்களாகத் திருத்தம் செய்யப்படாமல் காணப்படும் இந்த வீதி, இன்னமும் செப்பனிடப்படாமல் காணப்படுகிறது.

ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த வீதியைத் திருத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் கோருகின்றனர். (21)

# சிவில் பாதுகாப்புக் குழுக்களை வலுப்படுத்தும் நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கான வருடாந்தக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இம்மாவட்டத்திலுள்ள 77 சிவில் பாதுகாப்புக் குழுக்களைச் சேர்ந்த தலைவர்கள், செயலாளர்கள், உப தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நீல்தளுவத்த தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பொதுமக்களுக்கு பெற்றுக் கொடுக்கக்கூடிய பொதுச் சேவைகள், பொலிஸார், சிவில் பாதுகாப்புக் குழுக்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், சிறுவர், பெண்கள் உரிமைகள், கசிப்பு உற்பத்தியை தடைசெய்தல், டெங்கு ஒழிப்பு போன்ற சமூக விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், விரிவாகவும் ஆராயப்பட்டது.

இதில் மதகுருமார்கள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர். (04)

# சிறுவர் துஷ்பிரயோகம்; விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்கும் வகையிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.உதவிப் பிரதேச செயலர் திருமதி சுலோஜினி குகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.பிரதேச செயலக கலாசாரப் பிரிவு நடாத்தும் இந்நிகழ்வில், பிரதம அதிதியாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில், ‘சிறுவர் துஷ்பிரயோகமும் யாழ்.கலாசாரமும்’ என்ற தலைப்பில் இரா.செல்வவடிவேல், ‘சிறுவர்களும் யாழ்ப்பாணக் கலாசாரமும்’ என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.குமரன், ‘சிறுவர் துஷ்பிரயோகமும் குடும்பமும்’ எனற தலைப்பில் அருட்பணி எஸ்.ஜே.இராசநாயகம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (105)

# கடலட்டை பிடிக்கும் தென்பகுதி மீனவர்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல கடற்படை முகாமை அண்டிய பகுதியில் தென்னிலங்கை மீனவர்களால் கடல் அட்டை பிடிக்கும் நடவடிக்கைகள் நாளாந்தம் இடம்பெற்று வருவதாக முல்லைத்தீவு மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடலட்டை பிடித்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ள நிலையில் முல்லைத்தீவு கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்களின் கடலட்டை பிடிக்கும் நடவடிக்கையால் தமது தொழில் வளம் பாதிக்கப்படுவதுடன், பொருளாதார ரீதியில் தாம் கஷ்டங்களுக்கு உள்ளாகி வருவதாக அம்மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இத்தென்னிலங்கை மீனவர்கள், குறித்த கடற்கரைப் பகுதியில் வாடியமைத்து கடலட்டை பிடிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (04)

# வவுனியாவில் நாய்களுக்கு கருத்தடை சத்திரசிகிச்சை



(வவுனியா)

வவுனியா நகரசபை வளாகத்தில் பெண் நாய்களுக்கு இலவச கருத்தடை சத்திரசிகிச்சை வவுனியா மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் விலங்கு விசர்நோய் தடுப்பு பிரிவினால் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3,000 நாய்களுக்கு இம்முறை கருத்தடை சத்திரசிகிச்சை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள நிலையில், முதற்கட்டமாக 1,000 பெண் நாய்களுக்கு இச்சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுவதாக விலங்கு விசர்நோய் தடுப்புப் பிரிவு பொதுச்சுகாதார பரிசோதகர் எஸ்.சிவகாந்தன் தெரிவித்தார். பெண் நாய்களுக்குக் கருத்தடை செய்வதன் ஊடாக தேவையற்ற நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்தி நீர்வெறுப்பு நோயின் தாக்கத்தை குறைக்க முடியும் எனவும் அவர் கூறினார்.

# மின்சார விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மகேந்திரபுரம் கிராமத்துக்கு அருகில் உள்ள சிறு கிராமமான புனிதபுரம் கிராமத்திற்கு மின்சார இணைப்பு தற்போது வழங்கப்பட்டுள்ளது.

கடல் நிரவப்பட்டு காணி இல்லாதவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட அந்தக் கிராமத்திற்கு அக்காலம் தொட்டு மின்சார இணைப்பு வழங்காத நிலையில் தற்போது மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)

# சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் அண்மையில் ஏற்பட்ட மினி சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவல்லாத பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள உடையார்கட்டு வடக்கு, உடையார் கட்டு தெற்கு, சுதந்திரபுரம், மன்னாகண்டல், வள்ளிபுனம், தேவிபுரம் ஆகிய பகுதியிலுள்ள 237 குடும்பங்கள் இச்சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு ஐ.ஓ.எம் மற்றும் எஸ்.எல்.ஆர்.சி ஆகிய நிறுவனங்கள் உணவல்லாத பொருடகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையப் பணிப்பாளர் றீட் நித்தியானந்த குலாஸ் தெரிவித்துள்ளார். (04)

# தர்மபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை நேரத்தை நீடிக்கவும்

## மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள தர்மபுரம் அரசினர் வைத்தியசாலையில் வைத்திய சேவைகள் போதுமானதாக இல்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.


முல்லைத்தீவு - பரந்தன் பிரதான வீதியில் அமைந்துள்ள இவ்வைத்தியசாலையில் ஒரு வைத்தியரே தற்போது கடமையாற்றிவரும் நிலையில், தாதியர் எவரும் இல்லை எனவும் இதனால் சிகிச்சையைப் பெறுவதில் தாம் சிரமங்களுக்குள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வைத்தியர் நாளாந்தம் 6 மணித்தியாலங்களே சேவையாற்றி வருவதுடன், 12 மணி வரையே அவர் கடமையாற்றி வருவதாகவும் இதனால் அவசர நோய் என குறித்த நேரத்தின் பின்னர் சென்றால் சிகிச்சையை பெறமுடியாது வேறு வைத்திய சாலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

அத்தோடு, இவ் வைத்திய சாலையில் நாளாந்தம் 300 வெளிநோயாளர்களும், 50 தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களும் சிகிச்சை பெறும் நிலையில், வைத்தியர்களின் சேவை போதுமானதாக இல்லை என அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். முன்னர் கடமையாற்றிய வைத்தியர் 24 மணி நேரமும் சேவையாற்றிவந்தததுடன், அவர் ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சேவை நேரம் நீடிக்கப்பட்டால் தாம் சிகிச்சையை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வைத்தியசாலையில் நிரந்தரமாக 24 மணிநேரமும் சேவையாற்றக்கூடிய வைத்தியர் மற்றும் தாதியர் ஒருவரையும் நியமிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம்மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

## பரமர் சங்கமம்



நன்மையும் தீமையும் இருவேறு மார்க்கங்கள். அது போல் உலகை சூழ்ந்துள்ள சகல மார்க்கங்களும் இரண்டாக அமைந்துள்ளதாகத் தத்துவங்கள் கூறுகின்றன.

ஆண், பெண் -பகல்,இரவு இவ்விதம் சகலமும் இரண்டாகவே அமைந்துள்ளதைப் பரவலாகக் காண முடிகின்றது. இதில் மனித வாழ்வை ஆட்டிப்படைப்பது பல இருந்தாலும் நன்மையும், தீமையும் கூடுதல் பங்கு வகிக்கின்றது.

மனிதனுடைய வாழ்நாளில் அவன் அனுபவிப்பது கூடுதலாக எது எண்டு கேட்டால், தீமை எண்டே சொல்வான். உண்மையில் 40 வீதமான பங்கு நன்மையாகவே அமைகின்றது.

10 வீதமான தீமை; 90 வீதத்தையும் விட மனிதர்களின் வாழ்வை பாதிப்பதால் அதுதான் முன்னிற்பதாக மனிதன் உணர்கின்றான். அதிகப் படியான சுகத்தை அனுபவித்துப் பழகியவனுக்கு கடுகளவேனும் கஸ்டம் மலைபோலத்தான் படுகிறது.

அதேவேளை கஸ்டம் வந்தால் தொடர்ந்து அடுத்தடுத்து கஸ்ட நிலமைகள்; கவலைக்குரிய நிகழ்வுகள் வருவதையும் காண்கின்றோம்; அனுபவிக்கின்றோம்.

ஒரு குடும்பத்தில் அடிக்கடி உயிரிழப்புகள் நடந்து விடுவதில்லை. அதே நேரம் அசம்பாவிதங்கள், விபத்துக்கள் காரணமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று, நான்கு பேர்கள் உயிரிழந்து விடுகின்ற பல செய்திகளை அறிகின்றோம்.

சமீபத்தில் யாழ் - பலாலி வீதியில் இரு சகோதரிகள் தற்கொலை செய்து கொண்ட சோகம் நிகழ்ந்து குறுகிய நாட்களில் பளைப் பிரதேசத்தில் இரு சிறார்கள் வெடிப்பொருள் ஒன்றை வைத்து விளையாடுகையில் உடல் சிதறிப் பலியான சம்பவங்களை கேள்விப் பட்டோம்.

அந்தந்தக் குடும்பங்களில் ஏற்பட்ட சோகங்கள் தீமை எண்ட அலகுக்குள் வைத்தே நோக்கம் நேர்கின்றது.

வட்டுக்கோட்டையில் சைக்கிள் கடை வைத்திருந்த ஒருவருக்கு மூன்று கோடியே எண்பத்து ரெண்டு இலட்சம் ரூபா அதிர்ஷ்ட இலாபச் சீட்டில் கிடைத்ததை நன்மை எண்டே பார்க்க வேண்டும்.

இதே போல அவருக்கு மேலும் வெவ்வேறு அதிர்ஷ்டங்களால் அடுத்தடுத்து பணம் குவிவதாகக் கேள்விப்பட முடிகின்றதா? உலகத்தில் மிகவும் ஆக்கபூர்வமாக ஒன்று நிகழ்ந்திருக்கலாம்.

ஆக, தீமை என்னும் கவலைக்குரிய நிகழ்வுகள் வந்து மனித நெஞ்சங்களை சல்லடை போடுவதால் துவண்டு போவது அதிகம் தான்.

நாளெல்லாம் அன்பொழுகப் பேசி அரவணைக்கும் ஒருவர் ஒரே ஒரு தடவை எங்களை கோபமாகப் பேசிவிட்டால் எங்களால் தாங்க முடிவதில்லை.

நன்மையும் தீமையும் மனித வாழ்வில் மாறி மாறி ஏற்படுமெண்டதை எதிர்பார்த்து நன்மை ஏற்பட்டால் வானில் பறப்பதையும், தீமை சூழ்ந்தால் துவண்டு போவதையும் தவிர்த்தால் சுமுகமாக வாழ்வு அமையுமில்லையே...

# சமூக கலந்துரையாடலும் ஆலோசனைச் சபைக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சமூக கலந்துரையாடலும் ஆலோசனை சபைக் கூட்டமும் எதிர் வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் வணிகர் கழகம், பிரதேசசபை, பலநோக்கு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்குமாறு வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கேட்டுள்ளார்.

அதே வேளை தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதுடன் 2012 ஆம் ஆண்டிற்கான புதிய உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

# ஜனாதிபதி செயலகத்தின் புத்தாண்டு கலாசார விழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் தமிழ், சிங்களப் புத்தாண்டு கலாசார விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை முல்லைத்தீவு தபாலக வீதியிலுள்ள கடற்கரையில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ரஞ்சித் விஜயதிலக கலந்து கொண்டதுடன், சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத்தளபதி எல்.பி.ஆர். மார்க், முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல் தளுவத்த, முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சகர் ஜனக குணதிலக ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் வடக்கு, வடமத்திய மாகாணங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டதுடன் கலை நிகழ்வுகளையும் நடத்தினர். இதில் கண்டிய நடனம், பாரம்பரிய நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன. (04)

# கண்காட்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் திவிநகும பொருளாதார அபிவிருத்திக் கண்காட்சி எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி வளாகத்தில் நடத்தப்படவுள்ள இக் கண்காட்சிக்கான ஏற்பாடுகளை அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மேற்கொண்டு வருகின்றார்.

பொதுமக்கள் மாணவர்கள் அனைவரையும் இக் கண்காட்சியைப் பார்வையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு - கண்டிக்கு அரைச்சொகுசு பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை கொழும்பு மற்றும் கண்டிக்கான விசேட அரைச் சொகுசு பஸ் சேவையை நடத்தி வருகின்றது. இதற்கான கால அட்டவணை தற்போது வெளியிடப்பட்டிருக்கின்றது.

காரைநகரில் இருந்து கண்டி நோக்கிய இரவு அரைச் சொகுசு பேருந்துச் சேவை கடந்த 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு 782 இலக்க வழிப்பாதையூடாக யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் வந்து, அங்கிருந்து இரவு 8.30 மணிக்கு தம்புள்ளை பாதையூடாக கண்டி நோக்கி புறப்படுகின்றது.

மறுநாள் அதே பாதையூடாக கண்டியிலிருந்து இரவு 8.30 மணிக்கு யாழ்.மத்திய பேருந்து நிலையம் நோக்கிப் புறப்பட்டு, அங்கிருந்து 6.00 மணிக்கு 782 இலக்க பாதையூடாக காரைநகர் நோக்கி புறப்படுகின்றது. இப்பேருந்து சேவைக்கான ஆசனப்பதிவுகளை யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளலாம்.

கிளிநொச்சி சாலையின் அரைச்சொகுசு பேருந்தின் கொழும்பு சேவையானது புதுக்குடியிருப்பிலிருந்து கொழும்பு நோக்கிய இரவு பேருந்து கடந்த 16 ஆம் திகதி புதன் கிழமையிலிருந்து புதுக்குடியிருப்பிலிருந்து மாலை 6.30 மணிக்கு பரந்தன் ஊடாக கிளிநொச்சி பேருந்து நிலையம் வந்தடைந்து அங்கிருந்து இரவு 8.30 மணிக்கு குருநாகல் பாதையூடாக கொழும்பு நோக்கி புறப்படுகின்றது.

மறுநாள் இதே பாதையூடாக கொழும்பிலிருந்து இரவு 10.00 மணிக்கு கிளிநொச்சி பேருந்து நிலையம் ஊடாக புதுக்குடியிருப்பினை சென்றடைகின்றது. இப்பேருந்து சேவைக்கான ஆசனப்பதிவுகளை கிளிநொச்சி சாலையில் மேற்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

# சொற்பொழிவு

(வடமராட்சி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவையால் மாதம் தோறும் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் ஆலய பூசை முடிவுற்றதும் ஆச்சிரம மண்டபத்தில் தேவபாகவதம் என்னும் விடயம் பற்றி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றவுள்ளார்.

# முரசின் இன்றைய பலன்

(16.05.2012 -புதன்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 03 ஆம் திகதி. ஏகாதசி முன்னிரவு 10.31 வரை. நட்சத்திரம் உத்தரட்டாதி, மரணயோகம் பின்னிரவு 3.21 வரை. ஏகாதசி விரதம், இராகுகாலம் 11.53 - 1.23 வரை. சுபநேரம 4.23 - 5.53 வரை. எமகண்டம் 7.23 - 8.53 வரை. குளிகைகாலம் 10.23 - 11.53 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சுபச்செலவு, சகோதரர் உதவி, நீண்டகால கனவுகள் நனவாகும், எதிர்பாராத செலவு. |
| ரிஷபம் | சுபநன்மை, அதிகாரிகளை அனுசரித்துப் போகவும், மின்சாதனத்தில் எச்சரிக்கை. |
| மிதுனம் | தொழில் மேன்மை, விருந்துபசார செலவுகள், அழக்கழ அகாலபோஜனம், பயணம். |
| கடகம் | நல்லநாள், திருமணம் கைகூழவரும், தாராள பணவரவுகள், ஆலயத்தொண்டில் ஈடுபாடு. |
| சிம்மம் | சந்திராட்டமம் பயணம் தவிர், நினைத்த காரியம் கைகூடும், திருமணம் கைகூடும். |
| கன்னி | நல்லாசிகள், பிணைபோவதை தவிர்க்கவும், நினைத்தகாரியம் நிறைவேறும், குழப்பநிலை. |
| துலாம் | நற்சிந்தனை, அரச உதவிகள் கிடைக்கும், ஆடம்பரபொருள் சேரும், உத்தியோக உயர்வு. |
| விருச்சிகம் | உடல் ஆரோக்கியம், கனவுத் தொல்லைகள், உறவினரை அனுசரித்துச் செல்லவும். |
| தனுசு | பயண வெற்றி, கௌரவ பதவிகள் தேடி வரும், சிறப்பான மணவாழ்வு அமையும். |
| மகரம் | பயண வெற்றி, பொறுப்புக்கள் அதிகரிக்கும், பாகப்பிரிவினைக்கு இடமுண்டு, ஒத்துழைப்பு. |
| கும்பம் | குடும்பசுகம், நினைத்த காரியம் வெற்றி, நீண்ட கால கனவுகள் நிறைவேறும். |
| மீனம் | வீண் முயற்சி, குடும்பத்தில் முன்னேற்றம், செலவாக்கு அதிகரிக்கும், திருப்பதிகரமான வருவாய். |

# ஐ.பி.எல்.இலும் சூதாட்டம்

(புதுடில்லி)

ஐ.பி.எல்.தொடரில் பங்கேற்கும் வீரர்கள், அணி உரிமையாளர்கள், வெளிநாட்டு கப்டன் உள்ளிட்ட சிலர் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதுஅம்பலமாகியுள்ளது. பிரபலஇந்திய தொலைக்காட்சிநிறுவனம் புலனாய்வு செய்தி ஒன்றை வெளியிட்டது.

இதில்,ஐ.பி.எல்.தொடரில் பங்கேற்கும் வீரர்களுடன், இரகசியமாக உரையாடி உண்மைகளைக் கண்டறிந்துள்ளது. டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்காக பங்கேற்கும் சுதிந்திரா என்ற வீரர், கடந்த ஆண்டு நடந்த முதல் தர போட்டி ஒன்றில், தொலைக்காட்சி நிருபரின் விருப்பத்திற்கு ஏற்பவேண்டுமென்றே நோ-போல் வீசியுள்ளார். இவர், ரூபா 60 இலட்சம் கொடுத்தால், ஐ.பி.எல். தொடரில் அணி மாற தயார் என கூறியுள்ளார்.

இதேபோல கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி வீரர் ஸ்ரீவாஸ்தவ் நோ-போல் வீச ரூபா 10 இலட்சம் கேட்டுள்ளார். புனே அணிக்காக விளையாடும் மோனிஸ் மிஸ்ரா அதிர்ச்சித் தகவல் ஒன்றை தெரிவித்துள்ளார். இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) விதிமுறைப்படி சர்வதேச போட்டியில் பங்கேற்காத வீரர்கள், ஐ.பி.எல். தொடரில் அதிகபட்சமாக ரூபா 30 இலட்சம் தான் பெற முடியும். ஆனால், மிஸ்ராவுக்கு உரிமையாளர்கள் ரூபா 1.45 கோடி கொடுத்து தக்க வைத்துள்ளனர். இவருக்கு ரூபா 1 கோடி வரை கறுப்புப் பணமாக கொடுத்துள்ளனர். சில நேரங்களில் சொகுசு கார் போன்றவற்றை பரிசாக கொடுத்து இளம் வீரர்களை கவர்கின்றனராம்.

தற்போதைய ஐ.பி.எல். தொடரில், ஒரு அணிக்கு கப்டனாக உள்ள வெளிநாட்டு வீரர் ஒருவரும் சூதாட்டத்தில் ஈடுபட்டது தெரிய வந்துள்ளது.

இது குறித்து பி.சி.சி.ஐ. தலைவர் சீனிவாசன் கூறுகையில், ஐ.பி.எல். நிர்வாக சபை கூடி, சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் என்றார். இதேவேளை இதுசம்பந்தமான விசேட கூட்டம் ஒன்றை ஐ.பி.எல். நிர்வாகம் நேற்று நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 2012 இற்கான வீரர்கள் பட்டியல் ஆறு வகையாகப் பிரிப்பு

(கொழும்பு)

2012ஆம் ஆண்டுக்கான இலங்கைக் கிரிக்கெட் வீரர்களின் ஒப்பந்தப் பட்டியலை இலங்கைக் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள பட்டியலில் பிரதான பட்டியலாக 6 வகையாகவீரர்கள் பிரிக்கப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. அதைத் தவிர, மாகாண மட்ட ஒப்பந்தங்களும் ஏராளமான வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் ஒவ்வொரு பிரிவுக்குமான ஊதியத்தொகை குறித்த தகவல்கள் எவையும் வெளியிட்டிருக்கப்படவில்லை. எனினும் கடந்த வருட ஒப்பந்த ஊதியத்தை விட அதிகரிப்பு ஏதும் மேற்கொள்ளப்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென முன்னரே செய்திகள் வெளியாகியிருந்தன.

முதல்நிலைப் பிரிவு: திலகரட்ண டில்சான், குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, திலான் சமரவீர, லசித் மலிங்க.

இரண்டாம் பிரிவு: நுவான் குலசேகர, அன்ஜலோ மத்தியூஸ், ரங்கன ஹேரத், உபுல் தரங்க.

மூன்றாம் பிரிவு: பிரசன்ன ஜெயவர்தன.

நான்காம்பிரிவு: தரங்க பரணவிதான, சுராஜ் ரந்தீவ், அஜந்த மெண்டிஸ், டினேஷ் சந்திமால்

ஐந்தாம் பிரிவு: டில்ஹார பெர்னான்டோ, சானக வெலகெதர, திஸா பெரேரா

ஆறாம் பிரிவு: சாமர கப்புக்கெதர, சுரங்க லக்மால், லஹிரு திரிமன்ன

மாகாண மட்டப் பிரிவுகள்:

பிரிவு ஏ: சாமர சில்வா, திலின கண்டம்பி, தம்மிக்க பிரசாத், டிமுத் கருணாரத்ன, பர்வீஸ் மஹரூப், ஜீவன் மெண்டிஸ், கௌஷால் சில்வா, சச்சித்திர சேனநாயக்க, ஷமின்ட எரங்க

பிரிவு பி: டில்ருவான் பெரேரா, டில்சான் முனவீர, ஜானக குணரத்ன, கோசல குலசேகர, கௌஷால் ஜனிக் பெரேரா, மலிங்க பண்டார,மலின்டசிரிவர்தன, நதீர நாவல, நிலங்க பிரேமரத்ன, ரொஷான் சில்வா, சச்சித்திர சேரசிங்க, சஜீவ வீரக்கோன், சீக்குகே பிரசன்ன, தரங்க லக்ஷித்த, மலிந்த வர்ணபுர, நுவான் பிரதீப்

பிரிவு சீ: அன்ஜலோ பெரேரா, பானுக்க ராஜபக்ஷ, ஜெஹான் முபாரக், கௌஷால் லொக்குஆராய்ச்சி,மஹேல உடவத்த, மலிந்த புஷ்பகுமார, ரி.எம்.சம்பத்

பிரிவு டி: அஷான் பிரியஞ்சன, அஷான் சில்வா,இசுரு உதான, கனிஷ்க எல்விற்றிகல, யொஹான் டீ சில்வா, கித்துருவன் விதானகே, சொஹன்பொரலெஸ்ஸ, உதர ஜெயசுந்தர.

# சிறிலங்கன் ருவென்ரி 20 குறித்து ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தல்




(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள ருவென்ரி20 பிரிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி தொடர்பாக ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று இலங்கை கிரிக்கெட் சபையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் உபாலி தர்மதாச, செயலாளர் நிசாந்த ரணதுங்க, பிரதான நிறைவேற்று அதிகாரி அஜித் ஜயசேகர மற்றும் சமர்செட் என்டெர்டெய்ன்மென்ட் தனியார் நிறுவனத்தின் பிரதிநிதிகள் உட்பட பலர் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது ருவென்ரி 20 பிரிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டதோடு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் கிரிக்கெட்சபை நிர்வாகிகள் பதிலளித்தனர்.

இங்கு உரையாற்றிய இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் உபாலி தர்மதாச போட்டியினை ஒளிபரப்புவதற்கான உரிமை மற்றும் வெளிநாட்டு வீரர்களை தொடர்புகொள்வதற்கான பொறுப்பு ஆகியன சமர்செட் என்டெர்டெய்ன்மென்ட் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# தங்கமே இலக்கு

(மாட்ரிட்)

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்வதே எனது இலக்கு. இதற்காக கடுமையான பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என பெடரர் தெரிவித்தார்.

மாட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்றமை மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த வெற்றியின் மூலம் தரவரிசையில் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியிருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி.

இந்த இறுதி ஆட்டம் மிகவும் கடுமையான போட்டியாக அமைந்தது. இத்தொடரில் வெற்றிபெற்றமை மிகவும் சிறப்பானதொன்றாக உணர்கின்றேன். நான் சிறப்பாக விளையாடிக் கொண்டிருப்பதாகவே உணர்கின்றேன். இதற்கு எனது உடற்தகுதி ஒத்துழைப்பதே முக்கிய காரணம். இந்த ஆண்டு சிறப்பான ஆண்டாக எனக்கு அமையும் என எதிர்பார்க்கின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# விண்வெளி வீரர்களும் ஒலிம்பிக் பார்க்க வசதி

(மொஸ்கோ)

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளை விண்வெளியில் உள்ள ரஷ்யாவின் விண்வெளி வீரர்கள் பார்வையிடும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விண்வெளியில் இருந்தவாறே தமது நாட்டு வீரர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கவுள்ளது என்று விண்வெளி வீரர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நேரடியாக அல்லாமல், ஒலிம்பிக் போட்டிகளின் ஒளிப்பதிவு செய்யப்பட்ட முக்கிய காட்சிகள் விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

ஜுலை 27 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள போட்டிகளின் தெரிவு செய்யப்பட்ட முக்கிய நிகழ்வுகள் விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

விண்வெளி வீரர்கள் சிலர் இன்று விண்வெளிக்கு புறப்பட்டுச் செல்லவுள்ளதாகவும் ரஷ்ய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# தடகள விளையாட்டிற்கு ஆதரவு இல்லாதது கவலை

(மும்பை)

இந்தியாவில் தடகள விளையாட்டுக்குபோதிய அளவில் ஊக்கமும் ஆதரவும் இல்லை என்பது கவலைக்குரிய விடயமாகவே உள்ளது. சிறந்த பயிற்சிக்கான வாய்ப்புகள் கிடைத்தால் இன்னும் இரண்டு ஒலிம்பிக் போட்டிகளுக்கு பிறகு இந்தியா சர்வதேச அளவில் தடகளப் போட்டிகளில் ஒரு வலுவான தேசமாக உருவாக முடியும் என்று இந்திய தடகள அணியின் பயிற்சியாளர்களில் ஒருவரான முகமது நிஜாமுதீன் தெரிவித்தார்.

இந்த ஆண்டு லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பெற இதுவரை இந்தியாவிலிருந்து 11 தடகள வீரர்க்கள் தகுதி பெற்றுள்ளனர்.

மகளிர் பிரிவில் வட்டு எறிதலில் கிருஷ்ண புனிய மற்றும் சீமா அண்டில், 800 மீற்றர் ஓட்டத்தில் டிண்ட்டு லூகா ஆகியோரும் ஆடவர் பிரிவில் குண்டு எறிதல் போட்டிக்கு ஓம்பிரகாஸும் தகுதி பெற்றுள்ளனர்.

இதே போன்று டிரிபிள் ஜம்ப் போட்டிக்கு ரஞ்சித் மகேஸ்வரி, நீளம் தாண்டுதலில் மயூகா ஜானி ஆகியோரும், 20 கிலோ மீற்றர் நடைப் போட்டியில் மூவரும், ஐம்பது கிலோமீற்றர் நடைப் போட்டியில் ஒருவரும் தேர்வாகியுள்ளனர். வட்டு எறிதல், குண்டு எறிதல் போன்ற விளையாட்டுகளில் இந்தியர்கள் பலர் தகுதி பெற்றிருந்தாலும் ஓட்டப் போட்டிகளைப் பொறுத்த வரையில் இந்திய வீரர்களின் தகுதி ஆசியா மற்றும் உலகத்தரத்தை விட குறைவாகவே உள்ளது என்றும் நிஜாமுதீன் தெரிவித்தார்.

இந்தியாவில் தடகள விளையாட்டுகளில் ஓட்டப் போட்டிகளில் கவனத்தை குறைத்துக் கொண்டு, கள விளையாட்டுகளில் அதிகம் கவனம் செலுத்தினால், சர்வதேச அளவில் பதக்க வாய்ப்புகள் கூடுதலாகும் சாத்தியங்கள் உள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

# மெஸ்சியின் கொடை உள்ளம்

கால்பந்து உலகின் முன்னணி நட்சத்திர வீரராக விளங்கும் பார்சிலோனா அதிரடி வீரர் மெஸ்சி அதிகம் சம்பாதிக்கும் வீரர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். சிறுவயது முதலே கால்பந்தில் அதீத ஆர்வம் கொண்டிருந்த மெஸ்சி ஹோர்மோன் வளர்ச்சி குறைபாடால் பாதிக்கப்பட்டிருந்தார்.

ஆர்ஜென்ரீனாவில் இருந்த மெஸ்சியின் கால்பந்து திறமையை அறிந்த பார்சிலோனா அணி 14 வயது முதல் அவரது சிகிச்சைக்கான அனைத்து செலவையும் ஏற்றது. தற்போது முன்னணி வீரராக வலம் வரும் மெஸ்சி தன்னைப் போலவே ஹார்மோன் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட சிறுவனின் மருத்துவ



செலவை ஏற்பதாக அறிவித்துள்ளார். மொராக்கோவை சேர்ந்த 12 வயது சிறுவன் வாலீத் கேசாஸ் கால்பந்தாட்டத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டவன்.

ஆனால் இந்தச்சிறுவனுக்கு ஹார்மோன் வளர்ச்சி குறைபாடு நோய் இருந்தது. இந்தச் சிறுவனின் சிகிச்சைக்காக ஒவ்வொரு 15 நாட்களுக்கும் 3 ஆயிரம் திராம் (208 யூரோ) பணம் தேவைப்பட்டது. சிறுவனின் பெற்றோர்களிடம் பணவசதி இல்லை.

இச்சிறுவனின் நிலை குறித்து அறிந்த மெஸ்ஸி சிறுவனின் சிகிச்சைக்கான முழுச் செலவையும் ஏற்பதாக அறிவித்துள்ளார். அதாவது அந்தச் சிறுவன் 18 வயது அடையும் வரை 15 நாட்களுக்கு ஒரு முறை சிகிச்சைக்கான 3 ஆயிரம் திராமையும் அளிக்க அவர் முன்வந்துள்ளார். மேலும் ஒருஜெர்சியில், குணமடைந்து பலமிக்கவனாய் வருவாய் என்று எழுதி கையெழுத்திட்டு வாலீத்துக்குமெஸ்ஸி அனுப்பியுள்ளார். மேலும், ஹார்மோன் வளர்ச்சி குறைபாடு நோய் உலகில் 3800 குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு ஏற்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பம்

(லண்டன்)

இங்கிலாந்து மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நாளை ஆரம்பமாகின்றது. மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நாளை லோட்ஸ் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சொந்த மண்ணில் இடம்பெறவுள்ளதால் இத்தொடரை இலகுவான முறையில் நாம் எடுத்துக்கொள்ளவில்லை என்றும், மிகவும் கவனமாக ஆடி முழுமையான வெற்றியைப் பதிவாக்கிக் கொள்ள முயற்சிப்போம் என்றும் இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரோஸ் தெரிவித்தார்.

இதேவேளை, அவுஸ்ரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பான ஆட்டத் திறனை தாம் வெளிப்படுத்தியிருப்பதாகவும், இதன் மூலம் இங் கிலாந்துத் தொடரில் சிறப்பாகச் செயற்பட முடியும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் மேற்கிந்தியத்தீவு அணித் தலைவர் டரன் சமி தெரிவித்தார்.

இத்தொடரை முடிந்தளவு சமநிலை ஆக்கிக் கொள்ள முயற்சிப்போம் என்ற நம்பிக்கை தமக்கு உள்ளதாகவும் சமி தெரிவித்தார்.

# சகல பிரிவுகளிலும் கிளி. ம.வி. சம்பியன்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கப் போட்டியில் சகல பிரிவுகளிலும் கிளிநொச்சி மகா வித்தியாலய அணிகள் வெற்றி பெற்று மாவட்ட சம்பியனானது.

இப்போட்டி கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது, 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் கிளிநொச்சி மாகாவித்தியாலயம் முதலாமிடத்தினையும் முரசு மோட்டை முருகானந்தாக் கல்லூரி இரண்டாமிடத்தினையும் வட்டக்கச்சி மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டன.

இதேவேளை, 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் கிளிநொச்சி மாகாவித்தியாலயம் முதலாமிடத்தினையும் முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி இரண்டாமிடத்தினையும் உருத்திரபுரம் மகாவித்தியாலயம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் கிளிநொச்சி மா்காவித்தியாலயம் முதலாமிடத்தினையும் வட்டக்கச்சி மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தினையும் இராமநாதபுரம் மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டன.

## முன்பள்ளி விளையாட்டு

(வடமராட்சி)

வடமராட்சி கலைமகள் புனித செபஸ்தியார் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கலைமகள் முன்பள்ளித் தலைவர் கே. குல்சிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் வடமராட்சி வலய முன்பள்ளிகளின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக வடமராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளரும், பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்ரீரங்கேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (116)

# 17 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்டம் சம்பியனானது கனகராயன்குளம்




(வவுனியா)

வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் 17 வயதுப் பிரிவில் கனகராயன் குளம் மகாவித்தியாலயம் சம்பியனானது.

இப்போட்டிகள் வவுனியா சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் கனகராயன் குளம் மகாவித்தியாலய அணியும் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி அணியும் மோதின. இதில் 9-7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று கனகராயன் குளம் மகாவித்தியாலய அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரணடாவது அரையிறுதிப் போட்டியில் தரணிக்குளம் கணேஷ் வித்தியாலய அணியும், சைவப் பிரகாச மகளிர் கல்லூரி அணியும் மோதின. தரணிக்குளம் கணேஷ் வித்தியாலய அணி 12-9 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் கனகராயன்குளம் மகாவித்தியாலய அணியும், தரணிக்குளம் கணேஷ் வித்தியாலய அணியும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் தரணிக்குளம் - கணேஷ் வித்தியாலய அணி அடுத்தடுத்து இரண்டு புள்ளிகளைப் பெற்று முன்னிலை பெற்றது. முதல் சுற்றில் தடுமாறிய கனகராயன் குளம் மகாவித்தியாலய வீராங்கனைகள் தம்மை சுதாகரித்துக் கொண்டு அபாரமாக ஆடத் தொடங்கினர். இதனால் முதற் பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்த போது 7-4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கனகராயன் குளம் மகா வித்தியாலய அணி முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டமும் விறுவிறுப்பான முறையில் இடம்பெற்றது. இரண்டாவது பாதி ஆட்டத்திலும் ஆதிக்கம் செலுத்திய கனகராயன்குளம் மகாவித்தியாலய அணி 5-3 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்றது. இறுதியில் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை கனகராயன்குளம் மகா வித்தியாலய அணி 12-7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மாவட்ட சம்பியனானது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி அணியை வென்று சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (12, 93)

# வித்தியானந்தா சம்பியன்

(முல்லைத்தீவு))

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் 17 வயதுப் பிரிவில் வித்தியானந்தாக் கல்லூரி அணி சம்பியனானது.

இப்போட்டித் தொடர் யோகபுரம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் பாலிநகர் வித்தியாலய அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய வித்தியானந்தாக் கல்லூரி அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது போட்டியில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அணியும், முல்லைத்தீவு மகா வித்தியாலய அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் கோல் எதனையும் பெறத் தவறியமையால் சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 3-2 என்ற கோல் கணக்கில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அணி வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் மல்லாவி மத்திய கல்லூரி அணியும், வித்தியானந்தாக் கல்லூரி அணியும் மோதின. இதில் போட்டி நிறைவடையும் வரை எந்த அணியும் கோல் எதனையும் போடாதமையால் சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் எட்டாவது சந்தர்ப்பத்திலேயே வித்தியானந்தாக் கல்லூரி அணி 6-5 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் உடுப்புலம் தமிழ் வித்தியாலய அணியும் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் வித்தியானந்தாக் கல்லூரி அணியும், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளுமே போட்டி நிறைவடையும் வரை எந்தவொரு கோலையும் போடமுடியவில்லை. இறுதியில் சமநிலை உடைப்பு மூலம் வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற வித்தியானந்தாக் கல்லூரி அணி மாவட்ட சம்பியனானது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் மல்லாவி மத்திய கல்லூரி அணியும், உடுப்புப்புலம் தமிழ் வித்தியாலய அணியும் மோதின. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றிபெற்ற உடுப்புப்புலம் தமிழ் வித்தியாலயம் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (42)

# 34 ஓட்டங்களால் பற்றீசியன்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

கே.சீ.சீ.சீ. அணிக்கெதிரான போட்டி ஒன்றில் பற்றீசியன்ஸ் அணி 34 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

யாழ். ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் போட்டி ஒன்று கடந்த சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் கொக்குவில் கே.சீ.சீ.சீ. அணியும் யாழ். பற்றீசியன்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய பற்றீசியன்ஸ் அணி 30 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லிவிங்ரன், கிளிங்ரன் தலா 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கிருபவன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 184 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் கே.சீ.சீ.சீ. அணி 29 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஜனுதாஸ் 30, சத்தியன் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுஜீவன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

•இப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் சனி மற்றும் ஞாயிறு தினங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (07)





(படப்பிடிப்பு: சுரேஷ்)

சென். ஜோன்ஸ் கல்லூரியின் சிறுவர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் இணைந்து ஓடுதல் நிகழ்வையும், சிறார் ஒருவருக்கு விருந்தினர் பரிசில் வழங்குவதையும் காணலாம். (20)

**கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கடந்த 09.05.2012 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற் பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்கள் ஆற்றிய உரை.**

**(நேற்றைய தொடர்ச்சி)**


# மாணவர்களின் கல்விசார் தோல்விகள்: யார் பொறுப்பாளிகள்?

### சோதனைத் தோல்வியின் பொறுப்புதாரர்

செயலாற்றங்கள் பற்றி பேசும்போதும் மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் (Top down apprpach) அணுகுமுறையே பெரிதும் பின்பற்றப்படுகின்றது. அதிக புள்ளிகள், உயர்ந்த தரங்கள் சாதனைகள் அதிக கவன ஈர்ப்பை பெறுகின்றன.

ஆனால், ஒரே பாடசாலை முறையில் ஒரே கலைத்திட்டத்தில், ஒரே மாதிரியான கற்பித்தலில் கற்றவர்களில் பெரும்பாலானவர்கள் அல்லது கணிசமானவர்கள் தோற்றுப்போகும் நிலைமையும் தோல்வி கூர்மையான கவன ஈர்ப்பு அம்சமாக மாறும் நிலைமையும் ஏற்படும்போது இச்செயன் முறையின் பொறுப்புதாரர் பற்றி கவனம் செலுத்து வதும் அவசியம். இது சமூக ரீதியிலானதும், செயலமைப்பு ரீதியிலானதுமான தேவையுமாகும்.

இதனால் கீழிருந்து மேல் நோக்கிய அணுகு முறை (Bottom Up approach)யும் அவதானிப்பும் தேவைப்படுகின்றது. தோற்றவர்களின் பக்கம் நின்று தோல்வியை பரிசீலனை செய்து பார்த்தா லென்ன? அதில் என்ன தவறு நிகழ்ந்துவிட முடியும்? பின்வருவோர் வெற்றியின் பொறுப்பு தாரராகவும், தோல்வியின் பொறுப்புதாரராகவும் விளங்குகின்றனர்.




தோல்வியின் பொறுப்புதாரர்கள் மற்றும் நிலைமைகள்

1 மாணவன் - தன்னிலை ஆற்றல்.
2. மாணவன் தேவையும் உணர்வும்
3. முறைமை சார் பாடசாலை
4. மாற்றுக்கல்வி ஏற்பாடுகளின் தன்மை.
5. சகபாடிகளின் செல்வாக்கு.
6.. குடும்பங்களின் உதவியும் ஊக்கமும்.

இத்தகைய பல்வேறு காரணிகளும் மாணவன் தோல்வியை நிர்ணயிக்கும் நிலைமையை மாணவ-னது தனிப்பட்ட வாழ்க்கை முறைமை பாதகமான திசைக்கு திருப்பப்படுகின்றது.

I பிள்ளைகளின் மதிநுட்பம் பெற்றோருடனும், உணவு, ஊட்டம், நலத்துறை வசதி, கற்கும் வாய்ப்பு போன்றவற்றுடன் தொடர்பு கொண்டிருப்பதால் வறியவர்களின் தரநிலை குறைவாகவே உள்ளது. இது அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றது. விதிவிலக்குகள் மிகவும் குறைவாகவேயுள்ளன.

II மாணவர் தேவைகள் மற்றும் உணவுகள் குடும்பங்களின் வறுமை அல்லது வறுமையற்ற நிலையுடன் தொடர்புடையனவாய் உள்ளன. பாட-சாலை மற்றும் கல்வி வாய்ப்புக்களும் வசதிகளும் வசதி மிக்கவர்களுக்கு சார்பானதாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அனுமதி பற்றிய இலங்கையின் நிலைமையை பின்வரும் அட்டவணை வெளிப்படுத்துகின்றது. இது 2005இல் உள்ளவாறு தரப்படுகின்றது.

| வருமான அடிப்படையில் குடும்பங்களின் நிலை | அரம்பக் கல்வி (1-5) | இடை நிலைக்கல்வி (6-9) | (10-13) | மூன்றாம் நிலைக் கல்வி |
|---|---|---|---|---|
| | ( சதவீத அடிப்படை) | | | |
| மிகவும் குறைந்த வருமானம் | 95 | 61 | 31 | 02 |
| மிகவும் உயர்ந்த வருமானம் | 97 | 76 | 60 | 13 |
| வறியவர் | 95 | 63 | 32 | 02 |
| வறியவர் அல்லாதவர் | 96 | 71 • | 47 | 06 |

மூலம்: Angela W. Little
Education and development in a Global Era : (P194)

கல்வியைத் தொடர்ந்து செல்லும்போது தேவைகள் நிறைவேறும் வாய்ப்பும் அதிகரித்துச் செல்கின்றது. இது பரீட்சை அடைவுகளிலான சாதனை புரியும் ஆற்றலையும் தீர்மானிக்கின்றது.

III பாடசாலை முறைமைகள் பிள்ளையின் பலம் அல்லது பலவீனமான பண்புகளை உருவாக்கும் ஆற்றல் கொண்டவை. அரசின் ஆவணங்கள் இது பற்றிக் கூறும் கூற்றுக்கள் நோக்கத்தக்கன. கல்வித் துறையின் எல்லா மட்டங் களிலும் கல்வியின் மதிப்பளவிலும், தரத்திலும் பாரிய வீழ்ச்சி காணப்படுகின்றது. (பொதுக்கல்விச் சீர்திருத்தங்கள் (1997)

### தற்போதைய பாடசாலை முறைமையின் பிரதான பிரச்சினைகள்

01 கனிஷ்ட இடைநிலைத் தேவையை தரம் ஆறினால் நிறைவு செய்ய முடியாமை.

02. பாடசாலை வகைகளின் ஒரே மாதிரியான தன்மையும் அதன் விளைவாக கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் அமுலாக்குவதிலுள்ள குழப்ப நிலை.

03. பாடசாலைப் பகிர்வில் சமத்துவமின்மை.

04. நியாயத்துடன் சிறப்புத்தன்மையை மேம்படுத்தும் தேவை.

05. பின்தங்கிய குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ப்பிற்கான பிரதான திறவுகோலாக விளங்கும் சிறிய பாடசாலைகளை குறைத்தல்.

- இலங்கையின் பொதுக்கல்வி பற்றியதேசியகொள் கைச் சட்டகம் ஒன்றிற்கான ஆலோசனைகள் (2003)

இந்தப் வீனங்கள் பின்தங்கிய புவியியல்



பிரதேசங்களில் வாழும் பிள்ளைகள் மீது அதிக பாதக விளைவுகளை உருவாக்கிவருகிறது. பிள்ளைகளின் தோல்வி அமைப்பு ரீதியான தோல்வியாகவும் நோக்கப்படுதல் அவசியமாகும்.

IV மாணவர்கள் பாடசாலைகளையும் இலவசக் கல்வி முறைமையையும் முழுமையாகச் சார்ந்திருந்த காலம் ஒன்றிருந்தது. உயர் கல்வி இலவசமாக இருப்பதாலும், பரீட்சைப் பெறுபேறு அதற்கான கடவுச்சீட்டாக இன்னமும் கருதப்படுவதாலும் மேன் மையான தொழில்கள் பட்டங்களுடன் (Degrees) பிணைக்கப்பட்டிருப்பதாலும் மாற்றுக் கல்வி ஏற்பாடு தேசிய ரீதியில் வளர்ந்து வலிமை பெற்றுவிட்டது.

பள்ளியில் இலவசமாக கற்பிக்கும் அதே பாடத்திட்டத்தை வெளியே பெற்றோரின் பணச் செலவிலும் மாணவர்களின் பிள்ளைப் பருவ குதூ கலத்தின் அமையச் செலவிலும் பல மாதிரிகள் பல அடுக்குகளின் கற்கும் பலமான சமாந்திரமான கற்பித்தல் ஏற்பாடு தேசிய ரீதியில் வளர்ந்துவிட்டது. பாடசாலைக் கல்வியில் நிலவுவது போன்று அதே ஏற்றத்தாழ்வுகளுடனும் பலவீனங்களுடனும் கிராம - நகர பேதங்களுடனும் இந்த மாற்றுக் கல்வி முறை மை வளர்ந்துவிட்டது.

சமூக கண்காணிப்பு ஏதுமின்றி இந்த முறைமை பாடசாலை மாணவர் சோதனைசார் செயலாற்றங்கள் சார்ந்த பொறுப்புக்களை (வகை கூறலை ஏற்கா மால்) ஏற்றுக்கொண்டுள்ளன. பாடசாலை முறைமை நலிவுற்ற காலங்களின் அனுபவங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. மாணவர்களின் தோல்வி யில் இவர்களுக்கும் பங்கு உண்டு. இங்கு குறிப் பாக தனியார் வகுப்புக்கள் தொடர்பான விடயம் கவனத்திற்குரியதாக்கப்படுகின்றது. பல ஆய்வுகள் மற்றும் ஆவணங்களில் இவை தொடர்பாக தரப்படும் பின்வரும் சில கூற்றுக்கள் பொருத்தப்பாடு கருதி இங்கு தரப்படுகின்றன.

கல்வி அமைச்சின் சுற்றுநிருபம் 2006/45... பாட-சாலை நேரத்திற்குப் பின்னரும் வார இறுதியிலும் தனியார் வகுப்புக்கள் நடத்தப்படுவதை தடை செய்கின்ற போதிலும் இந்த வகுப்புக்கள் பாட-சாலை நேரத்தில் நடத்தப்பட்டுள்ளன.

தனியார் வகுப்புக்கள் சாதாரண வாழ்க்கை முறையாகியுள்ளது. ஆண்டொன்றுக்கு ஒரு மாண வர் சராசரி தனியார் வகுப்புக் கட்டணமாக 4695.00 ரூபாவைச் (2009இல்) செலுத்தியுள்ளார். இந்த தொகை இல்லங்களின் வகுப்பு நிலைமை (குடும்ப பொருளாதார அந்தஸ்து)களுக்கு ஏற்ப வேறுபடு கின்றது.

ஆசிரியர்கள் வழமையான வகுப்புக்களில் பாடத்திட்டத்தின் முக்கிய பகுதிகளை கற்பிக்காது விடுதலை ஊக்குவித்ததுடன் மாணவர் தனியார் வகுப்புக்குச் செல்வதை நிர்ப்பந்தித்துள்ளது. (இலங்கையின் கல்வித் துறை ஊழல்களும் பரிமாணங்களும் 2009 (பக்கம் 53-54))

பாடசாலை முறைமை சார்ந்த தனியார் வகுப்பு ஆசிரியர்களுடன் தொடர்புடையன மாத்திரம் இங்கு காட்டப்பட்டுள்ளது. இதற்கு புறம்பாக தனியார் வகுப்பு முறைமையின் மேலாதிக்கமும் பாங்கமும் பலவீனங்களும் கூட மாணவர் தோல்வி தொடர்பான பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய தகுதி கொண்டனவாயுள்ளன.பாடசாலை முறைமையும் தனியார் கல்வி முறைமையும் வெற்றியாளர்கள் மீது காட்டும் உரித்தை ஏன் தோல்வியுற்றவர்கள் தொடர்பாக வெளிப்படுத்துவது இல்லை. சமூக கண்காணிப்பும் தொடர் கவனமும் இதில் தேவைப்படுகின்றன.

V சகபாடிகளின் தொடர்பும் நட்பும் கருத்தேற்ற மும் சுய மதிப்பீடு ஏதுமின்றி தவறான கற்கை நெறிக்குள் பலவீனமான குடும்பத்துப் பிள்ளைகள் குவிந்து பின்பு தீவிரமான தோல்வியுடனும் விரக்தி யுடனும் சமூகத்தினுள்ளே கொட்டப்படுகின்றனர். 13 வருட பள்ளிப்படிப்பு தோல்வியுணர்வுடன் நிறைவடைகின்றது.

பெற்றோர் தொடர்பாடலின்மை உகந்த பொழுது போக்கு பற்றி அறிந்திராமை, நூலகப் பழக்க மின்மை, கட்டிளமைப் பருவத்து குதூகல உணர் வுப் பரிமாற்றங்கள் போன்றன பெரும்பாலான மாணவர்களை பொருத்தக்கேடான சகபாடிகளின் வலையில் வீழ்த்தி விடுகின்றது. இது பல சமயங் களில் தோல்வியுற்ற சமூகத்தை விரிவுபடுத்தக் காரணமாகிவிடுகின்றது.

VI குடும்பங்களின் வகிபாகம், கவனம், உதவி, ஊக்கம், வழிகாட்டல், கண்காணிப்பு, வழிப்படுத் தல் பெரும்பாலான மாணவர்களுக்கு கிடைப்பதே இல்லை. பெற்றோர் - மாணவர் இடைவெளி அகன்று வருகின்றது. தனியார் வகுப்புக்கு பணம் கொடுப்பதன் மூலம் போலியாக தம்மைபெற்றோர் நியாயப்படுத்தி மகிழ்கின்றனர்.

நாளாந்த தொடர்பாடல் இவர்களிற்கிடையே படிப்பு, ஆசிரியர், பிரச்சினைகள் தொடர்பாக இடம்பெறுவது வெகுவாக அருகிவிட்டது. தொழில் களைப்பு, பொருளாதார இயலாமை, மன அழுத் தங்கள், பொழுதுபோக்கு சாதன மேலாதிக்கம் போன்றன பெற்றோர் தம்பிள்ளைகளுடன் அன்னி யோன்னியமான தொடர்பாடல்களை சீராகப் பேணுவதற்குத் தடையாக உள்ளன.

இவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட காரணி கள் பலவும் மாணவர்களின் சோதனைதொடர்பான தோல்விகளில் அதிக பாதிப்பை ஏற்படுத்தி வரு கின்றன. எனினும் தோல்வியின் சுமை மாணவர் மீதே குவிந்து வருகின்றது. அவர்களது தனிப்பட்ட தவறு போலவும் முற்பிறப்பின் தண்டனை போல வும் அணுகுமுறை வலுப்பெற்றுள்ளது.

### முடிவுரை

* எதிர்காலத்தில் கல்வி அமைச்சு, பாடசாலை கள் சமூக நிறுவனங்கள், தனியார் கல்வி நிலை யங்கள், கல்வியலாளர்கள், சமூகத் தலைவர்கள், மாணவர் மன்றங்கள், ஆசிரிய தொழிற்சங்கங்கள் போன்ற பலவும் ஒன்றிணைந்த வகையில் பல நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து படிப்படியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.


* தொடர் கவனமும் தொடர் பின்னூட்டல்களும் அவசியமானவை.

* பாடங்களை கற்பதற்கு வெளியே பல்வேறு திறன்கள் இனங்காணப்படல் வேண்டும். புதிய ஆற்றல்களை மேம்படுத்துவதிலும் தொடர் வழி காட்டல்களிலும் பாடசாலை மட்டத்திலும் பல புதிய முனைப்பு மிக்க செயற்பாடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம்.

* இவை தொடர்பாக தெளிவான கலந்துரை யாடல்கள் பல நிலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டும். பாடசாலை மட்ட செயற்பாடுகள் தனி யார் கல்வி நிலையங்களுடன் ஒன்றிணைந்தவகை யில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படவேண்டும்.இவை தொடர்பாக பிறிதொரு சந்தர்ப்பத்தில் விரிவாக ஆய்வுசெய்வோம். **(முற்றும்)**

# தெரிவுக் குழுவில் பங்கேற்பதற்கு கூட்டமைப்பின் நிபந்தனை என்ன?

## கேட்கிறார் அமைச்சர் திஸ்ஸ



(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் நிபந்தனைகளுடன் பங்கேற்கத் தயாரென கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

எனவே அவர்கள் விதிக்கவுள்ள நிபந்தனை என்னவென அறிந்து கொள்ள விரும்புவதாக அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக பிரேரிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் எதுவித நிபந்தனைகளுமின்றி அரசியல் கட்சிகள் பங்கெடுக்கவேண்டும் என்பதே எமது எண்ணமாகும்.

அதாவது குறிப்பிட்ட விடயம் குறித்துப் பேசவேண்டும். ஏனைய விடயங்கள் குறத்துப் பேசமுடியாது என்று நிபந்தனைகள் விதிக்கப்படக்கூடாது. என்ன விடயங்களானாலும் நாடாளுமன்ற தெரி வுக்குழுவில் பேச்சு நடத்தலாம் தீர் மானங்களை எடுக்கலாம்.

நாடாளுமன்ற தெரிவுக்குழு காலத்தை வீணடிக்கும் என்று கருதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அது குறித்து நிபந்தனை விதிக்குமானால் அவர்களுக்கு ஒரு விடயத்தைக் கூற விரும்புகின்றோம்.

அதாவது நியமிக்கப்படும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அரசியல் கட்சிகள் பங்கேற்று பேச்சுவார்த்தை நடத்தி ஆறு மாத காலத்தில் தீர்மானத்துக்கு வர வேண்டும் என்று பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆறு மாத காலத்தில் நாடாளுமன்ற தெரிவுக்குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தாக வேண்டும். அதன் பின்னர் அடுத்த கட்ட ஏற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.

எனவே கால இழுத்தடிப்பு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குழப்பமடைய வேண்டியதில்லை. அதற்கு தீர்வு தெரிவுக் குழு குறித்த பிரேரணையிலேயே உள்ளது.

இதேவேளை நாடாளுமன்ற தெரிவுக் குழுவானது தனது கலந்துரையாடல்களை ஆரம்பிக்கும்போது சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் யோசனைகளை அடிப்படையாகக்கொண்டு ஆரம்பிக்க முடியும் என்று நான் ஏற்கனவே யோசனை தெரிவித்துள்ளேன்.

அதன்படி இணக்கபபாடு எட்டப்படின் செயற்பட முடியும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 7 மாணவர் துஷ்பிரயோகம்; பாடசாலை ஆசிரியர் கைது

(கொழும்பு)

ஏழு மாணவர்களை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக கூறப்படும் அம்பலாங்கொடை பிரதேசத்திலுள்ள பிரபல பாட சாலையொன்றின் ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைக்கப்பெற்ற தகவலொன்றை விசாரணைக்கு உட்படுத்தியதைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்தது.

கைது செய்யப்பட்டுள்ள சந் தேகநபர் பலப்பிட்டிய நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

30 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

13 முதல் 17 வயதுக்குட்பட்ட சிறுவர்களே துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

## புலிகளின் செயற்பாடுகள் பிலிப்பைன்ஸில் இடமில்லை

(கொழும்பு)

தமது நாட்டில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இருக்குமாயின் அவற்றைத் தடுக்க தயாராக உள்ளதாக பிலிப்பைன்ஸ் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் உதவி வெளியுறவு அமைச்சர், ஏர்லின்டா எப் பாஸி லியோ நேற்று முன்தினம் கொழும்பில் இலங்கையின் வெளியுறவு பிரதியமைச்சரை சந்தித்தபோது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், புலம்பெயர்ந்த தமிழர்கள் பிலிப்பைன்ஸில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை ஊக்குவிக்க முனைகின்றனர். எனினும் அதற்கு இடமளிக்கப் படமாட்டாது என பிலிப்பைன்ஸின் பிரதியமைச்சர் குறிப்பிட்டார்

இந்தநிலையில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பாக இரண்டு பிரதியமைச்சர்களும் கலந்துரையாடினர்.

# கலாசாரத்தைப் பாதுகாக்க தவறியுள்ளது அரசாங்கம்

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் கலாசாரத்தை பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கத் தவறியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நாடு முழுவதிலும் அரும் பொக்கிஷங்கள் கொள்ளையிடப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை கலாசார மற்றும் மரபுரிமைகள் ரீதியில் செழுமையான வரலாற்றைக் கொண்டமைந்த நாடு என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும் சில தரப்பினர் அதனை சீரழிப்பதில் தீவிர முனைப்பு காட்டி வருகின்றனர்.

நாட்டில் இடம்பெற்று வரும் கலாசார சீரழிவுகளை தடுத்து நிறுத்த அரசாங்கம் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை.

நாடு முழுவதிலும் இடம்பெற்று வரும் அரும் பொக்கிஷ கொள்ளைகளின் மூலம் இந்த விடயம் வெட்ட வெளிச்சமாகின்றது.

இந்த நடவடிக்கைகளுக்கு அரசாங்கமோ அரசாங்கத்தைச் சார்ந்தவர்களோ தொடர்புபடாவிட்டால் ஏன் இதனை ஒழிப்பதில் ஆர்வம் காட்டவில்லை என கயந்த கருணாதிலக கேள்வி எழுப்பியுள்ளார்.

# அரசு வடபகுதி மக்களை மூன்றாம் தரப்பாக கருதுகிறது

## என்கிறார் சஜித்



(கொழும்பு)

அரசாங்கம் வடபகுதி மக்களை மூன்றாம் தரப்பு பிரஜைகளாக மதிப்பிடுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார்.

இதனாலேயே வட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை - அளுத்வெவ பகுதியில் நடைபெற்ற நிகழ்வின் போதே அவர் இதனைக் கூறினார்.

வடக்கு, கிழக்கு மக்களுக்காக கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும், யுத்தம் நிறைவடைந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில், வடபகுதியில் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் தவறியுள்ளதாக சஜித் பிரேமதாச குறிப்பிட்டார்.

வடபகுதி மக்களை மூன்றாம் தரப் பிரஜைகளாக கருதுவதாலேயே அவர்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட வில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆணைக்குழு பரிந்துரை அமுல்படுத்த வேண்டும்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை முன்மொழிவுகள் அமுல்படுத்தப்பட வேண்டுமென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் முன்மொழிவுகள் அமுல்படுத்த வேண்டும் என்பதே கட்சியின் நிலைப்பாடு என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்மொழிவுகள் தொடர்பில் அரசாங்கம், ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடம் கருத்து கோரியிருந்தது.

இந்தக் கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் கட்சியின் நிலைப்பாடு ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான உறுப்பினர்கள் பல தடவைகள் கூடி நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கை முன்மொழிவுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை தயாரித்துள்ளனர்.

முக்கியமான முன்மொழிவுகள் உடனடியாகவும், ஏனையவை கிரமமான முறையிலும் அமுல படுத்தப்பட வேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளது.

# கடத்தல் சம்பவங்கள் குறித்து நாடாளுமன்றில் விவாதம் வேண்டும்

## அனுமதி கோருகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

நாட்டில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் காணாமற்போதல், கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக, நாடாளுமன்றில் விவாதமொன்றை நடாத்துவதற்கான அனுமதியை சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் ஐ.தே.க. கோரியுள்ளது.

இந்த விவாதத்தை நடாத்துவதற்கான அனுமதியை வழங்கக் கோரி எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக நாட்டில் கடத்தல் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதாகவும், எனவே இது தொடர்பாக அவசரமாக விவாதம் நடத்த வேண்டியுள்ளதாகவும் ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

# கூட்டமைப்பின் நிபந்தனை; ஆச்சரியம் என்கிறார் டலஸ்



(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம் பெறுவதற்கு நிபந்தனை விதிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுகின்றமை ஆச்சரியமளிக்கின்றது. தெரிவுக் குழுவானது நாடாளுமன்றத்தின் ஒரு அங்கமாகும்.

தெரிவுக்குழுவுக்கு நிபந்தனை விதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற செயற்பாடுகளில் பங்கேற்கவும் நிபந்தனை விதிக்குமா? என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும கேள்வியெழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் சில நிபந்தனைகளுடன் கலந்துகொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவுள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெவித்துள்ளமை குறித்து கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தின் மீது நாம் வைத்துள்ள நம்பிக்கையின் அடிப்படையிலேயே நாடாளுமனறத் தெரிவுக்குழுவை அமைதது அதனூடாக அரசியல் தீர்வைக் காண்பதற்கு முயற்சித்து வருகின்றாம். தெரிவுக்குழுவில் காணப்படும் தீர்வே யதார்த்தகரமானதாக அமையும்.

அதாவது இரண்டு கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்தும்போது நிபந்தனைகளை முன்வைக்கலாம். இரண்டு அமைப்புக்கள் பேச்சு நடத்தும் போது நிபந்தனை விதிக்கலாம் ஆனால் பொதுவான நாடாளுமன்றத தெரிவுக்குழுவில் அனைத்துக் கட்சிகளும் அங்கம் வகிக்கப் போகும் நிலையில், ஒரு கட்சி எவ்வாறு நிபந்தனை விதிப்பது? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இது குறிதத அறிவிப்பு எம்மை வியப்புக் குள்ளாக்குகின்றது.

என்ன நிபந்தனைகளை வைததிருக்கின்றனர் என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால் நாடாளுமன்ற செயற்பாட்டின் ஓர் அங்கமான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெறுவதற்கு எவ்வாறு நிபந்தனை விதிப்பது என்பதே எம்முன் இருக்கின்ற கேள்வியாகும் எனவும் அமைச்சர் அழகப்பெரும மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டுத் தலைவர்கள் இலங்கையில் தமிழ் ஈழம் அமைய வேண்டும் என்று அடிக்கடி

சுவராஜ், கடந்த மாதம் இலங்கைக்கு வந்த போதும் இந்த விடயத்தை சுட்டிக் காட்டியிருந்தார். குறிப்பாக அவர் பிரதான தமிழ் கட்சிக் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை இவ்விடயத்தில் பாராட்டி இருந்தார். சம்பந்தன் நேர்மையானவர் என்றும் அவர் பிரிவினையைக் கோரவில்லை என்றும் இலங்கையர் என்பதற்காக தாம் பெரு

யலை விளங்கிக் கொள்ளவில்லை. அதன் பின் விளைவுகளையும் அனுபவித்தார்கள்.

தாம் தொடர்ந்தும் நாட்டுப் பிரிவினையை ஆதரிக்கவில்லை என்பதை சுவராஜின் விஜயத்திற்குப் பின்னரும் சம்பந்தன் எடுத்துக் காட்டினார். கடந்த மே தினத்தன்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் யாழ்ப்பாணத்தில் தேசியக் கொடியை தூக்கி அசைத்து தென் பகுதியிலும்

# அரசாங்கத்தின் விருப்பத்துக்குரியவர்களான மாவையும் சுரேஷும்!



- எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து.

கோருவதை அண்மையில் இந்திய நாடாளுமன்ற தூதுக் குழுவொன்றுக்கு தலைமை தாங்கி இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் விமர்சித்துள்ளர். தமது அண்மைய இலங்கை விஜயத்தின் போது தாம் சந்தித்த இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் பிரிவினையை கோரவில்லையென்றும் ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு பெற வேண்டும் என்பதே அவர்களது அவாவாக இருக்கிறது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மைப் படுவதாக அவர் கூறியதாகவும் சுவராஜ் கூறியிருந்தார்.

சம்பந்தனின் இந்த நிலைப்பாட்டை வைத்து அவரைப் பாராட்டியதன் மூலம் இலங்கையில் பிரவினையை ஏற்கவில்[illegible] என்ற தமது நிலைப்பாட்டை இ[illegible] மீண்டும் எடுத்துக் காட்டியு[illegible]து. இதற்கு முன்னரும் பல முறை இந்தியா இந்த நிலைப்பாட்டை நேரடியாகவும் சூசகமாகவும் கூறியிருந்த போதிலும் இலங்கை தமிழ் தலைவர்கள், குறிப்பாக தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர்கள் அதன் பாரதூரத்தை விளங்கிக் கொள்ளவில்லை. அதாவது அவர்கள் பூகோள அரசி

அவர் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

சம்பந்தன், சிங்கக் கொடியை ஏந்தியதை அவரது கூட்டமைப்பை சேர்ந்த சிலர் ஏற்றுக் கொள்ளவில்லை என்று ஆரம்பத்தில் செய்தி வெளியாகியது. சம்பந்தன் தேசியக் கொடியை உயர்த்தியதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்டதாக செய்தி வெளியாகியிருந்தது.

அவர் மன்னிப்புக் கேட்ட செய்தி நிச்சயமாக அரசாங்கத்தை கவர்ந்திருக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் கருத்தொற்றுமை இல்லை என்பதை இந்தச் செய்தி எடுத்துக் காட்டுவதனாலும், சம்பந்தன் தேசியக் கொடியை உயர்த்தியதனால் ஐ.தே.க. அரசியல் இலாபம் அடையலாம் என்பதனாலுமே அரசாங்கம் மாவை சேனாதிராசாவின் கூற்றை விரும்பும்.

இதற்கு முன்னரும் முக்கியமானதோர் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது உட்கட்சி கருத்து முரண்பாட்டை உலகுக்கு காட்டிக் கொண்டது. கடந்த மார்ச் மாதம் அமெரிக்கா இலங்கை தெடர்பாக ஐ.நா. மனித உரிமை பேரவையில் பிரேரணை கொண்டு வந்த போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜெனிவா சென்று பிரேரணைக்கு ஆதரவு தெரிவிக்கத் திட்டமிட்டு இருந்தது. பின்னர் நாட்டு நிலைமையைக் கருத்திற் கொண்டு சம்பந்தன் உட்பட சில தலைவர்கள் இந்த முடிவைக் கைவிட்டனர். இதனை அக்கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன்

பகிரங்கமாக விமர்சித்தார். இதுவும் அரசாங்கத்தை கவர்ந்திருக்கும்.

பிளவுகள் எல்லாச் சமூகங்களுக் குள்ளும் இருந்த போதிலும், தமிழர்கள் மத்தியிலான பிளவுகள் தேசிய நல்லிணக்கத்தையே பாதிக்கின்றது எனலாம். ஏனெனில், முப்பதாண்டு கால போருக்கு தமிழ் - சிங்களப் பிணக்கே காரணமாகியது. இப்போது தமிழர்கள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கேட்கும் போது ஆட்சியாளர்கள் அதனைத் தட்டிக் கழிக்க, தமிழர்களிடையிலான பிளவுகள் வழி செய்கின்றன.

தமிழர் ஐக்கியம் இந்த விடயத்தில் முக்கியமானதாக இருந்த போதிலும், அவர்களது அரசியல் நிலைப்பாடு நியாயமாக இருந்தால் மட்டுமே நல்லிணக்கம் சாத்தியமாகும். தனி நாட்டுக் கோரிக்கையோ முஸ்லிம்களைப் புறக்கணிக்கும் தீர்வோ ஒருபோதும் நல்லிணக்கத்திற்கு வழி வகுக்காது. தனி நாட்டுக் கோரிக்கை தலைதூக்கும் போது சிங்களவர்கள் மத்தியில் வாழும் முற்போக்கு கருத்துள்ளவர்களும் அசௌகரியத்துக் குள்ளாக்கப்படுகிறார்கள்.

தமிழர் ஐக்கியம் என்று வரும் போது அது தமிழ்நாட்டு மக்களினதும் புலம்பெயர் தமிழர்களினதும் கருத்துக்களையும் உள்ளடக்கும். தமிழ்நாடு உட்பட வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் தனி நாடு கேட்கும் போது ஆட்சியாளர்களும் சிங்கள மக்களும் உள்நாட்டு தமிழர்களையும் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பது நியாயம் இல்லாவிட்டாலும் சகஜம். அது நல்லிணக்கத்திற்கு சாதகமான நிலைமை அல்ல. எனவே சுவராஜின் விமர்சனத்திலும் அர்த்தம் இல்லாமலில்லை.


**தூ**க்கம் ஏன் ஏற்படுகிறது என்று பல விஞ்ஞானிகள் பல ஆய்வுகளை நடத்தி, தாங்கள் கண்டறிந்த உண்மைகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

நம் உடலில் உள்ள உறுப்புகள் அனைத்தையும் அடக்கி ஆள்வது மூளை. நரம்பு மண்டலத்தில் முக்கிய உறுப்பும் மூளையே. நம் உடலின் உள்ளும், புறமும் ஏற்படும் உணர்ச்சிகள் அனைத்தும் நரம்புகளின் வழியே மூளைக்குச் செல்கின்றன.

நமது உடலின் தூக்கத்தைக் கட்டுப்படுத்தும் பகுதி இருப்பதாக ஒரு சில விஞ்ஞானிகள் கூறுகின்றனர். சிலரோ, நரம்புக் கூட்டுப் பகுதிகளில் எதிர்ப்பு ஏற்பட்டு, செய்திகள் விரைவாகச் செல்வதற்குத் தடை ஏற்படுவதால் தூக்கம் வருகிறது என்கின்றனர்.

இன்னும் சில விஞ்ஞானிகளோ, நாம் தினமும் செய்யும் வேலையின்

**பா**ம்புகள், விஷப் பற்களை உட்பக்கம் வாயில், மடக்கி வைத்திருக்கும். கடிக்கும் போது, அவைகளை வெளிப்பக்கம் நீட்டி, எதிரியின் உடம்பில் குத்தும். பற்கள் உடலில் நுழைந்தவுடனே, விஷ சுரப்பிகள் சுரக்கும். அப்போது, விஷம்



# பாம்பு விஷம்

நாளத்தின் வழியாக பற்களின் துவாரத்திலிருந்து, எதிரியின் உடலில் பாய்ந்து விடும். இஞ்ஜெக்ஷன் கொடுக்கும் ஊசியில் உள்ள துவாரம் போலவே, ஒவ்வொரு பற்களிலும் விஷம் வெளியேறுவதற்கு துவாரம் உண்டு.

பாம்பின் விஷம், இரத்தத்தில் கலந்தால் தான், உயிருக்கு ஆபத்து. பன்றியை பாம்பு கடித்தால், விஷம் உடனே அதன் இரத்தத்தில் கலப்பதில்லை. ஏனெனில், பன்றிக்கு உடலில் கொழுப்பு அதிகமாக இருக்கும். கொழுப்பில், அந்த விஷம் தங்கி, சக்தியில்லாமல் போய் விடும். இக்காரணத்தால் தான், பன்றிகள், பாம்புக் கடியினால் இறப்பதில்லை.

-"மூலிகை மணி" இதழிலிருந்து...

# ஆடுகளை குஷிப்படுத்த ஆடம்பர ஹோட்டல்

**நா**ய், பூனை ஆகியவற்றை செல்லப் பிராணிகளாக வளர்க்கும் நடைமுறை, எல்லா நாடுகளிலும்தான் உண்டு. ஆனால் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நாய், பூனை போன்ற செல்லப் பிராணிகளுக்கென தனியாக தங்கும் விடுதிகள், ஹோட்டல்கள் உள்ளன. ஜப்பானிலும், இதுபோன்ற கலாசாரம் உருவாகியுள்ளது. ஆனால், அங்கு நாய், பூனை ஆகியவற்றுக்கு பதிலாக, ஆடுகளை செல்லப் பிராணிகளாக வளர்க்கின்றனர். ஜப்பானைப் பொறுத்தவரை, ஆடுகளைச் செல்லப் பிராணிகளாக வளர்ப்போர், சமூகத்தில் மிகப் பெரிய அந்தஸ்துடன் உள்ளவர்களாக மதிக்கப்படுகின்றனராம்.


இதுபோன்ற ஆடம்பரவாசிகளின் ஆடுகளைத் தங்க வைப்பதற்காகவே, யுகாவாரா




என்ற இடத்தில், சொகுசு ஹோட்டல் ஒன்று சமீபத்தில் திறக்கப்பட்டுள்ளது. ஆடுகளுக்கு மட்டுமே இங்கு அனுமதி. மற்ற எந்த செல்லப் பிராணிகளையும் அனுமதிப்பது இல்லை. ஆடுகள் தங்குவதற்காக, குளு குளு வசதியுடன் கூடிய, 30 சொகுசு அறைகள் இங்கு உள்ளன. ஆடம்பர படுக்கை, ஆடுகளை பராமரிப்பதற்கான பணிப்பெண்கள் என அனைத்து வசதிகளும் இங்கு உள்ளன. கோடீஸ்வர ஜப்பானியர்கள், தங்கள் ஆடுகளுடன் வந்து இங்கு தங்குகின்றனர். கொடுத்து வைத்த ஆடுகள்!

**ஐ**சக் அசிமோவ் தன் மனைவியுடன் நாடகம் பார்க்கப் போயிருக்கிறார். நாடகம் முடிந்ததும் அவர்கள் ஹோட்டலுக்கு சென்றுள்ளனர். அதே ஹோட்டலுக்கு அந்த நாடகக் குழுவினரும் வந்திருந்தனர். அவர்களுடன் பேச வேண்டும் என அசிமோவின் மனைவிக்கு நப்பாசை. கணவரிடம் கூறியிருக்கிறார். "எனது மனைவிக்கு என் பிரபலத்தின்மேல் அபார நம்பிக்கை" என விரக்தியுடன் எண்ணிய அசிமோவ் வேறு வழியின்றி தன் மனைவியுடன் சென்று அவர்களிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறார். அவர் பயந்தது போலவே அசிமோவ் என்னும் பிரசித்தி பெற்ற எழுத்தாளரை அவர்கள் அறிந்திருக்கவிலை. இவர் "நான் அசிமோவ்" எனக் கூறிக்கொள்ள, "அதுக்கு இப்போ என்ன செய்யனுங்கறீங்க" என்னும் முகபாவத்தில் அவர்கள் இருந்திருக்கின்றனர்.

அசிமோவுக்கு முகத்தில் டின் டின்னாக அசடு வழிய ஆரம்பித்திருக்கிறது. பேசாமால் பின்வாங்க எண்ணும் போது திடீரென நாடகக் குழுவின் தலைவர் அசிமோவின் மனைவியைப் பார்த்து "நீ ஜேனட்தானே, எங்கே இந்தப் பக்கம்?" எனக் குதூகலத்துடன் கேட்டபடி வந்திருக்கிறார். பிறகு தாம் இருவரும் தூரத்துச் சொந்தக்காரர்கள் என்பதையும், சிறுவயதில் ஜேனட்டுடன்




# ஐசக் அசிமோவ்

விளையாடியதையும் நினைவுகூர்ந்து மகிழ ஆரம்பித்துவிட்டார்.

பிறகென்ன, இருவரும் நன்கு தெரிந்தவர்கள் என்னும் முறையில் ஜேனட்டும் அவரும் பேச ஆரம்பித்தனர். ஜேனட் அசிமோவை தனது கணவர் என அறிமுகப்படுத்த அவரையும் ஆட்டத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இது பற்றி அசிமோவ் எழுதினார், "ஒரு பிரசித்தி பெற்றவரது கணவராக இருப்பதன் அருமையை அன்று அறிந்து கொண்டேன்" என.

# காதல் மன்னன்



நாளெல்லாம் சேற்றில் உழல்கிற விவசாயிக்குக் கிடைப்பதைவிட பல ஆயிரம் மடங்கு மரியாதையும் பணமும் புகழும் நடிகர்களுக்குக் கிடைத்துவிடுகிறது. ஆனால் அதே சமயத்தில் அதற்கு அவர்கள் கொடுக்கிற விலை தான் அவர்களைப் பற்றி வெளியாகிற வதந்திகள்.

ஒரு சாமானியனின் அந்தரங்கம் வெட்டவெளிச்சமாகிறபோது அந்தச் சாமானியனைத் தெரிந்த எல்லோரும் பரவசம் ஊட்டுவதாக இருக்கிறது. நாடறிந்த பிரபலமாக இருந்தால் அவர்களின் அந்தரங்கம் நாட்டையே பரவசமாக்குகிறது.

அடுத்தவர் வீட்டு ஜன்னலை எட்டிப் பார்ப்பதில் மனிதனுக்குள்ள ஆர்வம் மிகவும் தொன்மையானது. ஆதியில் அது அடுத்தவர் குகையை எட்டிப் பார்ப்பதாக இருந்திருக்கக் கூடும்.

காதல் மன்னன் என்று ஜெமினியைச் சொல்வார்கள். பெண்களைக் கிண்டலடிப்பதில் அவருக்கு அலாதி ஆர்வம் இருந்தது. ஜெமினி கணேசனை நண்பர் பேட்டி காணச் சென்றார். ஜெமினியிடம் எடுத்த பேட்டியை எழுதித் தந்துவிட்டு அவர் சொன்னதில் எழுதாத பகுதிகளை என்னிடம் பகிர்ந்து கொண்டார்.

அப்போது ஜெமினி நடித்துக் கொண்டிருந்த அதே படத்தில் மந்த்ரா என்ற இளம் நடிகை ஒருவரும் நடித்துக் கொண்டிருந்தார். பேட்டியின் நடுவே அந்த நடிகையை ஓரக் கண்ணால் கவனித்தபடியே இருந்தாராம் ஜெமினி. "அந்தப் பொண்ணுகூடவே பாதுகாப்புக்கு வந்திருக்கிற அவன் அப்பனைக் கொஞ்சம் பாரேன்" என்றாராம். "ரொம்ப கஷ்டமான வேலைதான் இல்ல? கொஞ்சம் அசந்தா கொத்திக்கிட்டுப் போயிடுவாங்கன்னு பயந்து சாகறான்" என்றும் கூறியிருக்கிறார்.

நடிகையின் பாதுகாப்புக்கு வருகிற அப்பாவின் பாடு எத்தகையது என்று விளக்கியிருக்கிறார். இந்த மாதிரி சுமார் நூறு அப்பாக்களையாவது அவர் பார்த்திருப்பார். அவரை மாதிரி காதல் மன்னன்களிடம் இருந்து பெண்களைக் காப்பாற்ற அப்பாக்களுக்கு சிரமமமாகத்தான் இருந்திருக்கும்.

பேச்சின் முடிவில் வாழ்வின் சூத்திரம் போல அவர் சொன்ன செய்தி:

"ஒரு மனிதனுக்கு எப்போது காதலில் நாட்டம் குறைந்து போகிறதோ அப்போதே அவன் வாழத் தகுதியில்லாதவன் ஆகிவிடுகிறான்."



அதன் பிறகு ஓராண்டு கழித்து அவர் இன்னொரு பெண்ணை மணப்பதாகச் செய்திகள் வெளியாகின. பெரும் பஞ்சாயத்துகள்... அந்தப் பெண்ணிடமிருந்து அவரை ஏறத்தாழ மீட்டெடுத்தனர். அதற்குப் பின் அவர் தன் மகளின் ஜி.ஜி. மருத்துவமனையின் வாசலில் உட்கார்ந்து மாலை வேளைகளில் போகிற வருகிறவர்களை பார்த்துக் கொண்டிருந்தார். அதற்குப் பின் சில நாள்களில் தம் எழுபத்திச் சில்லறை வயதில் காதலிப்பதை நிறுத்திக் கொண்டார்.

# தூக்கம் நம்மைத் தழுவுவது எப்படி?

திறனால் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களாகிய இலக்ரிக் அமிலம் போன்ற உணர்ச்சியூட்டும் பொருட்கள் வெளியேற்றப்படுவதற்கு ஏற்பட்டுள்ள பழக்கம்தான் தூக்கமாகும் என்கின்றனர். இதையே நாம், களைப்பினால் தூங்கினோம் என்று சொல்கிறோம்.

நரம்பு மண்டலத்தில் உள்ள நரம்புகளின் இடையே உள்ள இணைப்புகள் தடைப்படுவதால் தூக்கம் வருகிறது என்று சில விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மூளையின் ஹைப்போதலாமஸ் பகுதியே தூக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது. எனவே இது தூக்கத்தை உண்டாக்கும் ஓர் எந்திரமாகும் என்று ஒரு சிலர் கூறுகின்றனர்.

தூக்கம், மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் அவசியமானது என்பதை நிரூபிக்க விஸ்கான்சின் மருத்துவப் பல்கலைக்கழகம் முதலில் விலங்குகள் மீது சோதனை நடத்தியது. அச்சோதனையில் தெரியவந்த உண்மை, தொடர்ந்து தூக்கம் இல்லையென்றால் விலங்குகள் இறந்துவிடும். விலங்குகளால் தூக்கமில்லாமல் அதிகபட்சம் 7 முதல் 30 நாட்கள் வரைதான் உயிர்வாழ முடியும்.

மனிதர்களுக்கும் தூக்கம் மிகவும் அவசியம். இல்லாவிட்டால் நோய்வாய்ப்பட்டு இறக்க நேரிடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். மனிதன் அன்றாடம் 8 மணி நேரமாவது நன்றாகத் தூங்க வேண்டும் என்று கண்டுபிடித்துக் கூறப்பட்டுள்ளது.

குழந்தைகள் உடல் வளர்ச்சிக்கும், செல்கள் புதுப்பிக்கப்படுவதற்கும் அதிக நேரம் தூங்க வேண்டும். மூளைக்கு வேலை கொடுப்பவர்கள், உடலுக்கு வேலை கொடுப்பவர்களை விட சற்றுக் குறைவாகத் தூங்க வேண்டும் என்பதும் விஞ்ஞானிகளின் கருத்து.

அமெரிக்க விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் தினசரி நான்கு அல்லது ஐந்து மணி நேரம்தான் தூங்குவார்.

## நல்ல தூக்கத்துக்கு...

"நல்லாய்த் தூங்கி நிறைய நாளாச்சு" என்று பலரும் புலம்புவதைக் கேட்டிருக்கிறோம். ஆனால் நிம்மதியான ஆழ்ந்த தூக்கமின்மைக்கு நாம்தான் காரணம். நல்ல தூக்கத்துக்கு நிபுணர்கள் வலியுறுத்தும் விஷயங்கள்...

தினமும் இரவு ஒரு குறிப்பிட்ட நேரத்தை உறங்கச் செல்லும் நேரமாகக் கடைப்பிடிக்க வேண்டும். அதைத் தவறாமல் பின்பற்ற வேண்டும்.

எளிதில் ஜீரணமாகும் மிதமான உணவே இரவில் நல்லது. மாறாக, வயிறு முட்ட அடைத்தாலோ, ஒவ்வாத உணவைச் சாப்பிட்டாலோ, வயிறு "கடமுடா" பண்ணும். தூக்கம் தொலையும்.

டி.வி., கணினி, மடிக்கணினி, செல்போன் என்று மின்னணுத் திரைகளின் முன் அதிக நேரத்தைக் கழிக்கக் கூடாது. அவை தூக்கத்தைப் பாதிக்கும். தூங்கப் போகும் சில மணி நேரத்துக்கு முன்பே இவற்றுக்கு விடை கொடுத்துவிட வேண்டும்.

படுக்கையறை, படுக்கைச் சுத்தம் முக்கியம். அமைதியும் அவசியம். மின்விசிறி கூட சற்று அதிகம் சத்தம் போட்டால் தூக்கம் கெடும்.

எல்லாவற்றிலும் முக்கியம், "நாளைய கவலைகளை நாளை பார்த்துக்கொள்வோம்" என்ற எண்ணம். தேவையற்ற குழப்பமான எண்ணங்கள், தூக்கத்தைத் துரத்தும்.



# மாமியாரைப் போல் மருமகள்!



இங்கிலாந்து இளவரசி கேட் வில்லியம், அங்குள்ள இளம் பெண்களின் ரோல் மொடலாக உருவெடுத்துள்ளார். தன் மாமியாரும், மறைந்த இளவரசியுமான டயானாவைப் போல், கேட் அணியும் உடைகளும், அவர் அணியும் அணிகலன்களும், இங்கிலாந்தில் உடனுக்குடன் பிரபலமாகி விடுகின்றன.

கேட்டின் ஆடைஅணிகலன்களை, இங்கிலாந்து இளம் பெண்கள் மட்டுமல்லாமல், அரச குடும்பத்தைச் சேர்ந்த இளம் பெண்களும் இப்போது பின்பற்றுகின்றனர். இளவரசர் சாள்சின் இளைய சகோதரர் அண்ட்ரூவின் மகளும், இளவரசியுமான பெட்ரைஸ், பொது நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் போது, தன் அண்ணி கேட் அணிவதைப் போன்ற உடைகளை அணியத் தொடங்கியிருக்கிறார்.

சமீபத்தில் நடந்த ஒரு விழாவில், தன் பாட்டியும், ராணியுமான எலிசபெத்துடன் பெட்ரைஸ் காரில் இருந்து இறங்கியதைப் பார்த்தவர்கள் ஆச்சரியம் அடைந்தனர். இதற்கு முன், ஒரு விழாவில் பங்கேற்பதற்காக, கேட் அங்கு வந்தபோது, எந்த உடையை அணிந்திருந்தாரோ, அதே போல் உடையை அணிந்து, ஒய்யாரமாக நடந்து வந்தாராம் பெட்ரைஸ். முழங்காலுக்கு சற்று மேல் வரை தெரியும் வகையிலான கவுன், வித்தியாசமான தொப்பி என, கேட் போலவே வந்திருந்தாராம். கேட்டால், "ஃபாஷன் விவகாரங்களில் என் அண்ணி தான், எனக்கு குரு" என்கிறாம்.

இந்த விழாவில் பெட்ரைஸ் அணிந்திருந்த தொப்பியின் விலை, 75 ஆயிரம் ரூபாவாம். அப்படியானால், அவர் அணிந்திருந்த உடையின் விலை?

# கொடுக்கல் வாங்கல்

பல திசைகளிலுமுள்ள பல மொழிகளில் இருந்தும் வந்து, வழங்கி நிலைக்கும் சொற்களை, இலக்கணத்தில் திசைச் சொல் என்கின்றனர்.

இதோ சில உதாரணங்கள்:-

**சாவி - போர்த்துக்கீசிய மொழி**
**சிலுவை - சிரிய மொழி**
**தகராறு - அரபு**
**சவாரி - பாரசீகம்**
**சேனை - சமஸ்கிருதம்**
**துப்பாக்கி - ஹிந்தி**
**செவிடு - தெலுங்கு**
**தண்டால் - கன்னடம்.**

அதைப் போலவே, தமிழ் மொழியில் இருந்து வேறு மொழிகளில் சென்று வழங்கி நிலைத்துள்ள சொற்களும் உண்டு. நம்மிடமிருந்து ஆங்கிலத்துக்குச் சென்ற சொற்கள் சில:-

**மிளகு தண்ணீர் - முளிகாடாணி**
**சுருட்டு - செரூட்**
**கறி - கறி**
**கட்டுமரம் - கட்டமரான்**
**வெற்றிலை - பெடல்**
**கயிறு - கயர்**
**மண்வெட்டி - மமட்டி**
**மாங்காய் - மாங்கோ**

# இலங்கையருக்கு வேலை வாய்ப்பு; நான்கு நாடுகளுடன் ஒப்பந்தம்



இலங்கையர்களுக்கு தொடர்ந்தும் அதிக வேலை வாய்ப்புக்களை வழங்க இத்தாலி, ஈராக், குவைத் மற்றும் தென் கொரிய அரசாங்கங்கள் இணக்கம் தெரிவித் துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு நலனோம்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இதற்கென, மேற்படி நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தங்கள் நீடிக்கப்பட்டி ருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை ஆண்களுக்கென அதிக வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளவும் அதிக சம்பளத்துடன் கூடிய தொழில்களுக்கு இலங்கையர்களை அமர்த்துவது தொடர்பிலும் அந்நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

வெளி நாடுகளில் தொழில் புரியும் இலங்கை யர்களின் நலன்புரியினை உறுதிப்படுத்தும் நோக் கில் அமைச்சர் டிலான் பெரேரா தலைமையில் ஜோர்தான் நாட்டின் 'அம்மான்' நகரில் இருநாள் உத்தியோகபூர்வ மாநாடு நடைபெற்று வருகிறது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம் மாநாட்டில் அபுதாபி, ஓமான், குவைத், பஹ்ரேன், மலேசியா, சிங்கப்பூர், சவூதி அரேபியா, கட்டார், லெபனான், சைப்பிரஸ் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் இலங்கை தூதுவர்கள், நலன் புரி நிலைய அதிகாரிகள், ஐ.எல்.ஓ. மற்றும் ஐ.ஓ.எம். ஆகிய சர்வதேச அமைப்புகளின் பிரதி நிதிகளும் கலந்துகொண்டுள்ளனர்.

இதேவேளை, வீட்டுப் பணிப்பெண் தொழி லுக்கும் மேலதிகமாக அதிக சம்பளத்துடன் கூடிய தாதியர், தாதி உதவியாளர்கள் உள்ளிட்ட பல வேறு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள் வது தொடர்பிலும் அந்நாட்டின் உயர்மட்ட அதி காரிகளுடன் பேச்சு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் கீழ், முதற் கட்டப் பேச்சுவார்த்தை விரை வில் ஓமான் நாட்டில் நடத்தப்படவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வருடந்தோறும் எமக்கு கிடைக்கும் வெளி நாட்டு அந்நிய செலாவணியின் தொகை அதிக ரித்துச் செல்கின்றது. 2011 ஆம் ஆண்டில் 5.1 பில்லியன் டொலர், எமக்கு அந்நிய செலாவணி யாக கிடைத்துள்ளது.

உலக நாடுகளுக்கு வருடந்தோறும் 450 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அந்நிய செலாவணி கிடைக்கின்றது. இதில் 5 பில்லியன் இலங்கை தனக்கு உரித்தாக்கியுள்ளது. பிலிப் பைன்ஸ் வருடந்தோறும் 19 பில்லியன் அந்நிய செலாவணியை பெறுவது குறிப்பிடத்தக்கதென வும் அமைச்சர் கூறினார்.

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள் புள்ளியிடலை பகிஷ்கரிக்க முடிவு

(கொழும்பு)

கல்வி அமைச்சின் செயலாள ருடனான அண்மைய மோதலை யடுத்து கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சை விடைத் தாள் களுக்கு புள்ளியிடுதல் தொடர் பான பணிகளை பகிஷ்கரிக்கப் போவதாக பல்கலைக்கழக விரி வுரையாளர்கள் நேற்று முன் தினம் தெரிவித்தனர்.

தமது பிள்ளைகளின் பாட சாலை அனுமதி தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரை சந்திக்கச் சென்ற பல்கலைக்கழக விரிவுரையாளர் வெளியேற்றப் பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு செய் யப்பட்டுள்ள பின்னணியிலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட் டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையா ளர்களையிட்டு தனக்கு அக் கறை இல்லை என கல்வி அமைச் சின் செயலாளர் அண்மையில் கூறினார். எனவே நாமும் பாட சாலை விடயங்களிலிருந்து வில கத் தீர்மானித்திருக்கின்றோம் என பல்கலைக்கழக ஆசிரிய சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் நிமல் ரஞ்சித் தேசசிறி தெரிவித்தார்.

கலைத்திட்டம், புள்ளியிடல் மற்றும் மேற்பார்வை ஆகிய பாடசாலையுடன் தொடர்புடைய வேலைகளில் நாம் ஈடுபடமாட் டோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சில பல்கலைக்கழகங்களை சேர்ந்த விரிவுரையாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண் டும் எனக் கருதுகின்றனர். இது தொடர்பில் பல்கலைக்கழக ஆசிரிய சங்கங்களின் சம்மேள னத்தின் செயற்குழு அடுத்த வாரம் கூடி முடிவு எடுக்கும் என நிமல் ரஞ்சித் தேசசிறி மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் தற்கொலைதாரி அமெரிக்காவிடம் தஞ்சக் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தற்கொலைப் போராளி ஒருவர் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், அமெரிக்கத் தூதர கத்தில் புகலிடம் கோரியுள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் [illegible]நாட்டு இராஜாங் கத் திணைக்கள[illegible]க்கு அனுப்பி வைத்திருந்த குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி ஜேலன்ஸ்டாட்டினால் இந்த தகவல் அனுப்பி வைக்கப்பட் டுள்ளது. தான் ஓர் புலிகளின் தற் கொலைப் போராளி எனத் தெரிவித்தே ஒருவர் அமெரிக்காவில் புகலிடம் கோரி யதாகத் தெரி விக்கப்பட்டுள் ளது.

மட்டக்களப்பு காத்தான் குடி யைச் சேர்ந்த ஜீவரட்ணம் என தனனை அடையாளப் படுத்திக் கொண்ட நபரே அடைக்கலம் கோரியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. புலிகள் அமைப்பிலிருந்து விலகி, அமெரிக்கா செல்ல உதவி புரியுமாறு தூதரகத்தில் அவர் கோரியுள்ளார்.

கருணா மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரை படுகொலை செய்வதற்காக தம்மை புலிகள் தயார்படுத் தியதாகக் குறித்த நபர் குறிப்பிட்டுள்ளார். தனது பதினைந்தாவது வயதில் சுய விருப்பத்தின் அடிப்படையில் தாம் விடு தலைப்புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளின் பின்னர் தூதரக அதி காரிகள் குறித்த நபரை பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது

# 14 வயதுச் சிறுமிக்கு இரு குழந்தைகள் பிறப்பு



(கொழும்பு)

மாத்தளை - கலேவெல - தேவ"ஹவ பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயதுச் சிறுமி ஒருவர் ஒரே சூலில் இரு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத் துள்ளதாக தெரியவந்துள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

14 வயதுடைய குறித்த சிறுமி தான் வசிக்கும் பிரதேச இளைஞர் ஒருவருடன் காதல் புரிந்து வந்துள்ளார்.

இதனை அறிந்த பெற்றோர் அவர்களுடைய காதலுக்கு அனுமதி அளித்ததோடு இவ் விருவரையும் கணவன் - மனை வியாக வாழவும் அனுமதித் துள்ளனர்.

இதன் விளைவாக குறித்த 14 வயதுச் சிறுமி கர்ப்பமாகி கடந்த 8 ஆம் திகதி மாத்தளை வைத்தியசாலையில் இரு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்துள் ளார்.

பிறந்த குழந்தைகள் நிறை குறைவாக இருந்தாலும் ஆரோக் கியமாக இருப்பதாக வைத்திய சாலைத் தகவல்கள் தெரிவிக் கின்றன. இந்த விடயம் குறித்து கலே வெல பொலிஸார் மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

# பல்கலைக்கழக காதலும் சட்டவிரோதமென மாற்றம்

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களில் காதலிப்பதும் தற்போது ஒழுக்க விரோத செயற்பாடாக மாற்றப் பட்டுள்ளது எனவும் காதலித் தால், பெண்ணின் கன்னித் தன்மை சோதனை செய்யப்படு வதாக அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்கள் என்பது ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கள் இல்லை. அவை மாண வர்கள் கேந்திர கல்வி நிறுவனங் கள். இதனால் மாணவர்களை பலவந்தமாக விரிவுரைகளில் கலந்து கொள்ள செய்யக் கூடாது. மாணவர்கள் தேவை யான அறிவை தேடுவதற்காக வழிகாட்டப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

விரிவுரைகளில் 80 வீதம் கலந்துகொள்ளாத மாணவர்கள் மற்றும் ஒழுக்கமின்றி செயற் படும் மாணவர்களுக்கு மாபொல புலமைப்பரிசில் வழங்கப்பட மாட்டாது என உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளமை தொடர்பாக கருத்து வெளியிடும் போதே சஞ்சீவ பண்டார இத னைக் குறிப்பிட்டுள்ளார்.

# குருநகர் வீடமைப்புத் திட்டத்தின் புனரமைப்புப் பணிகள் அடுத்தமாதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் குருநகர் தொடர்மாடி வீடமைப்புத்திட்டத் தினை நவீனமயப்படுத்தி மீள நிர்மாணிப்பதற்காக வீடமைப்பு அமைச்சு 70 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

1994 ஆம் ஆண்டு யாழ் குருநகர் தொடர்மாடி வீடமைப் புத் திட்டம் திறந்து வைத்து மக்களிடம் கையளிக்கப்பட்டது. இவ் வீடமைப்புத் திட்டம் நிர் மாணிக்கப்பட்டு 18 வருடங்கள் ஆகியும் தற்பொழுது மக்கள் வாழ முடியாத நிலையில் உள்ள னர்.

இத் திட்டத்தில் 160 வீடுக ளில் 160 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவ் வீடமைப்புத் திட்டம் 8 வீடமைப்புத் தொகுதி களாக உள்ளன. கடந்த காலத் தில் நடைபெற்ற மோதலின் போது இவ் வீடமைப்புத் திட்ட கட்டடங்கள் அழிந்துள்ளன. கடந்த 4 மாதங்களுக்கு முன் அமைச்சர் விமல் வீரவன்ச யாழ்ப்பாணத்திற்கு வந்தவேளை இவ் வீட மைப்புத் திட்டத்தினை அமைச் சின் அதிகாரிகளுடன் பார்வை யிட்டார்.

இவ் விஜயத்தின்போது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் திட்ட முகாமை யாளர் மற்றும் பொறியிய லாளர்களுக்கு இவ் வீடமைப்புத் திட்டத்தினை மீள் புனர்நிர் மாணம் செய்வதற்காக திட்ட அறிக்கை சமர்ப்பிக்கும் படி அதிகாரிகளிடம் பணிப்புரை விடுத்திருந்தார்.

அதற்கமைய அமைச்சின் நிதியில் இருந்து 70 மில்லியன் ரூபா ஒதுக்கிக் கொடுத்துள்ளார். முதல் கட்ட புனர்நிர்மாண வேலை கள் அடுத்த மாத முற்பகுதியில் அமைச்சர் விமல் வீரவன்சவி னால் ஆரம்பித்து வைக்கப் படும்.

இவ் வீடமைப்புத் திட்டத்தில் அழிவுற்றுள்ள பகுதிகளான கழிவு நீர் அகற்றுதல், வடிகால மைப்புத் திட்டம், குடிநீர், மின் சாரம், கழிவு அகற்றும் திட்டம், கட்டடங்கள் புனரமைப்பு போன்ற நிர்மாணப்பணிகள் இடம்பெற வுள்ளது.

# பாடசாலை செல்லாத மாணவர்; நடத்தப்படுகிறது கணக்கெடுப்பு

(கொழும்பு)

பாடசாலைக்குச் செல்லாத மாணவர் பற்றிய கணக்கெடுப்பு நடாத்தப்பட்டு வருகிறது.

தொடர்ச்சியாக 03 மாதங்கள் எதுவித அறிவித்தலுமின்றி பாடசாலைக்கு சமுகமளிக்காத மாணவரை பாடசாலை செல் லாத மாணவர் என்ற பகுதிக் குள் உள்ளடக்கப்படுவர்.

யுனிசெவ் மற்றும் சேவ்த சில்றன் போன்ற அமைப்புகள் அரசாங்கத்திடம் இம்மாணவரின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறி இவர்களினால் பிற்காலத்தில் நாட்டுக்கு பெரும் ஆபத்து என்ற விடயத்தையும் புள்ளிவிபரவியல் ரீதியாக தெரிவித்துள்ளன.

இதனையடுத்து அரசாங்கம் இவ்வாறான மாணவர் விபரங் களை அனைத்து கல்வித் திணைக் களம் ஊடாகவும் கணக்கெடுத்து வருகிறது.


இதற்கான பயிற்சிப்பட்டறை கள் வலயக் கல்விப் பணிப் பாளர்கள் முதல் அதிபர்கள் வரை நடாத்தப்பட்டு ஆய்வுக் குரிய வினாக்கொத்து வழங்கப்பட் டது. அதிபராலும், கல்விப் பணி மனையாலும் உறுதிசெய்யப் பட்ட தொகையை பாடசாலை செல் லாத மாணவர்கள் தொகை யாகக் கணிக்கப்படவுள்ளது.

இதற்காக ஒவ்வொரு பாட சாலையையும் மையமாக வைத்து ஊட்டற் பிரதேசம் வரையறை செய்யப்பட்டு இக்கணக்கெடுப்பு நடாத்தப்பட்டு வருகிறது.


முதலில் மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக பாடசாலைக்கு வராத 6-14 வயதுக்குட் பட்ட ஆண் பெண் இருபாலாரை யும் இனங்கண்டு புள்ளி விப ரப்படுத்துவதே இலக்காகும்.

இதில் இடைவிலகல் (sprop yput) பற்றிய கணிப்பு தற் போதைக்கு எடுக்கப்படமாட் டாது.


பாடசாலை செல்லாதோர் தொகை பற்றிய கணக்கெடுப்பு மத்திய கல்வியமைச்சுக்கு இன் னும் ஒரு வாரத்துள் சமர்ப்பிக்கப் பட வேண்டுமென அறிவிக்கப் பட்டுள்ளன.

36) 


1)　2)　3)　4)

37) 

1)　2)　3)　4)

38) 

1)　2)　3)　4)

39) 

1)　2)　3)　4)

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

40) பெருந்தெருவில் பயணம் செய்யும் பேருந்தில் பெரும்பாலும் காணக்கூடியது.
1. சாரதி-பயணிகள்-பிச்சைக்காரர்கள்　2. நடத்துநர்-சாரதி-இசை　3. ஆசனங்கள்-சாரதி-நடத்துநர்

41) சமுத்திரத்தில் எப்பொழுதும் காணக்கூடியது.
1. கப்பல், பயணிகள், பிச்சைக்காரர்கள்　2. மீன், மீனவர், கரை　3. நீர், அலை, மீன்

42) பின்வரும் நிகழ்வுகள் ஒரு பிள்ளை காலையில் எழுந்து பாடசாலைக்குச் செல்வதற்குப் புறப்படும் வரை செய்து முடிக்கப்பட வேண்டிய கருமங்கள் பல உள்ளன. அவற்றுள் செய்து முடிக்கப்பட வேண்டிய கருமமும் இறுதியில் செய்ய வேண்டிய கருமமும் கீழே தரப்பட்டுள்ளன. விடுபட்ட இடங்களில் வரவேண்டிய சம்பவங்களைக் கொண்ட விடையின் கீழ்க் கீறிடுக.

A நித்திரைவிட்டெழுதல்　B........................................　C........................................
D..................................　E வீட்டிலிருந்து புறப்படுதல்

1. A உடை அணிதல்
　B முகம் கழுவுதல்
　C உணவு உண்ணல்

2. A உணவு உண்ணல்
　B முகம் கழுவுதல்
　C உடை அணிதல்

3. A முகம் கழுவுதல்
　B உடை அணிதல்
　C உணவு உண்ணல

43) ஐம்புலன்களைக் குறிப்பது.
1. மெய், வாய், கண், மூக்கு, செவி　2. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
3. ஒளி, ஊறு, சுவை, ஓசை, நாற்றம்

44) பனிக்கட்டி நீராக மாறும்போது நடைபெறுவது.
1. ஆவியாதல்　2. கரைதல்　3. ஒடுங்குதல்　4. உறைதல்





T.S. கஜன்

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

# கல்வி முரசு

வெளியீடு 67



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**கீழுள்ள வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள பந்தியிலுள்ள இடைவெளிகளுக்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

> எனது பெயர் [1] நான் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் [2] இல் கல்வி கற்கின்றேன். அடுத்து வருடம் நடைபெறவுள்ள தரம் 5 [3] பரீட்சைக்காக நான் நிறையப் பயிற்சிகள் செய்து பழகுகின்றேன்.

01) முதலாவது கூட்டுக்குப் பொருத்தமான சொல்,
1) ரவிக்குமார்　2) பவித்திரா　3) கமலன்

02) இரண்டாவது கூட்டுக்குப் பொருத்தமான சொல்,
1) தரம் 2　2) தரம் 5　3) தரம் 4

03) மூன்றாவது கூட்டுக்குப் பொருத்தமான சொல்,
1) தவணைப்　2) புலமைப்　3) மாதப்

**பின்வருவனவற்றுக்கு kg, km, Cm, m அல்லது இறாத்தல் என்பதை வெற்றிடத்தில் விடையாக அளிக்கவும்.**

04) எங்கள் தாயார் 2 ........................................................மா வாங்கினார்.

05) கொழும்பிலிருந்து கண்டிக்கான தூரம் 115 ........................................................ஆகும்.

06) என் தம்பி கடைக்குச் சென்று 3 ........................................................பாண் வாங்கினான்.

07) ஒரு அடிமட்டம் 30 ........................................................நீளம் உடையது ஆகும்.

08) தம்பிக்கு காற்சட்டை தைப்பதற்கு 1 ........................................................துணி போதுமானது.

**ஒரு கதைப் புத்தகமொன்றினது ஒரு பக்கத்தின் கிழிந்து போன மூன்று துண்டுகள் கீழே காணப்படுகின்றன. அவை இங்கு ஓர் ஒழுங்கில் தரப்படவில்லை.**

09) இந்தக் கடதாசித் துண்டுகளைச் சரியான ஒழுங்கில் வைத்தால் அதில் வாசிக்கக் கூடிய வாக்கியங்களை மீள எழுதுக.

| | | |
|---|---|---|
| மான் | கிடந்தது. | பிணமாகக் |
| தோட்டக்காரன் | விட்டான். | அதை நம்பி |
| வலையை | காகம் | அவிழ்த்தான். |
| முன் | "கா கா" | ஏற்பாட்டின்படி |
| என்று | கொடுத்தது. | குரல் |
| மான் | ஓடியது. | தம்பி |

**கீழ் உள்ள சொற்களுக்குப் பொருத்தமான எதிர்வு கூறலைத் தெரிவுசெய்து எதிர்வு கூறலுக்கு எதிரே பொருத்தமான சொல்லை எழுதுக.**

விடாமுயற்சி, களைப்பு, பூ, பரீட்சை, வானவில்

10) நீண்ட பயணத்தினால் இது ஏற்படலாம்........................................................

11) இதில் இருந்து வாசனை கிடைக்கும்........................................................

12) இது செய்வதினால் மாணவத் தேர்ச்சி அதிகரிக்கும்.........................................


13) இது மழைக்கு முன் அல்லது பின் தோன்றலாம்.........................................

14) இது உள்ளவர் வாழ்வினில் வெற்றி பெறுவார்.........................................

**ஓர் வியாபாரி தான் விற்கும் பொருள்களுக்கு நேரடியாக விலைகளைக் குறிக்காது கீழ் உள்ள அட்டவணையில் காட்டியாவாறு ஆங்கில எழுத்தின் உதவி கொண்டு குறித்தார். அவரின் குறிப்பேட்டின் படி பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

15) பின்வரும் பொருள்களின் விலை என்ன?

1) 


2) 


SKA.....................................  MQK.....................................

16) ராகுல் என்பவன் GAA எனக் குறிக்கப்பட்ட பொருள் ஒன்றை 325 ரூபா கொடுத்து வாங்கினான் எனின், இக் குறிப்பேட்டின்படி ராகுல் கூடுதலாகவா அல்லது குறைவாகவா பணம் கொடுத்துள்ளான்?
(.........................................................)

17) GCE + QIO இன் பெறுமானம் என்ன? (.........................................................)

**வெற்றுக் கூடுகளுக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.**

18) 


19) 


**பின்வரும் தனிச் சொல்லுக்கு ஏதோவொரு வகையில் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**



20) காணிக்கை
1) கோயில் உண்டியலில் போடுவது
2) குருவுக்கு சிஷ்யன் வழங்குவது.
(.........................................................)

21) தஞ்சமடைதல்
1) ஆண்டவனிடம் பக்தி செலுத்துதல்.
2) பலமுள்ளவரிடம் அடைக்கலம் கோருதல்
(.........................................................)

22) காலாவதியாகும் திகதி
1) இத்திகதிக்கு முன் பாவிக்கவும்
2) இத்திகதிக்குப் பின் பாவிக்கவும்.
(.........................................................)

**பின்வரும் வசனங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

23) பாரதியார் **பாலர்களுக்கு** பாப்பாப் பாட்டுப் பாடினார்.
1) மாணவர்களுக்கு 2) மாணவிகளுக்கு 3) சிறுவர்களுக்கு 4) சிறுமிகளுக்கு

24) ஒரு நாள் வெய்யில் **கடுமையாக** இருந்தது.
1) வேகமாக 2) அகோரமாக 3) சூடாக 4) நன்றாக

25) அவன் மிகுந்த **வெட்கம்** அடைந்தான்.
1) நாணம் 2) வெகுளி 3) அச்சம் 4) அசதி

26) தேனீ **அஞ்சாமல** மீண்டும் சிங்கத்தின் காதில் இரைந்தது.
1) வீரத்தோடு 2) சண்டித்தனமாக 3) ஆவேசத்தோடு 4) பயமின்றி

27) அவன் உங்களுடைய தோட்டத்தில் **கூலி** பெறாது வேலை செய்கின்றான்.
1) இனாம் 2) நன்கொடை 3) சம்பளம் 4) வெகுமதி

**கீழ்வரும் நிகழ்கால நிகழ்வுக்குப் பொருத்தமான எதிர்கால எதிர்பார்ப்பை அம்புக்கோட்டினால் தொடர்புபடுத்துக.**


28)

| | |
|---|---|
| 1) மழையில் நனைந்தான் | 1) புளிக்கும் |
| 2) நேற்றைய பால் | 2) செல்வந்தர் ஆவர் |
| 3) மருந்து உண்டான் | 3) காய்ச்சல் வரும் |
| 4) சேமிப்பவர் | 4) சித்தியடைவான் |
| 5) படித்தவன் | 5) குணமாகும் |

**கீழ்வரும் வினாக்களில் உள்ள சொற்களில் ஒன்று ஏனையவற்றிலிருந்து ஏதோவொரு வகையில் வித்தியாசமானது. அச்சொல்லை இனங்கண்டு அதனை வெற்றுக் கூட்டில் எழுதுக.**

29) நீர், பால், குடம், தேநீர், பழரசம் (.........................................................)
30) மாமி, மச்சாள், மாமா, நண்பி, அண்ணன் (.........................................................)
31) புத்தகம், கொப்பி, புதினத்தாள், வானொலி, சஞ்சிகை (.........................................................)
32) மழை, பனி, வெப்பம், குளிர், ஈரம் (.........................................................)
33) ஆடு, மாடு, குதிரை, கோழி, கழுதை (.........................................................)
34) முதிரை, பலா, வாழை, வேம்பு, கருங்காலி (.........................................................)

**கீழ் உள்ள உருக்களில் இடதுபக்கத்தில் உள்ள மூன்று உருக்களையும் அவதானித்து அதனைத் தொடர்ந்து வரும் நான்காம் உரு வலது பக்க நான்கு உருக்களில் எது எனத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

35) 

- வட மாகாணத்தில் -

# வைத்தியசாலைகளின் அபிவிருத்தி; 4000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(கிரு-சிகரம்)

வடமாகாணத்தில் 2012, 2013 ஆம் ஆண்டில் வைத்தியசாலைகளுக்கு புதிய கட்டடங்கள் அமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள கட்டடத் தொகுதிகளின் புனர்நிர்மானப் பணிகளுக்கென 4,000 மில்லியன் ரூபா நிதியை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாக வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

சீன அரசாங்கம் இலங்கைக்கான உதவியை மேம்படுத்தும் முகமாக 7,410 மில்லியன் ரூபா பெறுமதியான நிதியினை வழங்குவதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதாகவும், இதன் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள வைத்தியசாலைகள் புனரமைக்கப்பட உள்ளது. இந்த நிதியிலிருந்தே 4,000 மில்லியன் ரூபாவை அரசாங்கம் வடமாகாணத்துக்கு ஒதுக்கியுள்ளதாகவும் இந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

4,000 மில்லியன் ரூபா நிதியிலிருந்து போதனா வைத்தியசாலையின் விபத்து விடுதி கட்டடத் தொகுதிக்கு 1,250 மில்லியன் ரூபா நிதியும், வவுனியா பொது வைத்தியசாலைக்கான 200 கட்டில்கள் மற்றும் விடுதித் தொகுதிக் கட்டுமானங்களுக்கு 750 மில்லியன் ரூபா நிதியும், மன்னார் பொது வைத்திய சாலையில் நான்கு அடுக்குமாடி கட்டட தொகுதி அமைப்பதற்கும் 45 மில்லியனும், கிளிநொச்சி பொது வைத்திய சாலையின் நிர்வாக கட்டடம், விடுதி கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு 400 மில்லியன் ரூபாவும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை உளநிலப் பிரிவுக்கான ஆண் பெண் விடுதி அமைப்பதற்கு 100 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும் தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையின் இரத்த வங்கித் தொகுதி நிர்மாணத்திற்கு 50 மில்லியன் ரூபாவும், ஊர்காவற்துறை வைத்தியர் விடுதி அமைப்பதற்கு 50 மில்லியனும், போதனா வைத்திய மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 400 மில்லியனும், மாகாண வைத்தியசாலை மருத்துவ உபகரணங்கள் கொள்வனவுக்கென 600 மில்லியனும் என அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளதாக வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

# கலை இலக்கிய களத்தினால் இருபிரிவாக சிறுகதைப் போட்டி

(அனு-சிகரம்)

தெல்லிப்பளை கலை இலக்கியக் களம் தனது வெள்ளி விழாவை முன்னிட்டு சிறுகதைப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இந்தப் போட்டியில் மேற்பிரிவில் திறந்த போட்டியாக எவரும் பங்கு பற்றலாம் எனவும், கீழ்ப் பிரிவில் வலிகாமம் வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுக்குக் குறைந்த பாடசாலை மாணவர்கள் மட்டும் பங்கு பற்றலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கீழ்ப் பிரிவுக் கதைக்குரிய விடயப் பரப்பாக மீள்குடியேற்றம் சம்பந்தமான ஒரு தலைப்பு போட்டியின் போது வழங்கப்படும். முழுப்பெயர், விலாசம், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய விண்ணப்பத்தை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பண்டிதர் ந.கடம்பேஸ்வரன், சிறுகதைப் போட்டி அமைப்பாளர், சிந்துபுரம், வட்டுக்கோட்டை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

இந்தப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெறுபவர்களுக்கு 10,000 ரூபாவும், இரண்டாமிடத்துக்கு 7,000 ரூபாவும், மூன்றாம் இடத்துக்கு 5,000 ரூபாவும் பணப்பரிசில்களாக வழங்கப்பட உள்ளதுடன், ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

ஜுலை மாதம் கொழும்பில் நடைபெறும் வெள்ளிவிழா நிகழ்வின்போதே இந்தப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# யாழ்ப்பாணத்தில் சூடுபிடிக்கும் மாம்பழ விற்பனை

(சிகரம்)

தற்போது தென்னிலங்கையிலிருந்து அப்பிள், அன்னாசி, தோடம்பழம், மங்குஸ்தான், றம்புட்டான் போன்ற பழங்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகின்றபோதும் யாழ்ப்பாண மாம்பழத்திற்கான மவுசு இன்னமும் குறையவில்லை. மாம்பழ வகைகளின் விற்பனை தற்போது சூடுபிடித்துள்ளது.



கறுத்தக் கொழும்பான், விளாட்டு, அம்பலவி, வெள்ளைக்கொழும்பான், செம்பாட்டான் போன்ற மாம்பழ வகைகள் தற்போது திருநெல் வேலிச் சந்தையில் விற்பனை செய்யப்படுகின் றன. இவற்றுள் கறுத்தகொழும்பான், விளாட்டு மற்றும் செம்பாட்டான் மாம்பழங்களே அதிகம் மக்களால் விரும்பி வாங்கப்படுவதாக மாம்பழ வியாபாரி ஒருவர் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு-வற்றாப்பளை அம்மன் ஆலயத் திருவிழா காலத்தில் மாம்பழ விற்பனை இன்னும் சூடுபிடிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணச் சந்தையில் கறுத்தக்கொழும்பான், விளாட்டு, அம்பலவி போன்றன அதிகளவில் விற்பனை செய்யப்படுகிறது. பெரிய கறுத்தக் கொழும்பான் மாம்பழம் ஒன்று 40 ரூபாவுக்கும், சிறிய பழம் மூன்று 100 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதுடன், விளாட்டு மாம்பழம் ஒன்று 15 ரூபாவுக்கும் விற்கப்படுகிறது.




வன்னிப் பகுதியிலிருந்து ஏராளமான மாம்பழ வியாபாரிகள் யாழ்.சந்தையிலுள்ள பழ வியாபாரிகளுக்கு மாம்பழங்களை விற்பனை செய்கின்றமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

தற்போது மாம்பழ சீசன் மட்டுமல்ல ஜம்புக்காய், வத்தகைப்பழம், பலாப்பழம் பப்பாசி போன்ற பழவகைகளும் சந்தைக்கு வரத்தொடங்கி விட்டன.

# மெய்தான் பாருங்கோ...

## வீழா அரசியல் நோக்கி...



இப்ப கிட்டடியில, அமைச்சர் டக்ளஸ் ஐயா ஒருகருத்துச் சொன்னவர் கேள்விப்பட்டனிங்களே!

"தமிழருக்கான பிரச்சினை தீர்ந்து தெண்டால் கூட்டமைப்புக்காரரால அரசியல் நடத்தேலாது..." எண்டு.

இந்தக்கருத்தை சும்மா எழுந்தமானமாப் பாத்தால், அவர் தன்ர அரசியலுக்காக ஏதோ பேசிப்போட்டுப் போயிருக்கிறார்... எண்டு சிலபேர் நினைப்பினம்.

ஆனா, ஒரு இடத்தில இருந்து ஆற அமர யோசிச்சுப் பாக்கேக்கைதான் அதின்ர யதார்த்த தாற்பரியம் எப்படிப் பட்டதெண்டது விளங்கும் பாருங்கோ!

"பிரச்சினையில்லையேல் கூட்டமைப்பு இல்லை ; கூட்டமைப்பு இல்லையேல் பிரச்சினையும் இல்லை..." எண்டமாதிரி நிகழ்கால அரசியலை பெரிய பிரயத்தனத்துக்கு மத்தியில சம்பந்தப்பட்ட ஆட்கள் நகர்த்திக் கொண்டிருக்கினம் கண்டியளே!

இப்பத்தே சில நிகழ்வுகளையும் அமைச்சர் சொன்ன கருத்தையும் பொருத்திப்பாத்தால் அரசியல்ல அனுபவப்படாத ஆட்களுக்கும் புரியுறமாதிரித்தான் இருக்கும்.

தமிழன் சுதந்திரமாக வாழவேண்டுமெண்டு அகிம்சை வழியில போராடி... பிறகு அது தோத்துப்போக, ஆயுத வழியில போராடியும் தனிநாடு கிடைக்கேல்லை. இந்தத்தனி நாட்டுக்காக எங்கடசனம் குடுத்த உயிர்ப்பலியும் தேட்ட அழிவுகளும் கொஞ்ச நஞ்சமல்லக் கண்டியளே.

நிலைமை இப்படியிருக்க, உந்தப்போருக்குப் பிறகெண்டாலும் உந்தக் கூட்டமைப்புக்காரர் தங்கட மூளையைக் கொஞ்சம் கழுவித்துடைச்சு வைச்சிருக்காலம்தானே. தமிழருடைய பிரச்சினையைத் தீர்க்கவிடாதபடிக்குப் பாத்துக்கொண்டு, அந்தப்பிரச்சினையில தங்கட வயித்தையும், வளத்தையும் பெருப்பிக்கிறதிலதான் இப்பவும் கண்ணாயிருக்கினம் பாருங்கோ. இதைத்தான் டக்ளஸ் ஐயாவும் நேரத்தோட தெளிவாச் சொல்லிப் போட்டார்.

நவக்கிரகங்கள் கோயில்ல ஒரு இடமாக இருந்தாலும், அந்தக் கிரகங்கள் பாக்கிற திசையும் பகிருகிற அருளும் வேறுவேறானவை கண்டியளே. இது போலத்தான் எங்கட 'நவக்கிரக நாயகர்'கள் ஒரு அமைப்பெண்டு உள்ளுக்கை இருந்தாலும், அவையளின்ர பார்வையளும், கொள்கையளும் வேறானவையாய் இருக்குது பாருங்கோ.

மாவையருடைய மனசில கிடக்கிறது ஒரு வித்மான 'வீர தேசிய'க் கொள்கை! சுரேஸ் தம்பியற்ற மனசில கிடக்கிறது ஓடவிட்டுப்பிடிக்கிற... இன்னொரு விதம்! இவையளைவிட ஞானப்பால் நாயகன்ர மனசுக்குள்ள கிடக்கிறது... அது பெரியதொரு மகா சமுத்திரம் பாருங்கோ!

இப்படியே அவையவை தங்கடமனம் போன போக்கில அரசியல் நடத்த, இப்ப நாறிப்போய்க் கிடக்குது எங்கட தமிழ்ச் சனம்.

மாவையர் என்னடாவெண்டால், தமிழ்பகுதியள்ள இருக்கிற ஆமிக்காரரை அடிச்சுக்கலைக்கிறதிலையும், ஐ.நா தீர்மானத்தை அரசு ஏற்க மறுத்தால் சாத்வீகமாகப் போராடப் போறதெண்டும் கொஞ்சம் 'புலுடா' விட்டுக்கொண்டிருக்கிறார்.

சுரேஸ்தம்பி என்னடாவெண்டால், இனவாத அரசோடை இனிப் பேசிப் பயனில்லை... எண்டு மனம் சலிச்சு இப்ப விரக்தியின் விளிம்பில போய் நிற்கிறார்.

இவையளை விட நம்மட 'ஞானப்பால் நாயகன்' சிங்கக் கொடியைப் பிடித்தேன் ; பிடிக்கிறேன் ; பிடிப்பேன்... எண்டு சிலித்துக்கொண்டு திரியுறார். உதுகளைப்பாத்து "உதென்ன கோதாரியிலபோன அரசியல்..." எண்டு எங்கட சனங்கள் எல்லாம் குழம்பிப் போய் நிக்குதுகள்.

தமிழ்ச்சனத்துக்குரிய பிரச்சினையை சிங்கள அரசாங்கம் தீர்த்து வைச்சுதெண்டால், தமிழ்சனத்துக்காக கதைக்கவெண்டு 'கறணம்' விட்டுத்திரியுற ஆட்களை எங்கடசனம் கணக்கில எடுக்கமாட்டுதுகள் பாருங்கோ. அப்பிடிக்கணக்கில எடுக்காமல் போனால், தங்கடமதிப்பு, அந்தஸ்து, கௌரவம், நாடாளுமன்றப் பதவி, வருவாய்கூடின சம்பளம், ஓடித்திரிய ஓசி வாகனம், குடை கொடி ஆலவட்டப் பவனிகள், எடுபிடிக்கூட்டங்கள்... இப்பிடி எத்தனையோவற்றை இழக்கவேண்டிவரும் அல்லது தியாகம் செய்ய வேண்டிவரும்.

இந்த இடத்தில டக்ளஸ் ஐயா சொன்னதை நான் திரும்பவும் ஒருக்காச் சொல்லவாறன்.

"தமிழர்பிரச்சினை தீர்ந்து தெண்டால் கூட்டமைப்புக்காரரால அரசியல் நடத்தமுடியாமல் போகும்..."

அமைச்சர் ஐயான்ர பேச்சுக்கும் கூட்டமைப்புக்காரற்ர இப்பத்தேக் கூத்துக்கும் எவ்வளவு ஒற்றுமையிருக்கெண்டதை எங்கட சனங்கள் ஒருக்கா யோசிச்சுப்பாத்தால் நல்லாயிருக்குமல்லோ!

- **சின்னக்குட்டி சின்னச்சாமி.**

# கூடங்குளம் போராட்டத்திற்கு மன்னிப்புச் சபை ஆதரவளிப்பு

(லண்டன்)

கூடங்குளம் போராட்டக்காரர்களுக்கு சர்வதேச மன்னிப்புச் சபை ஆதரவு தெரிவித்துள்ளது. இது குறித்து அது வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

தமிழக அரசும் இந்திய அரசும் தொடர்ந்து அணு உலைப் போராட்டத்தை ஒடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. கின்னஸ் சாதனையாக 5,000 பேர் மீது தேசத்துரோக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூடங்குளம் போராட்டக் குழுத் தலைவர் உதயகுமார் உள்ளிட்டோர் மீது பிரிவினைவாத வழக்குகளும், பல்வேறு வழக்குகளும் போட்டு அவர்களைப் கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது.

உதயகுமாரின் மீது போடப்பட்ட பொய்க் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படுமாயின் அவருக்கு 10 ஆண்டுகள் சிறை வாசம் கிடைக்கக்கூடும். இயற்கையை பாதுகாக்க பாடுபடும் உதயகுமார் போன்றோருக்கு இந்திய அரசு கொடுக்கும் பரிசு இது. மேலும் இடிந்தகரையை சுற்றிலும் 144 தடை உத்தரவு போட்டு ஊருக்குள் யாரும் போகவோ வெளியே வரவோ முடியாதபடி செய்துள்ளது அரசு.

இதை சர்வதேச மன்னிப்பு சபை மனித உரிமை மீறலாகவே கருதுகிறது. அதனால் உலகில் உள்ள அனைவரையும் இந்திய அரசுக்கு தகவல் அனுப்புமாறு சர்வதேச மனிப்பு சபை கேட்டுக் கொள்கிறது. உலகில் உள்ள யாவரும் இந்த கோரிக்கையை இந்திய அர சுக்கு எழுதலாம்.

அமைதியாக போராட்டம் நடத்தி வரும் போராளிகளின் மேல் போடபப்பட்ட பொய்யான வழக்குகளை திரும்பப்பெறு.

சட்ட விரோதமாக கைது செய்யப்பட்ட சதீஷ் மற்றும் முகிலனை விடுதலை செய்.

144 தடை உத்தரவை உடனே நீக்கு. ஊர் மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதி. சர்வதேச, இந்திய சட்டத்திற்கு உட்பட்டு நடத்தப்படும் அமைதி வழிப் போராட்டங்களுக்கு அனுமதி வழங்கு. அவர்களின் கருத்துரிமைக்கு மதிபபளி.

இந்தக் கோரிக்கைகளை வரும் ஜூன் மாதம் 22 ஆம் திகதிக்குள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், தமிழகமுதல்வர் ஜெயலலிதாவுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாலைதீவிற்கு கடனுதவி வழங்குகிறது இந்தியா



மாலைதீவின் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப வசதியை மேம்படுத்திக் கொள்ள இந்தியா சுமார் 25 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை வழங்குகிறது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை மாலைதீவு அதிபர் முஹம்மத் வாஹித் அரசியல் குழப்பத்திற்கு பிறகு முதன் முறையாக சந்தித்தார்.

இச்சந்திப்பின்போது பிரதமர், மாலைதீவில் அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் வளம் போன்றவற்றையே இந்தியா விரும்புகிறது என தெரிவித்தார். மேலும் மாலைதீவு அரசியற் கட்சித் தலைவர்கள் அனைவரும் தங்கள் கருத்து வேறுபாடுகளை மறந்து குடியாட்சி செழிக்க பாடுபடவேண்டும் எனவும் பிரதமர் அப்போது வேண்டு கோள் விடுத்தார்.

2011 நவம்பர் மாதத்தில் பிரதமர் மன்மோகன் சிங் மாலைதீவு சென்றபோது சுமார் 100 மில்லியன் டொலர் அளவிற்கு கடனுதவியை வழங்கினார். பின் சுமார் 40 பில்லியன் டொலர் அளவிற்கு மேலும் பொருளாதார கடன் வழங்கியிருந்தமை என்பது குறிப்பிடத் தக்கது.






# மதுரை ஆதீனத்திலிருந்து வெளியேற மாட்டேன்

## அடம்பிடிக்கிறார் நித்தியானந்தா

(மதுரை)

மதுரை ஆதீன மடத்தை விட்டு ஒருபோதும் வெளியேறப் போவதில்லை என்று இளைய ஆதீனம் நித்யானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

மதுரை ஆதீனத்தின் 293 ஆவது ஆதீனமாக என்னை நியமித்துள்ளார்கள். என்னை ஆதீனமாக்கியதை எதிர்த்து சிலர் போராடி வருகிறார்கள்.

மதுரை ஆதீனத்தை மீட்கப் போவதாகக் கூறி வருகிறார்கள். அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

என்னை எதிர்ப்பவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தமிழக முதல்வர் ஜெயலலிதாவிடம் மனு கொடுத்துள்ளோம். இது குறித்து முதல்வர் ரவில் நடவடிக்கை மேற்கொள்

என்னைப் பற்றியும், மதுரை ஆதீன மடம் குறித்தும் தான் கூறிய கருத்துகளை வாபஸ் பெறுவதாக காஞ்சி ஜெயேந்திரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக காஞ்சி மடத்திலிருந்து தனது உதவியாளரை அனுப்பி வைப்பதாகவும் கூறியுள்ளார். ஜெயேந்திரர் மீது நடிகை ரஞ்சிதா வழக்கு தொடர்ந்துள்ளது அவர்களுக்கு இடையேயான பிரச்சினை. அதற்கும், எனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை.

அதனால் ஜெயேந்திரர் மீதான வழக்கை வாபஸ் பெறுவது குறித்து ரஞ்சிதா தான் முடிவு எடுக்க வேண்டும். என்னை மதுரை ஆதீனமாக்கியதற்கு எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் சந்திப்போம். எதிர்ப்பாளர்களின் விமர்சனங்கள் கேலிக்கூத்தானது.

நான் ஆணும் அல்ல, பெண்ணும் அல்ல. ஆன்மீகமானவன். அதனால் மதுரை ஆதீன மடத்தைவிட்டு ஒருபோதும் வெளியேற மாட்டேன். தற்போது என்னை எதிர்ப்பவர்கள் விரைவில் என்னை ஆதரிப்பார்கள் என்றார்.

# ஜெயேந்திரருக்கு எதிராக நடிகை ரஞ்சிதா வழக்கு



நடிகை ரஞ்சிதா தொடுத்துள்ள அவதூறு வழக்கு விசாரணைக்கு இன்று வருமாறு காஞ்சி ஜெயேந்திர ருக்கு எழும்பூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை ஆதீனமாக நித்யானந்தா பொறுப்பு ஏற்றதை விமர்சனம் செய்த ஜெயேந்திரர், ரஞ்சிதாவுடன் சுற்றும் நித்யானந்தாவுக்கு ஆதீனம் பட்டம் கொடுத்ததை ஏற்க முடியாது என தெரிவித்தார். இதனைக் கண்டித்து ரஞ்சிதா ஜெயேந்திரருக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 499 மற்றும் 500 ஆகியவற்றின் கீழ் வழக்கு தொடுத் துள்ளார். சமுதாயத்தில் நல்ல பெயருடன் வாழும் எனக்கும் நிதயானந்தாவுக்கும் உள்ள உறவு குரு சீடர் உறவாகும். இதனைக் கொச்சைப்படுத்துவது போல் காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் கருத்துத் தெரிவித்துள்ளார். இதனால் மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கிறேன் என ரஞ்சிதா குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கினை விசாரித்த எழும்பூர் கூடுதல் தலைமை மெட்ரோபாலிட்டன் நீதிபதி ரவீந்திரன் விசாரணையை 16.5.2012 அன்று தள்ளி வைத்து அந்த தினத்தில் ஜெயேந்திரர் நீதிமன்றத்தில் ஆஜராகவும் உத்தரவிட்டுள்ளார்.

# நடிகர் சிரஞ்சீவியின் மகள் வீட்டில் 35 கோடி ரூபா பணம் சிக்கியது

(சென்னை)

சென்னை போயஸ் கார்டனில் வசிக்கும் நடிகர் சிரஞ்சீவி மருமகன் விஷ்ணு பிரசாத் வீட்டில் ரூ 35 கோடி ரூபா பணத்தைக் கைப்பற்றினர் வருமான வரித்துறை அதிகாரிகள்.

இது பெரும் பரபரப்பைக் கிளப்பியுள்ளது.

நடிகர் சிரஞ்சீவியின் மூத்த மகள் சுஷ்மிதா. இவர் கணவர் விஷ்ணு பிரசாத்துடன் சென்னை போயஸ் கார்டன் பகுதியில் வசித்து வருகிறார். வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் விஷ்ணு பிரசாத், அவரது தந்தை தொழில் அதிபர் சிவபிரசாத் வீடுகள், அலுவலகங்களில் சோதனையிட்டனர்.

இதில் கோடிக்கணக்கான பணம் கைப்பற்றப்பட்டது. மொத்தம் 35 பெட்டிகளில் பணம் சிக்கியது. ஒவ்வொரு பெட்டியிலும் ரூபா 1 கோடி வரை இருக்கலாம் என்று தெரிகிறது.

கடந்த இரண்டு நாட்களாக சோதனை நடைபெற்றதில் வருமான வரித்துறையினர் 35 பெட்டிகளை எடுத்துச் சென்றனர். இதில் கணக்கில் வராத ரூபா 500 மற்றும் ரூபா 1000 நோட்டு



கட்டுகள் இருந்ததாக கூறப்படுகிறது. இதன் மொத்த மதிப்பு ரூபா 35 கோடி. கையகப்படுத்திய ரூபா 35 கோடி பணம் மத்திய வங்கியில் ஒப்படைக்கப்பட்டது.

ஆளுங்கட்சி எம்பியான சிரஞ்சீவியின் மகள் - மருமகன் வீடுகளில் நடந்துள்ள இந்த சோதனை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை இந்தப் பணத்திற்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென சிரஞ்சீவி தெரிவித்துள்ளார்.

# 2ஜி வழக்கில் கைதான ராசாவுக்கு பிணை



(புதுடில்லி)

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு வழக்கில் முக்கியக் குற்றவாளியாக சேர்க்கப்பட்டு கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி கைது செய்யப்பட்ட முன்னாள் தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் ராசாவுக்கு பிணை வழங்கி டில்லி சி.பி.ஐ. நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து ஓராண்டுக்கும் மேலாக சிறையில் இருந்து வந்த ராசா திகார் சிறையில் இருந்து விடுதலையாகிறார்.

கடந்த வாரம் சி.பி.ஐ. நீதிமன்றத்தில் ராசா சார்பில் தாக்கல் செய்த பிணை மனு மீதான விசாரணையின் போது, ராசாவுக்கு பிணை வழங்கக் கூடாது என்று சி.பி.ஐ. மறுத்த நிலையிலும், ராசாவிற்கு பிணை கிடைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

பிணை வழங்கப்பட்டுள்ள ஆ.ராசாவுக்கு நீதிமன்றம் சில நிபந்தனைகளை விதித்துள்ளது. ரூபா 20 இலட்சத்துக்கு பிணைத் தொகை செலுத்த வேண்டும். அனுமதியில்லாமல் தமிழகம் செல்லக்கூடாது.

தமிழகம் செல்ல வேண்டுமானால் முன் அனுமதி பெற வேண்டும். நாடாளுமன்ற கூட்டத் தொடரில் பங்கேற்க எந்தத் தடையும் இல்லை என நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பிணை வழங்கப்பட்டாலும், ராசா புதுடில்லியிலேயே தனது பெருமளவு காலத்தை கழிக்க வேண்டி வருமென புதுடில்லித் தகவல்கள் தெரிவித்தன.

# தினமும் இரண்டு முட்டை போடும் அதிசய கோழி



வேலூர் மாவட்டம், ஆம்பூர் அருகே மாராப்பட்டு கிராமத்தைச் சேர்ந்தவர் சுஜாதா. இவர் சேவல் ஒரு கோழி ஆகியவற்றை வாங்கி வீட்டில் வளர்க்க ஆரம்பித்தார். இந்த நிலையில் கடந்த 6 நாட்களுக்கு முன்பு கோழி முட்டை போட ஆரம்பித்தது. முதல நாளில் 2 முட்டை போட்டது.

இதே போல் மறுநாளும் அந்த கோழி 2 முட்டை போட்டது. மூன்றாவது நாளும் 2 முட்டையை போட்டு வந்தது. இப்படித் தினமும் காலை 7.30 மணியில் இருந்து 8 மணிக்குள் தொடர்ச்சியாக 2 முட்டை போட்டு வந்ததால் சுஜாதாவும் அவரது குடும்பத்தினரும் மகிழ்ச்சி அடைந்தனர். கோழி தினமும் 2 முட்டை போடும் தகவல் அக்கிராம பகுதியில் பரவியது. அதைத் தொடர்ந்து ஊர்ப் பொது மக்கள் அந்த கோழியை ஆச்சரியமாக பார்த்து வருகின்றனர்.

# 49 துண்டிக்கப்பட்ட தலைகள் மெக்சிக்கோவில் மீட்பு



(மெக்சிக்கோ)

மெக்சிக்கோவின் மாண்டெர்ரி நகரில் பிளாஸ்டிக் பைகளில் துண்டிக்கப்பட்ட மனிதத் தலைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சுமார் 49 தலைகள் துண்டிக்கப்பட்டு பிளாஸ்டிக் பைகளில் அடைக்கபபட்டு நெடுஞ்சாலையில் வீசி யெறியப்பட்டுள்ளன.

மெக்சிக்கோவின் மாண்டெர்ரி நகரில் நெடுஞ்சாலையில் கறுப்பு பிளாஸ்டிக் பைகள் கிடந்தன. அவற்றை கைப்பற்றிய பொலிஸார் அவிழ்த்துப் பார்த்தனர். அதில், தலை துண்டித்த நிலையில் பிணங்கள இருந்தன. இதுபோன்று 49 பேர் கொலை செய்யப்பட்டு இருந்தது தெரிய வந்தது.

மெக்சிகோவில் போதை மருந்து க்டத்தல் முக்கிய தொழிலாக உள்ளது. இதனால் கடத்தல் கும்பல்களுக்கு இடையே அடிக்கடி மோதல்கள் ஏற்படுவது சகஜம். அது போன்ற தகராறில் இந்தப்படுகொலைகள் நடந்திருக்கலாம் என பொலிஸார் தெரிவிததுள்ளனர்.



பதினாறாவது பாப்பரசர் இத்தாலியுள்ள அரிசோஸ் காத்ட்ரல் கிறிஸ்தவ ஆலயத்திற்கு வருகை தந்ததைக் காணலாம்.

# சிரியாவில் மோதல்; 23 இராணுவத்தினர் பலி



(டமஸ்கஸ்)

சிரியாவின் மத்திய நகரில் இடம்பெற்ற மோதல்களில் 23 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த மோதல்களில் சிக்கி மேலும் பலர் காயமடைந்துள்ளதாக பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமை அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.


இராணுவத்தினரின் வாகனங்கள் உள்ளிட்ட சொத்துக்கள் சிலவற்றுக்கும் இதன்போது சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ளதாக கூறப்படுகின்ற போதிலும், வன்முறைகளும் மோதல்களும் தொடர்கின்றன.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீறப்படுவதற்கு இரண்டு தரப்பினர்களும் காரணம் என்று சர்வதேச சமூகத்தினர் குற்றம் சுமத்தியுள்ளனர். ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களால் சிரியாவில் இதுவரை 10,000இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லிபியாவில் பொதுமக்கள் உயிரிழப்பு; நேட்டோ பொறுப்புக் கூறவேண்டும்

## - மனித உரிமை அமைப்பு கோரிக்கை



(வோஷிங்டன்)

லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபியின் ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் நடத்திய மக்கள் மீது, இராணுவத்தினர் கண்மூடித்தனமாகத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக நேட்டோ படையும் களமிறங்கியது. இத்தாக்குதலில் பல அப்பாவிப் பொதுமக்கள் கொலலப்பட்டதால், இதற்கு நேட்டோவும் பொறுப்பேற்க வேண்டும் என்று மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு கூறியுள்ளது.


HRW எனப்படும் மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பைச் சேர்ந்த பிரெட் ஆப்ரஹாம்ஸ கூறுகையில், விமானத்தாக்குதலில் இறந்த72 அப்பாவி பொதுமக்களின் மரணத்திற்கு நேட்டோ படையே பொறுப்பு என்றார். மேலும் இம்மரணம் குறித்து புலன் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஆனால் நேட்டோ பதிலளிக்கையில், பொதுமக்களின் மரணத்தைக் குறைக்கத் தாம் தேவையான முயற்சிகளை மேற்கொண்டதாகவும், அதனால் இக்குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தெரிவித்தது.

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாட்டு விமானங்கள் கடந்தாண்டு லிபியாவில் 9658முறை கடாபியின் படைகள் மீது தாக்குதல் நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# ஒபாமா பங்கு பற்றாத ஆசிய பசுபிக் மாநாடு



ரஷ்யாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஆசிய பசுபிக் மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கலந்துகொள்ள மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அபேக் மாநாடு நடைபெறும் அதே வாரத்தில் வட கரோலினாவில் நடைபெறவுள்ள ஜனநாயக தேசிய மாநாட்டில் ஒபாமா கலந்து கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிடுவதற்கான கட்சியின் சிபாரிசினை இந்த மாநாட்டில் வைத்து ஒபாமா ஏற்றுக் கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜி எட்டு மாநாட்டில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் தெரிவித்ததை தொடர்ந்து வெள்ளை மாளிகை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

எனினும் ஜுன் மாதம் மெக்சிக்கோவில் நடைபெறவுள்ள ஜி 20 மாநாட்டில் இரண்டு நாட்டுத் தலைவர்களும் சந்தித்து கலந்துரையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# வதந்திகளைக் கிளப்புவது தலாய்லாமாவின் வேலை

## – சீனா கடும் கண்டனம்

(பீஜிங்)

சீனாவை பற்றி வதந்திகளைக் கிளப்பிக் கொண்டிருப்பதையே தலாய்லாமா வேலையாய் வைத்து கொண்டிருக்கிறார் என்று சீனாவின் சார்பில் அந்நாட்டு வெளியுறவு துறை அமைச்சர் கூறியுள்ளார். நேற்று முன்தினம் லண்டனில் தலாய்லாமா பேட்டி ஒன்றில் குறிப்பிடுகையில், என்னைக் காண வரும் பக்தர்களை அவர்களின் தலையில் கைவைத்து ஆசீர்வதிப்பது வழக்கம். என்னைக்கொல்ல சதி செய்துள்ள சீனா,பெண் பக்தர் களின் வேடத்தில் ஆட்களை அனுப்பி, அவர்களின் தலை முடியின் மூலமாகவோ, அவர்களின் துணி மூலமாகவோ, என் உடலில் விஷத்தை பரவச் செய்யத் திட்டமிட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. இவ்வாறு தலாய்லாமா கூறியிருந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக, சீன செய்தி தொடர்பாளர் ஹாங் லீ கூறுகையில், வெளியில் துறவி உடையை அணிந்து கொண்டு, எப்பொழுதும் சீனாவை பற்றித்தவறான கருத்துக்களைப் பரப்பிக் கொண்டு இருப்பதுதான், தலாய்லாமாவின் வேலையாக இருந்து வருகிறது என்றும், இவ்வாறு கூறுவதன் மூலம் மக்களை ஏமாற்றுவதோடு, மக்களின் கருத்தை



கவரும் முயற்சியில் தான் குறியா இருக்கிறார் என்றும் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், அவரின் இந்த அவதூறான கருத்துக்கு சீனா எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

# விமானங்கள் மோதி கனடாவில் விபத்து



கனடாவின் வட கிழக்கு பகுதியில் இருக்கும் சஸ்காடுன் அருகே நடுவானில் பறந்த 2 விமானங்கள் எதிர்பாராத விதமாக நேருக்கு நேர் மோதிக்கொண்டன.

இதில் 2 விமானங்களும் நெர்ருங்கி புனித பெர்கிஸ் என்ற இடத்திற்கு 10 கிலோ மீட்டர் தெர்லைவில் தரையில் விழுந்தன.

இந்த விமான விபத்தில் ஒரு விமானத்தில் பயணம் செய்த தம்பதி, மற்றொரு விமானத்தில் இருந்த 2 ஆண்கள், ஒரு சிறுவன் ஆகிய 5 பேரும் பலியானார்கள்.

ஆனால் பலியானவர்களின் மேலதிக விபரம் உடனடியாகத் தெரியவில்லை. இந்த விபத்து குறித்து விமான போக்குவரத்துத் துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இஸ்ரேலிய உளவாளியை தூக்கிலிட்டது ஈரான்

(தெஹ்ரான்)

ஈரானின் மூத்த அணு விஞ்ஞானியான அலி முகமதுவை படுகொலை செய்த வழக்கில் இஸ்ரேலிய உளவாளியான மஜித் ஜமாலி என்பவர் நேற்று தூக்கிலிடப்பட்டார்.

2010ஆம் ஆண்டு அணுவிஞ்ஞானி அலி முகமது படுகொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் மஜித் ஜமாலி என்பவர் கைது செய்யப்பட்டார். இஸ்ரேல் உளவு அமைப்பான மொசாட்டுடன் இணைந்து அலி முகமதுவை அவர் படுகொலை செய்ததாக குற்றம்சாட்டப்பட்டது. பின்னர் கடவுளுக்கு எதிராக போர் தொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து சிறையில் இருந்த அவர் நேற்று தூக்கிலிடப்பட்டார்.

ஈரானின் அணு விஞ்ஞானிகள் 4 பேரை அடுத்தடுத்து இஸ்ரேல் படுகொலை செய்ததாக ஈரான் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறது. இஸ்ரேலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் டில்லி, பாங்கொங் உள்ளிட்ட இடங்களில் இஸ்ரேலிய தூதரகங்களைக் குறிவைத்து ஈரானியர்கள் தாக்குதல் நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா.செயலருக்கு முறிந்தது கால்

(ஜெனிவா)

ஐ.நா.பொதுச்செயலாளர் பான் கீமூனுக்கு கால்பந்து விளையாடியபோது இடது கால் முறிந்தது. இது குறித்து ஐ.நா. செய்தித் தொடர்பாளர் மார்ட்டின் நெஸர்க்கி கூறியதாவது;67 வயதான பான் கீமூனுக்கு சிறு எலும்பு முறிவு ஏற பட்டுள்ளது. அவர் கால்பந்து தொடரில் விளையாடிய போது இவ்வாறு நிகழ்ந்தது என்றார்.

# குருப் பெயர்ச்சி பலன்கள்

17-05-2012 முதல் 28-05-2013 வரை

## கன்னி



உத்ரம் 2,3,4 பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதங்கள்

(பெயரின் முதல் எழுத்துக்கள்: ப, பி, பூ, ஷ, ண, ட,பே, போ உள்ள வர்களுக்கும்)

மிகுந்த புகழ்பெற்றவர்களாக இருந்தாலும், அடக்கமானவர்களாக விளங்கும் கன்னிராசி நேயர்களே!

திட்டம் தீட்டுவதிலும் அதை செயற்படுத்துவதிலும் வல்லவர்கள் நீங்கள். மற்றவர்கள் செய்ய முடியாத காரியங்களை நீங்கள் செய்து காட்டி ஆச்சரியப்பட வைப்பீர்கள். வெளியுலகிற்கு நீங்கள் சிக்கனமானவர்களைப் போல தோன்றினாலும், வரவறிந்து செலவு செய்வதில் வல்லவர்கள். சுக்ரன் உங்களுக்கு வாக்கு ஸ்தானாதிபதியாக அமைவதால் மிக இனிமையாகப் பேசுவீர்கள்.

உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய வற்றிற்கு அதிபதியாக விளங்கும் குரு இப்போது, 9ஆம் இடத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியைப் பார்க்கப் போகிறார். கோடி நன்மைகளைக் கொடுக்கும் குரு கடைக்கண் திறந்து பார்த்தால், கோடீஸ்வரராகவும் மாறலாம். உங்கள் இலட்சியங்களை எல்லாம் நிறைவேற வழிகாட்டுவது இந்த குருப்பெயர்ச்சி காலம் தான்.

அதே நேரத்தில் இந்த குரு, பகை கிரகமான சுக்ரன் வீட்டில் போய் சேர்கிறது. எனவே விபரீத ராஜயோக அடிப்படையில் இதுவரை நடைபெறவில்லையே என்று நினைத்த காரியங்கள் எல்லாம் இனி ஒவ்வொன்றாக நடைபெற்று ஆச்சரியத்தில் ஆழ்த்தப் போகிறது. கேதுவுடன் குரு சேர்வதால், கேது புக்தி, கேது திசை, ராகு புக்தி, ராகுதிசை நடப்பவர்கள், சுக்ரதிசை, சுக்ரபுக்தி நடப்பவர்கள் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. சிறப்புப்பரிகாரங்களை செய்தால் செயற்பாடுகளில் எல்லாம் வெற்றி கிடைக்கும்.

### குருப்பெயர்ச்சி

உங்கள் இராசிக்கு இதுவரை 8ஆம் இடத்தில் சஞ்சரித்து, எண்ணற்ற தொல்லைகளைக் கொடுத்து வந்த குரு தற்சமயம் 17-5-2012 முதல் 9ஆம் இடத்தில் சஞ்சரித்து ஒப்பற்ற, ஒளிமயமான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கப் போகிறார்.

அதன் பார்வை முதன் முதலில் பதியும் இராசியும் உங்கள் இராசியில் தான். 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்கும் குருவை, நாடி வரும் முன்னதாகவே தேடிச் சென்று வழிபட்டால் நலங்களும், வளங்களும் வந்து சேரும்.

### ஒன்பதாமிடத்திற்கு வந்த குரு!

உங்கள் இராசிக்கு 4, 7இ அதிபதியான குருபகவான் 9ஆ இடத்தில் இப்போது சஞ்சரிக்கப் போகிறார். தற்சமயம் பெயர்ச்சியாகும் குரு, பாம்பு கிரகத்தின் ஆதிக்கத்தோடு இணைவதால் ஏற்ற இறக்கமான வாழ்க்கையையும் ஒரு சிலருக்கு கொடுக்கும். சர்ப்ப சாந்தியைச் செய்வது நல்லது.

பொன்னான குரு பொன்னான எதிர்காலத்தை அமைத்துக்கொடுக்கப் போகிறார். அதன் பார்க்கும் இடங்கள் எல்லாம் பலன் பெற்று ஆனந்தமடையப் போகிறீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் ஒத்துழைப்பால் நல்ல காரியங்கள் அடுக்கடுக்காக நடைபெற்றுக் கொண்டே இருக்கும். தொழில் தொடர்பாக எடுத்த முயற்சிகளில் தொகை போதுமானதாக இல்லையே என்ற கவலை அகலும்.

9ஆம் இடம் என்பது பிதுரார் ஜித ஸ்தானம் என்றாலும் வம்ச விருத்தி, தந்தை வழிச்சொத்து, தர்மம் செய்யும் நிலை, ஆலயத் திருப்பணி, தெய்வ சிந்தனை, தீர்த்த யாத்திரை, பட்டாபிஷேகம், கடல் கடந்து செல்லுதல், பதவி கிடைத்தல், உடன் பிறப்பின் வாழ்க்கைத் துணை, நீண்ட தூரப் பயணம் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் இடமாகவும் விளங்குகிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் போது தந்தை வழிச் சொத்துக்களில் உள்ள பிரச்சினைகள் அகலும். குழந்தை பிறக்கவில்லையே என்று கவலைப்பட்ட தம்பதியருக்கு இனி குழந்தை பிறக்க வழிபிறக்கும்.

தூர தேசப் பயணங்களால் இலாபம் கிட்டும். வெளிநாடு செல்ல வேண்டுமென்று துடித்தவர்கள் அதை செயற்படுத்தும் வாய்ப்பு கிட்டும். உடன்பிறப்புகளின் வாழ்க்கைத் துணை வழியே வந்த பிரச்சினைகளை அகற்றுவீர்கள். ஏழரைச்சனி நடப்பதால் கடன்சுமை முழுமையாக குறையாவிட்டாலும் ஓரளவு குறைந்து விடும். இருப்பினும் இந்த நேரத்தில் நீங்கள் கடனாளியாக இருந்தால் தான் சனி சந்தோஷப்படும் என்பார்கள்.

### குருவின் பார்வை பலன்கள்

குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 1, 3, 5 ஆகிய இடங்களில் பதிவதால், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். பலநாட்களாக உடலில் இருந்த நோய் எப்படி ஓடி ஒளிந்ததோ என்று நீங்களே ஆச்சரியப்படுவீர்கள்.

புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் கைகூடிவரும். சகோதர ஒற்றுமை பலப்படும். வழக்குகளில் வெற்றி கிட்டும். கல்யாணக் கனவுகள் நனவாகி மகிழ்ச்சியை வரவழைத்துக் கொடுக்கும். கற்ற கல்வியில் இருந்த தடை அகலும். வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும்.

இதுவரை சந்தித்து வந்த வேலைப் பளுவில் இருந்து விடுபடுவீர்கள். அதிகாரிகளின் அன்பும், ஆதரவும் கூடும். வழக்குகளில்வெற்றி கிடைக்கும். வாரிசுகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறத் தொடங்கும், கல்யாணக் கனவும், கடல தாண்டும் வாய்ப்பும் கிட்டும்.



### வாட்டத்தை போக்குமா வக்ர குரு

ரிஷப இராசிக்குள் சஞ்சரிக்கும் குரு 12-10-2012 முதல் 6-2-2013 வரை வக்ரகதியில் இயங்குகிறார். உங்கள் இராசி வீரப் பொறுத்த வரை 4, 7இற்கு அதிபதியாக விளங்கும் குரு வக்ரம் பெறுவது நன்மை தான். உங்கள் சுய ஜாதகத்திலும் குரு வக்ர இயக்கத்தில் இருக்குமானால், மிகுந்த நற்பலன்களை வழங்கும். சோர்வு அகன்று, துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். தூரதேசப் பயணங்களில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக மாறும்.

நண்பர்கள் நல்ல சமயத்தில் கைகொடுத்து உதவுவர். பணத்தேவைகள் பூர்த்தியாகும். வீடு கட்டுவது, வாகனம் வாங்குவது நிறைவேறுவதற்கான வழிபிறக்கும். வாழ்க்கைத் துணையால வந்த துயரங்கள் அகலும் அவர்களால வருமானங்களும் வந்துசேரும். சேர்க்கை சேர்வதில் நல்லவர் யார்? கெட்டவர் யார்? என்பதை இனம் கண்டு கொள்வீர்கள். வாய்ப்புகள் வாயில்கதவைத் தட்ட தென்முகக் கடவுளை இன்முகத்தோடு வழிபாடு செய்யுங்கள்.

### கன்னி இராசியில் பிறந்த பெண்களுக்கு...

இந்த குருப்பெயர்ச்சியால் கணவன்-மனைவியரிடையே கனிவு கூடும். ஒற்றுமை பலப்படும். தாய்வழியில் வர வேண்டிய சொத்துக்கள் தானாகவே வந்து சேரலாம். சேமிப்பு உயரும். சிறு சிறு பிரச்சினைகளுக்காக மனக்கசப்பாக விலகி இருந்த சொந்தங்கள் எல்லாம் இனி மகிழ்ச்சியோடு வந்திணைவர். ஆண் வாரிசு பிறக்கும். பொருளாதாரப்பற்றாக்குறை அகன்று புதிய வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள். சர்ப்ப சாந்தியும், சனீஸ்வரர் வழிபாடும் தகுந்த வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.(தொடரும்)

---

# அவ்வை சண்முகம்

'நடிப்புத் திறமையைப் பொறுத்தவரையில் அவ்வை நாடகத்தில் அவ்வைப் பாட்டியாக நடிக்கும் டி.கே.சண முகம் அவர்களுக்கு நோபல் பரிசு கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்கிறேன். வேஷம், பேச்சு, நடையுடை பாவனை எல்லாம் அவ்வளவு பொருத்தம் நடிப்போ அபாரம் அவ்வையாரின் முகத் தோற்றங்கள் நடிப்புக் கலையின் உன்னத சிகரமாக விளங்கின.'



இப்படி எழுத்தாளர் கல்கி அவர்களால் பாராட்டப் பெற்ற அவ்வை சண்முகம் திருவனந்தபுரத்தில் 1912 ஏப்ரல் 26இல் பிறந்தவர். தந்தையார் கண்ணுசாமிப்பிள்ளை. தாயார் சீதையம்மாள். மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை இவருக்கு மாமனாராவார்.

நாடக மேடை விற்பன்னராகவும் சிறந்த குணச்சித்திர நடிகராகவும் முத்திரை பதித்த அவ்வை சண்முகம் அவர்களின் நினைவு நூற்றாண்டு இது. நாடக மேடையில் அவ்வையாராகத் தோன்றி இவர் பெற்ற புகழை வைத்தே கமல்ஹாசன் தன் படத்திற்கு அவ்வை சண்முகி எனப் பெயரிட்டார்.

அவ்வை நடித்த கதாபாத்திரங்களில் மறக்கமுடியாதவை பிரகலாதன், ராசேந்திரன், மாமல்லன், மதுரகவி, சித்தர் சிவா, போக்கிரி ராஜா, முரட்டு முத்தையன்.

நாடக அரங்கம் தவிர, வெள்ளித் திரையிலும் முத்திரை பதித்தவர். 1935-ஆம் ஆண்டு வெளிவந்த 'மேனகா' முதல் சமூகத் திரைப்படம். அந்தப் படத்தில் இவரின் நடிப்பு பாராட்டப் பட்டது. இதுதவிர, மனிதன், பில்ஹண்ணன், ஓர் இரவு, பெண் மனம், பாலாமணி, பூலோக ரம்பை, கப்பலோட்டிய தமிழன் போன்ற பல திரைப் படங்களில் நடித்துள்ளார்.

அறிஞர் அண்ணா முதலமைச்சரான போது சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

அண்ணாவின் 'ஓர் இரவு' திரைப் படத்தில் ஜமீன்தாராக நடித்ததுடன், ஒரு பாடலையும் எழுதியுள்ளார். 'எங்க நாடு - இது எங்க நாடு - எங்கும் புகழ் தங்கும் நாடு' - என்று தொடங்கும் அந்தப் பாடல்.


மனைவி நோயுற்று திடீரென இறந்து போக, அந்த உடலை வைப்பதற்குக் கூட இடம் கிடைக்காமல் இவர் தவித்த வேளை, அப்போது காலியாக இருந்த தன் புதிய வீட்டைத் தந்து உதவி செய்தார் ஒரு பிரமுகர். அவர் தந்தை பெரியார்.

புது எழுத்தாளர் எழுதித் தந்த 'ரத்த பாசம்' நாடகப் பிரதியை ஒரே மூச்சில் படித்து முடித்து, அதை நாடகமாகத் தயாரித்தார் அவ்வை. அது மட்டுமல்ல.. மேடையிலேயே 'இந்த நாடகத்தின் எழுத்தாளர் இவர்தான்' என்று அந்தப் புதியவரை அறிமுகப் படுத்திப் பெருமை சேர்த்தார். அந்த எழுத்தாளர் பின்னாளில் இயக்குநர் ஸ்ரீதர் ஆனார்.

'சிவலீலா' நாடகத்தில் பாண்டியனாக நடித்து வந்தவர் அவ்வை. அப்போது குழுவில் புதியதாக இணைந்த நடிகர் ஒருவர் விரும்பிக் கேட்டதற்காக, தனது வேடத்தை அவருக்குக் கொடுத்து வாழ்த்தினார். அந்தப் புதிய நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன்.

பத்திரிகைத் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த ஒருவர், நாடகத்தில் ஆர்வம் கொண்டார். அவரை 'முள்ளில் ரோஜா' நாடகம் எழுத வைத்து, மக்களிடையே பிரபலமாக்கினார். நாடகம் எழுதியவர் பின்னாளில் பிரபல இயக்குநர் ஆனார். அவர் ப.நீலகண்டன்.

நாடக விழாக்களுக்குத் தலைமை தாங்க ஒப்புக்கொண்டால், அழைப்பிதழ் தமிழில் இருக்க வேண்டும். ஆங்கிலத்தில் இருந்தால், கிழித்து விட்டு 'விழாவுக்கு வர இயலாது' என்று விழா அமைப்பாளருக்குத் தகவல் தெரிவித்து விடுவாராம். அந்த அளவிற்கு தமிழ்ப் பற்றுடன் இருந்தவர்.



- அவரது மணிவிழாவின் போது கிடைத்த அன்பளிப்புத் தொகை மூலம நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் அறக்கட்டளையைச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் உருவாக்கினார் டி.கே.எஸ்.

அவ்வை சண்முகம் அவர்களுக்கு வாரிசுகளாக நான்கு புதல்வர்கள். ஒரு புதல்வி. இவர்களில் மூத்தவர் பாடகா டி.கே.எஸ்.கலைவாணன். 1973, பெப்ரவரி15இல் காலமானார் அவ்வை சண்முகம். சென்னையில் அவர் வாழ்ந்த தெருவிற்கு அவ்வை சண்முகம் சாலை என்று பெயர் சூட்டப்பெற்று, இன்றளவும் அவ்வாறே அழைக்கப்பட்டு வருகிறது.

# வடமராட்சி கிழக்கு விளையாட்டுக் கழகங்களுக்கு ஈ.பி.டி.பி.யினரால் சீருடைகள் அன்பளிப்பு



வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மீள் குடியேற்றத்தின்போது பல்வேறு தடைகள் ஏற்பட்டிருந்த போதும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடன் நேரடியாக தொடர்புகொண்டு கலந்தாலோசித்ததன் பயனாக மக்கள் தமது வாழ்விடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர் என ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு உடுத்துறை கடற்றொழிலாளர் சமாசத்தில் தலைவர் நாகமுத்து நாகேஸ்வரன் தலைமையில் விளையாட்டுக் கழகங்களுக்கு சீருடைகள் அன்பளிப்பு வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மீள்குடியேற்றங்கள் எல்லாம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அரசுடன் கொண்டுள்ள இணக்கப்பாட்டு அரசியலின் மூலமே சாத்தியமாகி வருவதுடன் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் கட்டம் கட்டமாக மின்சாரம், குடிநீர், மாணவர் கல்வி, சுகாதாரம், கட்டுமானப்பணிகள் உட்பட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசம் யுத்தம், சுனாமி போன்றவற்றால் முற்றுமுழுதாக அழிவடைந்து பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. இப்பிரதேசத்தில் மக்களின் வாழ்வாதாரம் அபிவிருத்திப்பணிகள் ஆரம்பத்திலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதுடன் எங்கெங்கெல்லாம் வறியமக்கள் வாழ்கின்றார்களோ அவர்களை முதன்மைப் படுத்தியதாக அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் மேலும் தெரிவித்தார்.

## எப்போது ஊருக்கு...

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் உரையாற்றும்போது, பெரும் யுத்தகளமாக அதிகளவு கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட பிரதேசமாக காணப்பட்ட பிரதேசத்தில் நாம் யாரும் எதிர்பார்க்காத வகையில் விரைவான மீள்குடியேற்றத்திற்கு இன்று வழி சமைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மக்களின் நீண்டகால கனவு விருப்பம் எதிர்பார்ப்பு இன்று நிறைவேறியுள்ளது. இதற்காக எம்முடன் சேர்ந்து உழைத்த கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் அரச அதிகாரிகள் அரச சார்பற்ற நிறுவனங்கள், இராணுவத்தினர் என அனைவருக்கும் இம் மக்கள் சார்பாக நன்றிகளை தெரிவிக்கவேண்டும்.

சொந்த ஊருக்கு திரும்பவேண்டும் என்ற மக்களின் உணர்வுகள் மதிக்கபட வேண்டியவை தொடர்ந்தும் மக்கள் நண்பர்கள் உறவினர்களின் வீடுகளில் வசிக்க முடியாது. அவர்கள் சொந்த ஊர்களில முன்னர் வாழ்ந்தது போன்று வாழவேண்டும். அதற்கான சூழலை ஏற்படுத்தவேண்டியது எம் அனைவரினதும் மிகப் பெரிய பொறுப்பு. அரசும் இடம்பெயர்ந்த மக்களை சொந்த இடங்களில் மீள் குடியமர்த்துவதற்கு எல்லா வகையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

எனவே இதில் மக்களும் தங் களுடைய பூரண ஒத்துழைப்பினை வழங்கும்போது அந்த மாற்றத்தினை விரைவாக ஏற்படுத்த முடியும் எனத் தெரிவித்தார். இத்தாவிலிலுள்ள முருகமூர்த்தி ஆலயத்தில் வழிபாடுகளுடன் மீள்குடியேற்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது மீள்குடியேற வந்த மக்களுக்கு ஆரம்பகட்ட உபகரண தொகுதிகளும் வழங்கப்பட்டது.

இந்த மீள்குடியேற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன் தியாகராசா, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் சத்தியசீலன், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் வசந்த திட்டப்பணிப்பாளர் வினோதராஜா ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மாவட்ட அமைப்பாளர் கீதாஞ்சலி, இராணுவ அதிகாரிகளான பிரிகேடியர் குலத்துங்க, கேணல் வன்னியாராச்சி மற்றும் திணைக்களங்களின் உயரதிகாரிகள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பட்டதாரிகளுக்கு...

பட்டப்படிப்பினை நிறைவு செய்த பட்டதாரிகளுக்கு, அரச சேவையில் எதிர்வரும் இரண்டு மாதங்களில் நிரந்தர நியமனங்கள் வழங்கத் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். தற்போது அரச சேவையிலுள்ள அனைத்து பட்டதாரிகளும் பல்வேறு கட்டங்களின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் என பிரதியமைச்சர் சுட்டிக் காட்டினார்.

## ஆவணங்களை...

வழக்கொன்றில் ஆயிரம் கோடி ரூபா நட்டஈட்டை அமைச்சர் தேவானந்தா கோரியிருந்தார். இவ் வழக்கில் அமைச்சரின் முறைப்பாட்டிற்கு தமது மறுமொழியை சமர்ப்பிக்க முடியாமல் 'உதயன்' பத்திரிகை இன்னும் கால அவகாசம் கோரியுள்ள நிலையிலேயே மேற்படி மேலுமொரு ஆயிரம் கோடி ரூபா அவதூறு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இவ் வழக்கு தொடர்பாகத் தெரியவருவதாவது, 2007 காலப் பகுதியில் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவராலயத்தினால் வொஷிங்டனுக்கு அனுப்பிவைக்கப்பட்ட செய்தித் தொகுப்பென விக்கிலீக்ஸ் இணையத் தளத்தில் வெளியாகியிருந்த செய்தியொன்றில் அமெரிக்காவிற்கு தகவல் தருபவர்களால் தெரிவிக்கப்பட்ட பாரதூரமான விபரங்கள் பல அடங்கியிருந்தன. ஆனால் இச் செய்தித் தொகுப்புடன் அனுப்பிவைத்திருந்த குறிப்பில், தனது சொந்தக் கருத்தாக, இவைகள் ஆதாரமற்ற செய்திகள் என அப்போதைய அமெரிகத் தூதுவர் ரொபேட் ஓ பிளேக் தெரிவித்திருந்தார்.

'உதயன்' நாளிதழ் இவ்வாறு அமெரிக்க தூதுவர் ரொபேட் ஓ பிளேக் தெரிவித்ததை குறிப்பிடாமல் மறைத்தது மட்டுமன்றி மேற்படி தகவல்களே ரொபேட் ஓ பிளேக்கினுடையவை எனவும தெரிவித்து தனது பத்திரிகையில் செய்தியொன்றை வெளியிட் டிருந்தது. இவ்வாறு உண்மைகளை மறைத்து செய்திகளை வெளியிட்டமைக்காக 'உதயன்' பத்திரிகைக்கெதிராக அவதூறு வழ்க்கொன்று தொடரப்பட்டிருந்த நிலையில், 'உதயன்' பத்திரி கையானது தொடர்ந்தும் மேற்படி செய்தியை திரித்தும் மறைத்தும் செய்திகளை வெளியிட்டு வந்தது மட்டுமன்றி யுத்தம் நடைபெற்றிருந்த காலப்பகுதியில் யாழ் குடாநாட்டில் நடைபெற்றிருந்த கொலைகள் அனைத்துடனும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களை தொடர்புபடுத்தி ஆதாரமற்ற அவதூறு செ[illegible]ளை வெளியிட ஆரம்பித்திருந்தது.

இந் நிலையில், சரியான கொலையாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை பெறுவதிலிருந்து தப்புவதை விளைவாக்கும் வகையில் 'உதயன்' பத்திரிகை செய்திகள் வெளியிடுவதை தடுக்கும் நோக்கிலேயே இவ் இரண்டாவது வழக்கு தொடரப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவ் வழக்கு தொடர்பாக நேற்று யாழ் மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவில், 'விக்கிலீக்ஸ்' செய்தியொன்றை திரிபுபடுத்தி, அதன் மிக முக்கியமான பகுதிகளை மறைத்து, கடந்த 2006 - 2008 இடைப்பட்ட யுத்த காலப் பகுதியில் யாழ குடாநாட்டில் நடைபெற்றதாகக் கூறப்படும் நீதிக்குப் புறம்பான கொலைகள் பற்றிய செய்தியொன்றுடன் தொடர்புபடுத்தி, அக் கொலைகள் அனைத்தையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரே செய்ததாக தனது வாசகர்கள் உய்த்துணர வேண்டும் என்ற தீய நோக்கத்தில் 'உதயன்' செய்தி வெளியிட்டதாக ஆதாரங்களுடன் அமைச்சர் முறையிட்டுள்ளார்.

'உதயன்' பத்திரிகைக்கு எதிரான இன்னுமொரு அவதூறு வழக்கு ஏற்கனவே நிலுவையிலுள்ள நிலையில், இவ் வழக்கும் விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மக்கள் விழிப்படைந்து வருகிறார்கள், வாசகர்களை ஏமாளிகளென எண்ணி அரசியல் நோக்கங்களுக்காகவோ அல்லது இதர ஆதாயங்களுக்காகவோ உண்மைகளை திரித்தும், மறைத்தும், நீதியான விசாரணைகளை திசை திருப்பும் நோக்கில் செய்திகளை தொடர்ந்தும் வெளியிடுவதை தவிருங்கள் என ஊடகங்களுக்கு இவ் வழக்குகள் ஒரு அபாய அறிவிப்பை செய்துள்ளன என அவதானிகள் கருதுகின்றனர்.

# வடக்கில் மீள்குடியமர்வு மீளாய்வு நடவடிக்கை

## பௌதீக வளங்கள் குறித்து ஆய்வு

(பருத்தித்துறை)

உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக விபரங்களைத் திரட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிசாட் பதியுதீன் தலைமையில் கடந்த 8 ஆம் திகதி மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் பிரகாரம் மீள்குடியமர்வு செய்யப்படவேண்டிய கிராமங்களின் சரியான தரவுகள் பெறப்பட்டு கிராம அபிவிருத்தித் திட்டம் பிரதேச செயலக ரீதியாகத் தயாரிக்கப்படவுள்ளது.

எனவே கிராம அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதற்குப் பிரதேச செயலகத்திற்குத் தேவையான உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்கள், மீள்குடியமர்வுப் பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளின் விபரங்கள், மாணவர்களின் எண்ணிக்கை, ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான விபரங்களையும் அப்பாடசாலைக்குத் தற்போது அவசியமாகவுள்ள தேவைப்பாடுகளையும் தங்கள் திட்டமிடல் பிரிவினூடாக வழங்கி இத்திட்டத்தினை இரண்டு கிழமைகளுக்குள் தயாரிப்பதற்குப் பிரதேச செயலகத்திற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இதற்கு ஒவ்வொரு வலய திட்டமிடல், கோட்டக் கல்வி அலுவலர்கள் ஆகியோர் பிரதேச செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு விபரங்களை வழங்க வேண்டும் என்றார். (109)

# ஒரே சூலில் 3 குழந்தைகள்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் ஒரே சூழில் மூன்று ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. பிரசவத்திற்காக யாழ். திருச்சிலுவை கன்னியர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதே மேற்படி பெண் இம் மூன்று ஆண் குழந்தைகளையும் பிரசவித்துள்ளார். மூன்று குழந்தைகளும் மிகுந்த ஆரோக்கியத்துடன் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (எஸ்)

## இந்திய ஆசிரியர்கள்...

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட நாட்டின் ஏனைய பகுதிகளில் தமிழ் பட்டதாரிகள் வேலையற்று இருக்கும் நிலையில் இந்தியாவில் இருந்து ஆசிரியர்களை அழைத்துவந்து வேலைவாய்ப்புக் கொடுக்க தற்போதைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. 3000 ஆசிரியர்கள் இந்தியாவில் இருந்து இரகசியமாக அழைத்து வரப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, நுவரெலியா உள்ளிட்ட மாவட்டங்களில் தற்போது ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலையற்று இருக்கும் நிலையில் அரசின் இச்செயற்பாடு ஏற்கத்தக்கதல்ல. அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கான நியமனத்தில் தமிழ் பட்டதாரிகளுக்கு பாரிய அநியாயம் இழைக்கப்பட்டுள்ளது. கிழக்கில் எவருக்கும் நியமனம் வழங்கப்படாத நிலையில் யாழ்ப்பாணத்திலும் அப்படியே நிகழ்வது கவலையளிக்கிறது. எனவே இந்தியாவில் இருந்து ஆசிரியர்கள் வரவழைக்கப்படுவதை உடன் நிறுத்தி உள்நாட்டில் உள்ள தமிழ் பட்டதாரிகளுக்கு நியமனம வழங்க வேண்டும். இவ்வாறு அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பரிந்துரைகளுக்கு...

உள்ளதாக காவல்துறை ஊடகப் பேச்சாளர் அஜித் றோகன தெரிவித்துள்ளார். பலவிதமான பரிந்துரைகள் நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டியவை தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

## கண்ணிவெடி...

வழமைபோல் கூடிய குறித்த பணியாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பூட்டியிருந்த நிறுவனத்தின் மீது கற்களையும் வீசினர். வெற்றுச் சோடாப் போத்தல்களால் நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட்ட மதில் சுவரைத் தாக்கினர். அப்பகுதியில் நின்றிருந்த ஓட்டோ ஒன்றின் மீதும் போத்தலை வீசி சேதப்படுத்தினர். சிறிது நேரம் கழித்து நிறுவனத்தின் முன்பகுதியில் இருந்து அகன்று சென்றனர்.

இப்பணியாளர்களது ஒப்பந்த காலம் எதிர்வரும் யூன் மாதம் 31 ஆம் திகதி முடிவடைகிறது. அதற்கு முன்பாக ஒன்றரை மாதங்களுக்கு முன்பாக இவர்கள் பணி நிறுத்தப்பட்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை மேற்படி ஊழியர்கள் யாழ். தொழில திணைக்கள உதவித் தொழில் ஆணையாளருக்குத் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர். அக்கோரிக்கைகள் விபரம் வருமாறு,

01. எமது சேவைக்காலம் எதிர்வரும் 30.06.2012 அன்று முடிவுறுத்துவதாக எம்முடன் ஏற்கனவே ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளது. ஆனால் 31.05.2012 அன்று ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு 12.05.2012 அன்றே எமக்கு உத்தியோக பூர்வ கடிதம் வழங்கப்பட்டுள்ளது. எனவே எமது நிறுவன உடன்படிக்கையின்படி எதிர்வரும் மாதத்திற்கான வேதனம் எமக்கு வழங்கப்படவேண்டும்.

02. கடந்த 2011 இல் இருந்து இன்று வரைக்குமான EPT, ETF செலுத்தப்பட்டதற்கான சீ.படிவங்கள் எமக்குக் கிடைக்கப்பெறவில்லை. இதற்கான பதில் எமக்கு தரப்படவில்லை இதனால் நிறுவனத்தில் எமக்கு திருப்தியில்லை. சரியான பதில் பெற்றுத் தாருங்கள்.

03. இம்மாதம் வேலை முடிவுக்கான அறிவுறுத்தல் விண்ணப்பத்தில் கையொப்பமிடாதவிடத்து இம்மாத வேதனம் வழங்கப்படாது என கூறப்பட்டுள்ளது. இவ் அறிவித்தல் எமக்கு கடந்த மாதமே எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருக்கவேண்டும்.

04. மாதாந்த வேதனத்துடன் விடுமுறைகள் மீதமாகவுள்ள விடுமுறைகளுக்கு வேதனம் வழங்கப்படவேண்டும் என்றும் அந்த மகஜரில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு

# தமிழ் மக்களில் அக்கறை இருந்தால் தெரிவுக்குழுவில் பங்கேற்க வேண்டும்

### ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர்



(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அரசுடன் கொண்டுள்ள இணக்கப்பாட்டின் மூலம் தமிழ் மக்களின் குறைகளை அறிந்து பல்வேறு மக்கள் நல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதுடன், நாட்டில் நிலவிய யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதோடு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியால் 20 வருடங்களுக்கு முன்முன்வைக்கப்பட்ட 13 ஆவது அரசியல் தீர்வுத் திட்டத்தினை தற்சமயம் தமிழ்மக்களுக்கான தீர்வினை நடைமுறைப்படுத்துவதற்காக அனைத்து தரப்பினரிடையே ஓர் சாத்தியமான நிலைமையே காணப்படுவது ஓர் நல்லெண்ண சமிக்ஞையாக நாம் கருதுகிறோம். அதேபோல் எமது மக்கள் மீது அக்கறை கொண்டிருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்ற வேண்டும் என ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட அமைப் பாளர் கந்தசாமி கமலேந்திரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி மேற்கு கரம்பைக்குறிச்சி மதிஒளி விளையாட்டுக் கழகத்தின் 40 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர், சாத்தியமில்லாத வழிமுறைகளைப் பின்பற்றுவதன் ஊடாக எமது மக்களுக்கு எதனையும் பெற்றுவிட முடியாது. ஆகவேதான் எமது தலைவர் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார். கடந்த காலத்தில் எமது தலைவர் விடுத்த சாத்தியமான கோரிக்கைகளை புலித் தலைமைகூட சரிவரப் பயன்படுத்தவில்லை.

இதனால் எமது தேசம் கடும் அழிவுகளைச் சுமந்துள்ளது. தற்சமயம் கிடைத்துள்ள வாய்ப்பினை அனைவரும் தங்களுடைய சுயலாப கொள்கையை விட்டுவிட்டு மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்களாக செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

அங்கு ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி பிரதேச அமைப்பாளரும் சாவகச்சேரி நகர சபையின் எதிர்க் கட்சித் தலைவருமான சூசைமுத்து அலெக்சாண்டர் (சாள்ஸ்) கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் அபிவிருத்திக்கும் அரசியல் தீர்வுக்குமான நல்லதொரு சந்தர்ப்பம் ஏற்படுத்தப் படுத்தப்பட்டுள்ள வேளை அவற்றை தமது சுயலாப அரசியலுக்காக சில தமிழ்க் கட்சிகள் மக்களை திசைதிருப்பி அரசியல் ஆதாயம் தேட முற்படுவதுடன் நாட்டினை மீண்டும் இக்கட்டான சூழ்நிலைக்கு இட்டுச்சென்று இளைஞர் யுவதிகளை தவறான பாதையில் வழிநடத்த முற்படுகிறது. கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை எமது மக்கள் சரிவரப் புரிந்துகொண்டு நடைமுறைக்கு சாதகமான வழிகளைப் பின்பற்ற வேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தென்மராட்சி உதவி பிரதேச செயலர் செல்வி. நவரட்ணம் றஞ்சனா, சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் தியாகராசா தர்சினி, கரம்பைக் குறிச்சி கிராம அலுவலர் வேல்முருகு உட்பட பலர் கலந்துகொண்டனர்.



த ஐலண்ட் - பத்திரிகையின் செய்தியாளர் சி.ஏ.சந்திரபிரேமவினால் எழுதப்பட்ட 'கோட்டாவின் யுத்தம்' என்ற நூல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் மாலை பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் வெளியிடப்பட்டது.

## திருமணத் தரகர் மர்ம மரணம்

கிண்ணியா விவசாய கிராமமான காக்காமுனை பிரதேசத்தில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று அதிகாலை, வீட்டிலிருந்து சுமார் 150 மீற்றர் தூரத்தில் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

5 பிள்ளைகளின் தந்தையான உவைஸ் (வயது - 48) என்பவரே இவ்வாறு மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். இவர் காக்காமுனையில் காணி, வீடு, திருமணம் போன்றவற்றுக்கு தரகராக பணிபுரிபவர் என தெரிவிக்கப்படுகிறது. சந்தேகத்திற்கிடமான இந்த மரணம் தொடர்பில் கிண்ணியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


## கணக்காளர் தேவை

கணக்காளர் பதவிக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

* உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்களும், கணக்காளராக சேவையாற்றிய அனுபவம் உள்ளவர்களும் கணக்கியல் துறையில் பட்டதாரிகளாக உள்ள இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
* கணினி அறிவும், ஆங்கில அறிவும் அவசியமாகக் கருதப்படும். தினசரிப் பத்திரிகையில் கடமையாற்றிய அனுபவசாலிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுயவிபரக் கோவையுடன் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை யாழ்.பிரதான வீதியில், இல.373 இல் உள்ள தினமுரசு அலுவலகத்தில் ஆளணி முகாமையாளரைச் சந்தித்து தமது விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்க முடியும்.

ஆளணி முகாமையாளர்,
தினமுரசு.

இல.373,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


## காளி கோவிலுக்கு தீ வைப்பு

(கொழும்பு)

மாத்தறை திக்குவளை உப்பு களப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள காளி கோயிலை இனந்தெரியாத சிலர் தீயிட்டு எரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சந்தேக நபர்களை கைதுசெய்வதற்காக திக்குவளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை கோயிலுக்கு சென்ற சிலர் கோயிலை உடைக்கப் போவதாக அச்சுறுத்தி விட்டுச் சென்றதாக கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## சாவகச்சேரி - பூநகரி பஸ் சேவை ஆரம்பம்

(சாவகச்சேரி

சாவகச்சேரி, தனங்களப்பு, கேரதீவு ஊடாக பூநகரிக்கு புதிய பஸ் சேவையொன்று இன்று முதல் ஆரம்பமாகின்றது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம், தனங்களப்பு விவசாய சம்மேளனம் ஆகியன அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு விடுத்த வேண்டுகோளுக்கமைய இன்று ஆரம்பிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈ.பி.டி.பி யாழ் மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் இன்று காலை 11.00 மணிக்கு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

## மழை பொழியும் சாத்தியம்

(கொழும்பு)

இலங்கையின் தென்மேற்கு பருவப்பெயர்ச்சி சூழ்நிலை தோன்றிவருவதால் எதிர்வரும் வாரங்களில் கடும் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது.

## போய் வாருங்கள்


(யாழ்ப்பாணம்)



யாழ். அரச அதிபராக பணியாற்றி ஜனாதிபதி செயலகத்திற்கு பதவியுயர்வு பெற்றுச் செல்லும் திருமதி இமெல்டா சுகுமாருக்கு யாழ். செயலக நலன்புரிச் சங்கம் அவரது சேவையைப் பாராட்டி கௌரவித்துள்ளது.

நேற்று யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இச் சேவைநலன் பாராட்டு நிகழ்வில் யாழ். செயலக அதிகாரிகள், பிரதேச செயலர்கள், செயலக ஊழியர்கள், பத்திரிகையாளர்கள் கலந்துகொண்டனர். (பா)

## இலங்கையிலிருந்து முதல் முறையாக சோளம் ஏற்றுமதி



(கொழும்பு)

முதன்முறையாக இலங்கையிலிருந்து உலக நாடுகளுக்கு சோளம் ஏற்றுமதி செய்யப்படவுள்ளது. முதற்கட்டமாக ஆயிரம் மெற்றிக் தொன் சோளம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஏற்றுமதி செய்யப்படவுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் இதன் உத்தியோகபூர்வ நிகழ்வு 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

விவசாயத் துறை அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன கைத்தொழில் மற்றும் வாணிபத் துறை அமைச்சர் றிசாட் பதியுதீன் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

முதற்கட்டமாக கனடா மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளுக்கு 1000 மெற்றிக் தொன் ஏற்றுமதி செய்யப்படவுள்ளன. இவ்வருடத்திற்குள் 10 ஆயிரம் மெற்றிக் தொன் சோளத்தினை ஏற்றுமதி செய்ய இணக்கம் காணப்பட்டுள்ளது.

## பதவிக்காலத்தை மேலும் நீடிக்க கோரிக்கை

(கொழும்பு)



ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பதவிக் காலத்தை மேலும் நீடிப்பதற்கு ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.


நவநீதம்பிள்ளையின் பதவிக் காலத்தை மேலும் இரு ஆண்டுகள் நீடிப்பதற்கு அனுமதி வழங்குமாறு பான் கீ மூன் ஐ.நா பொதுச் சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2008ஆம் ஆண்டில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளராக பதவி ஏற்றிருந்த நவநீதம்பிள்ளையின் பதவிக்காலம் இவ்வாண்டு இறுதியுடன் முடிவடையவுள்ளது. இந் நிலையில், மேலும் இரு ஆண்டுகளுக்குப் பணியாற்ற நவநீதம்பிள்ளை இணக்கம் தெரிவித்துள்ளதாக பான் கீ மூனின் பணியகம் அறிவித்திருந்தது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளராகப் பதவியேற்பதற்கு முன்னர் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த இவர், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அமர்வின் சட்டவாளராக பணியாற்றியிருந்தார்.

## மரண அறிவித்தல்

### பரராஜசிங்கம் வாரித்தம்பி



மீசாலையைப் பிறப்பிடமாகவும், அக்கரைப்பற்றை வதிவிடமாகவும், தற்போது இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட **பரராஜசிங்கம் வாரித்தம்பி** அவர்கள் 14.05.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரராஜசிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற ஞானகுட்டி காசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவயோகம அவர்களின் அன்புக் கணவரும், சொரூபா, சுசீலன், இந்து, சங்கீதா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தங்கராஜா, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், விநாயகமூர்த்தி, சுதா, செல்வராஜா, பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், வினுஷன், விஷாகரன், சியாம், சங்கரன், கொலின், கெவின், சஜின், ஹரிஷன், ஜீவனா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (16.05.2012) இந்தியா தருமபுரியில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுசீலன் (இந்தியா) - 0091 - 9741055266
சுதா (இந்தியா) - 0091 - 9845195656
சொரூபா (கனடா) - 0019 - 052759143
ராஜா (லண்டன்) - 0044 - 07825005269
இந்து (லண்டன்) - 0044 - 07557237824
சங்கீதா, பிரபாகரன் (லண்டன்) - 07903521434

தகவல்:
பிள்ளைகள்

(C/170)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மே 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.